www.tamilarangam.net


# களத்தில்

எமது சுதந்திர த்தை நாமே போராடி வென்றெடுக்கும் மனோ திடமும் நம்பிக்கையும் உறுதிப்பாடும் எங்க ளிடம் உண்டு.

- தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2027 மடங்கல் 21 (04.09. 1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் அன்பளிப்பு: 60


# "தமிழர்களின் சுதந்திர தாயகத்திற்காக போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தமது கருத்துக்களைக் கூற உரிமையுண்டு"

"சிறிலங்கா தடைசெய்யினும் பிரித்தானியாவில் விடுதலைப் புலிகளின் அரசியல் நடவடிக்கைகளை தடைசெய்யமாட்டோம்"

- பிரித்தானிய வெளிவிவகார செயலாளர்



முல்லைப்படைத்தளத் தாக்குதல் திட்டத்தை நெறிப்படுத்தும் எம் தலைவன்

"தமிழர்களின் சுதந்திர தாயக த்திற்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தமது கருத்துக்களை எடுத்துக் கூறும் உரிமையுண்டு" எனக் கொழும்பிலுள்ள, இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் இல்லத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பிரித்தானிய வெளிவி வகார செயலாளர் திரு. மல்கம் றி∴ப்கின்ட் தெரிவித்தார்.

அத்துடன், "அரசியல் சுதந்திரத்தை மதிக்கும் நாம், சிறிலங்கா விடுதலைப் புலிகளைத் தடை செய்தாலும்கூட, விடுதலைப் புலிகளின் அரசியல் நடவடிக்கைகளுக்கு எவ்வித தடையினையும் மேற்கொள்ள மாட்டோம்" எனப் பகிரங்கமாக உறுதியும் அளித்துள்ளார்.

அவர் மேலும், "இலண்டனில் தமது அரசுகளுடன் அரசியல் வேறுபாடுகள் உள்ள பல மக்கள் பல நாடுகளில்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## அராலிக்கடலில் மீனவர்கள் பலர் இராணுவத்தால் கொடூரமாக கொலை

யாழ்ப்பாணம் அராலிக் கடலில் மீன் பிடிக்கையில், ஆடி 27 அன்று சிறிலங்காக் கடற் படையினால் காரணமின்றிக் கைதுசெய்யப்பட்ட பல மீனவர்கள், படையினரால் கொடூரமான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொல்லப் பட்டுள்ளனர். இம் மீனவர்கள் கைது செய்யப்பட்டமையை அறிந்ததும், உறவினர்கள் அங்குள்ள இராணுவ முகாமில், கைது செய்யப்பட்டவர்களின் விபரங்களைக் கூறியதுடன், அவர்கள் அப்பாவிகள் எனவும் எடுத்துக் கூறினர். அம் மீனவர்களைத் தாம் கைது செய்யவில்லை எனக்கூறிய இராணுவம், வந்த உறவினர்களைத் திருப்பியனுப்பி விட்டது. ஆனால், இராணுவம் தாம் கைதுசெய்தவர்களைப் பலவிதமான சித்திரவதைக்குட்படுத்தி கொன்று, கடலில் வீசியுள்ளது. இவர்களின் உடல்கள், கடந்த மாதம் 29ஆம் திகதி, பழுதடைந்த நிலையில் அராலிக்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

# மட்டு-பொலநறுவை எல்லைப் பகுதியில் வெற்றிகரத் தாக்குதல்கள்

## குடாப்பொக்கனைத் தாக்குதல் 27 பொலிசார் பலி

சிறிலங்காப் படையினரின் கடுமையான ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள பகுதிகளிலும், விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிதீவிர மடைந்து வருகின்றன. ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதியன்று மட்டு - பொலநறுவை எல்லைப்பகுதியில் குடாப்பொக்கனை எனும் பகுதியில் வைத்து காலை 6 மணியளவில் புலிவீரர்கள் நடாத்திய அதிவேகத் தாக்குதலில் 27 சிறிலங்காப் பொலிசார் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். மிகுதி 13 பொலிசாரும் படுகாயங்களுடன் காடுகளுக்குள் தப்பி ஓடி விட்டனர். ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிசாரே இத்தாக்குதலில் அகப்பட்டனர். இவ் வெற்றிகரத் தாக்குதலில் பல ஆயுதங்கள், ரவைகள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இத் தாக்குதலில், லெப். அகஸ்ரின் வீரச்சாவடைந்தார். இவ் வீரவேங்கைக்கு எமது வீரவணக்கங்கள்.

## பொறவளையில் தாக்குதல் 7 படையினர் பலி

மட்டு மாவட்டம் பொறவளைப் பகுதியில் தமது வழமையான தேடியழித்தல் நடவடிக்கைக்கு முகாமில் இருந்து வெளியே வந்த சிறிலங்கா இராணுவத்தினர் புலிவீரர்களின் வழிமறிப்புத் தாக்குதலுக்கு இலக்காகினர். இத் தாக்குதலில் 5 படையினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனைய இராணுவத்தினர் காயமடைந்தவர்களையும் தூக்கிக் கொண்டு ஓடித் தப்பித்துக் கொண்டனர். இத்தாக்குதலில் படுகாயமடைந்த

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## பாலியல் வன்முறைகள் மூலம் இனத்தூய்மையை அழிக்கும் முயற்சிகளில் சிறிலங்கா இராணுவம் தீவிரம்

யாழ் குடாநாட்டுக்குள் சிறிலங்கா இராணுவத்தின் ஆயுத முனையிலான அட்டகாசங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

தமிழ்ப் பெண்கள் மீது, பாலியல் வன்முறைகளை மேற்கொள்வதன் மூலம் இனத்தூய்மையை அழித்து, கலப்புச் சமுதாயம் ஒன்றைத் தோற்றுவிக்கலாம் எனும் பயங்கரமான சதித்திட்டம்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

புலம்பெயர்ந்த தமிழீழ மக்களின் புனர்வாழ்வு நிதிக்காக
தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும்

புனர்வாழ்வுக் கலைமாலை

நிகழ்ச்சிகள்

- அமைதி வணக்கம்
- எழுச்சி நடனங்கள்
- நாடகம் (குந்த ஒரு குடிநிலம்)
- அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு
- புரட்சி இசையமுதம்
- சிறப்புரை

21.09.96 சனிக்கிழமை மாலை 4 மணி

Cultureel centrum. Bleyenhoevelaan 2, VELSEN-NOORD
Tel: 0251 - 499 300
(Beverwijk புகையிரத நிலையத்திற்கு அருகில்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - நெதர்லாந்து
Tel: 072 - 564 4442



போரினால் பாதிக்கப்பட்ட தாய்மார்களின் புனர்வாழ்வு நிதிக்காக
தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும்

புனர்வாழ்வுக் கலைமாலை

நிகழ்ச்சிகள்

தேசியக் கொடியேற்றல்
அமைதி வணக்கம்
மங்கள விளக்கேற்றல்
எழுச்சி கானங்கள்
(பேர்ண் கலை பண்பாட்டுக் கழகம்)
நாடகம்
சிறப்புரை

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு கல்விச்சேவை ஆதரவில் சைவத் தமிழ்ச் சங்கம் நடாத்திய பொதுப் பரீட்சையில் வோ மாநிலத்தில் தோற்றி சித்தி பெற்ற மாணவர்களுக்கு இந் நிகழ்ச்சியில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

21.09.96 சனிக்கிழமை மாலை 4 மணி

Salle de l'aula de Bethusy, Au. Bethusy 7, 1007 Lausanne

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - சுவிஸ் கிளை


## தமிழர்களின் சுதந்திர தாயகத்திற்காக .......

அது ஒரு அமைதி வழியிலான பேச்சுவார்த்தை மூலமே தோன்ற முடியுமென வலியுறுத்த விரும்புகிறேன். பிரித்தானியாவில், நாங்கள் சட்டங்களின்படியே செயற்பட முடியும். சட்டங்களின் செயற்பாடு என்பது ஒவ்வொருவரதும் தனிப்பட்ட முடிவுகளின் அடிப்படையிலேயே எடுக்கப்படலாமே தவிர, அமைப்புக்களின் செயற்பாடாக அவற்றைக் கருதி சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது. ஏனென்றால், அமைப்புக்கள் மக்களால் உருவாக்கப்படுபவை. ஆகவே, நாங்கள் ஒரு அமைப்பை நீதிமன்றத்திற்கு முன் நிறுத்த முடியாது" என்றார்.

மேலும், "பயங்கரவாதம் என்பது, சர்வதேச ரீதியான தீயசக்தி. சட்டத்தின் மூலமான கட்சியில் நம்பிக்கையுள்ள எல்லா சனநாயக அரசுகளும் - கூட்டு ஒத்துழைப்பு மூலம் எங்கு பயங்கரவாதம் தலைதூக்கினாலும் - அதனை இல்லாமல் செய்வதற்கான பொறுப்பைக் கொண்டிருக்கின்றன. பயங்கரவாதத்தை இல்லாமல் செய்வதற்கான சர்வதேச ஒத்துழைப்பினைப் பெறுதல் என்பது, கொழும்பின் முயற்சியாக உள்ளது. ஆனால், தனிப்பட்ட முறையில் பயங்கரவாதத்தைச் செய்தால் தனிப்பட்ட முறையில் மட்டுமே அவர்கள் எம்தேசத்தில் தண்டிக்கப்படுவார்கள்" என்றார்.

இவ் மாநாட்டில் பேசிய சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், விடுதலைப் புலிகள் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை எனவும் பிரித்தானியாவிலும் மற்றைய மேற்கத்திய நாடுகளிலும் இருந்து புலம்பெயர்ந்த கூட்டத்தினர் அனுப்பும் நிதி உதவி கொண்டே விடுதலைப் புலிகள் கெரில்லாத் தாக்குதல்களை நடத்துகின்றனர் என்றார். அத்துடன் சிறிலங்கா, பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடிக்கொண்டு சிறுபான்மை மக்களின் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்கிறது என வர்ணித்தார். மேலும், அடுத்த ஆண்டில் தமிழ் சிறுபான்மையினருக்கு அதிக அளவிலான சுயாட்சியைக் கொடுக்கக்கூடிய அதிகாரப் பரவலாக்க ஆலோசனைகளைத் தமது அரசு முன்வைக்கவுள்ளதாகவும் லக்ஸ்மன் கதிர்காமர் சரடு ஒன்றை எடுத்துவிட்டுள்ளார்.

பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளரின் பதில், சிறிலங்கா அரசுக்கும், இராணுவவாதிகளுக்கும் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்திருப்பதாக ஓர் ஆசிய இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார். ✷

3 ம் பக்க தொடர்ச்சி

## தமிழர் படையின் பலம்......

கொக்கரித்துக் கொண்டிருக்கின்ற ஒரு சூழலிலே, முல்லைத்தீவிலே புயலாகப் புகுந்த எம்மவர் எதிரிக்குப் பலத்த அடியினைக் கொடுத்ததன் ஊடாக உண்மையினை உலகிற்கு எடுத்துக் கூறியுள்ளார்கள். எம்மை இராணுவ ரீதியில் அழித்தொழிக்க முடியாது என்பதனைத் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

அமுக்கு, அமுக்கு, நீ நன்றாக அமுக்கு, அமுக்க அமுக்க அழுத்தம் கூடும். அந்த அழுத்தத்தின் அடிப்படையிலே வெடிப்புத்தான் நிகழும் என்ற வகையிலே அங்கு போராளிகள் புதிதாகக் கிளம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், எதிரியின் தொடர்ச்சியான - இந்த இராணுவ ரீதியிலான தாக்குதல்களை முறியடிக்க வேண்டுமானால் - "வெறும் கை முழம் போடாது" என்று சொல்வார்கள், நாமும் வெறும் வாய்ப் பேச்சினால் அதைச் சாதிக்க முடியாது. தமிழர்கள் படைபலம் அதிகரிக்கப்பட்டேயாக வேண்டும். தமிழர்கள் படைபலம் அதிகரிக்கப்படுவதன் ஊடாகவேதான் எம்மீது திணிக்கப்படுகின்ற ஒடுக்குமுறைகளை தகர்த்து, "தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள்" என்ற உரிமையினை நிலைநாட்டமுடியும். சிங்களப் பேரினவாதம் கூறுகின்றது போல, சிங்கள தேசம் என்பது பாரிய மரம் இந்த மரத்தினைச் சுற்றிப் படர்கின்ற கொடிகளாக - தமிழர்கள் சிறுபான்மையினராக - இரண்டாந்தரப் பிரசைகளாக இருக்க வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்ப்பது போல இருந்துவிடுவது, எமக்குரிய வேலையல்ல. எனவே தமிழர்களுடைய படைபலத்தை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியவர்களாகத் தமிழர் தேசம் இருக்கின்றது. தமிழர்களுடைய படைபலம் அதிகரித்தல் என்பது, எவ்வாறு நடைபெறப்போகின்றது. அது இரண்டு முனைகளிலேதான் நடைபெறமுடியும்.

ஒன்று, **தமிழர்களுடைய படையின் ஆட்பலம் அதிகரிக்க வேண்டும்.**

இரண்டாவதாக, **தமிழர்களுடைய படையின் ஆயுதபலம் அதிகரிக்க வேண்டும்.** அதாவது **படைக்கலச் சக்தி அதிகரிக்க வேண்டும்.**

ஆட்பலம் அதிகரிப்பு என்பது, தாயகத்திலே வாழ்கின்ற மக்கள் எதிரியின் அமுக்கத்தினால் கிளர்ந்தெழுந்து போராட்டத்துடன் இணைந்து கொண்டிருக்கின்றார்கள். நாம் எல்லோரும் புலம்பெயர்ந்து இங்கு வாழ்வது, **ஆட்பல அதிகரிப்பு** என்ற அடிப்படையிலே போராட்டத்திற்கு ஒரு பலவீனமான சூழ்நிலையைக் கொடுத்திருக்கின்றது என்பதனையும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். அந்தப் புலம்பெயர்ந்து வாழ்கின்ற ஒரு சூழலிலே, **ஆட்பல ரீதியிலே எமது போராட்டத்திற்கு ஏற்பட்ட பலவீனத்தினை நாம்** எவ்வாறு ஈடுகட்டப் போகின்றோம் என்பதனை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்:

அதனை ஒரேயொரு வழியின் ஊடாகத்தான் மேற்கொள்ள முடியும். எம்மால் இந்த நிதி உதவியினைப் பாரிய அளவிலே அள்ளி வழங்குவதன் ஊடாக எதிரிக்குச் சமமாக, எதிரியை முறியடிக்கக் கூடிய படைக்கலசக்தியினையும், நவீன ஆயுதங்களையும் நாம் பெற்றுக் கொள்வதற்கு அது வசதியளிப்பதாக இருக்கும். தமிழர் படைபலம் அதிகரிப்பு என்பது, அந்தப் படையினைப் பராமரிக்கின்ற செயற்பாட்டினைக் குறித்து நிற்கின்றது. அந்தப் படையினைப் பராமரிக்க வேண்டும். நோய்வாய்ப்படுகின்ற, காயப்படுகின்ற போராளிகளைப் பராமரிக்க வேண்டும். இது பெருந்தொகையான செலவுடன் தொடர்புபட்டதாக இருக்கின்றது. எனவே, நாம் அனைவரும் எமது மனச்சாட்சியின் முன் தெளிவாக ஒன்றை உணர்ந்து கொண்டால் - நாம் இங்கு புலம்பெயர்ந்து வாழ்கின்ற காரணத்தினால் - எதிரியின் ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான ஆட்பல அதிகரிப்புக்கு எம்மால் பங்களிக்க முடியாதிருக்கின்ற காரணத்தினால் - எதிரியின் ஒடுக்குமுறையை முறியடிப்பதற்குத் தேவையான ஆயுதபல சக்தி, படைக்கல அதிகரிப்புக்கு, போராளிகளின் மருத்துவச் செலவுக்குத் தேவையான நிதியினை அள்ளி வழங்குகின்றவர்களாக நாம் இருக்க வேண்டும். எமது **வருமானத்திலே குறைந்தது 10 வீதத்தினை** தேசத்திற்காக அளிக்கின்றவர்களாக எம்மை நாம் மாற்றிக் கொள்ளவேண்டும். அது எதிரியினுடைய திட்டமிட்ட செயற்பாட்டை முறியடிப்பதற்கு உறுதுணையாக இருக்கும் என்கின்ற விடயத்தினையும் கூறி,

இரண்டாவதாக, எதிரி சர்வதேச அரங்கிலே நடாத்துகின்ற அனைத்துப் பிரச்சாரங்களையும் முறியடிப்பதற்குத் தேவையான, **"தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் அவர்களுக்கு வடக்கு-கிழக்கு என்ற பாரம்பரிய பிரதேசமுண்டு. தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரிததுடையவர்கள்"** என்கின்ற கோரிக்கைகளைச் சர்வதேச அரங்கிலே எடுத்து முன்வைத்து அதற்கான அங்கீகாரத்தினைப் பெறுவதற்கும் - விடுதலைப் புலிகள் இயக்கத்தினை விடுதலை இயக்கமாக அங்கீகாரம் பெறுவதற்குமான அரசியல் செயற்பாடுகளை நாம் மேற்கொள்ள வேண்டும். மூன்றாவதாக, தளத்திலே மக்களுக்கு எதிரி கொடுக்கின்ற துன்பங்களை முறியடிக்கக் கூடிய வகையிலே சர்வதேச ரீதியில் அழுத்தங்களைக் கொடுத்து, சர்வதேச சட்டங்களிலும் சர்வதேச சாசனங்களிலும் கைச்சாத்திட்டுள்ள சிறிலங்கா அரசு, மக்களுக்கு விரோதமாக உணவுத் தடையினையோ, நீர்த்தடையினையோ, அல்லது மருந்துத் தடையினையோ விதிக்க முடியாது; இதனை மீறுகின்ற சிறிலங்கா அரசு, **'சர்வதேச சாசனங்களை மீறுகின்றது'** என்ற அடிப்படையிலே சர்வதேச அழுத்தங்களைக் கொடுப்பதன் ஊடாக, எங்களுடைய சொந்த அமைப்புக்களின் ஊடாக, உள்ளூர் புனர்வாழ்வு அமைப்புக்களின் ஊடாக நிதி உதவி வழங்கி, தேவையான புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் எதிரி வகுத்திருக்கின்ற மும்முனைத்திட்டங்களை நாமும் மும்முனைகளிலே முறியடிப்பதன் ஊடாக எமது விடுதலையை விரைவில் வென்றெடுக்க வேண்டும்.

**அன்பான மக்களே!**

நாம் ஒரு விடயத்தினைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இன்று சிறிலங்கா அரசு செய்திருக்கின்ற காரியம் என்னவென்றால், நிச்சயமாக நட்டமடையப் போகின்ற ஒரு வியாபாரத்திலே தன்னுடைய எல்லா வளங்களையும் விற்று, அதில் வந்த வருமானத்தைக் கொண்டு முதலிட்ட ஒரு வர்த்தகரைப் போல, நிச்சயமாகத் தோல்வியடையப் போகின்ற ஒரு போரிலே தன்னுடைய எல்லா வளங்களையும் கொட்டிக் குவித்திருக்கின்றது. அது குறுங்காலத்தில் வெற்றி அடையலாம் என்று எண்ணியது. ஆனால், குறுங்காலத்திலும் அது வெற்றியடையப் போவதில்லை. நீண்டகாலத்திலும் வெற்றியடையப் போவதில்லை. ஒட்டுமொத்தமாக, விடுதலைப் புலிகளின் உக்கிரமான போர் நடவடிக்கையினால், சிறிலங்கா அரசு துவண்டு விழும்போது, **தமிழீழத் தேசம் உதயமாகின்ற நிலை உருவாகும்.** அதற்கு அனைவரும் எம்மால் இயன்ற அனைத்து நடவடிக்கைளையும் நாம் மேற்கொள்ள வேண்டும். இது எமக்குரிய கடமை.

**இது எம்முடைய போராட்டம் எமக்காகவும் சேர்த்துத்தான் அங்கே போராட்டம் நடைபெறுகின்றது.**

**நாம் எங்கிருந்தாலும் தமிழர் எங்கிருந்தாலும் எமது தேசம் தமிழீழம்.** அந்தத் தமிழீழத் தேசம் உதயமாவதற்கு எம்மாலான அனைத்துச் செயற்பாடுகளையும் நாம் என்றும் செய்வோம்! செய்வோம்! செய்வோம்!"

நன்றி.

வணக்கம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.

என்றுகூறி, தனதுரையை நிறைவுசெய்து கொண்டார். ✷



www.tamilarangam.net

www.tamilarangam.net





## ஆச்சரியமானதல்ல

தமிழக மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் இலங்கைத் தமிழர்களை வெறுக்கவில்லை என, ஈழத்தமிழர் பாதுகாப்பு பிரதான மையத்தைச் சேர்ந்த இளங்கோவன் கூறியுள்ளது, ஒன்றும் ஆச்சரியமோ அன்றி அதிர்ச்சியோ தரக்கூடியது அல்ல. மாறாக, ஆதரிக்கப்படவில்லை – வெறுக்கின்றார்கள் என்று கூறுவார்களானால், அது ஆச்சரியப்படக்கூடிய விடயமாக இருந்திருக்கும். ஏனெனில் தமிழக மக்களும் ஈழத்தமிழ் மக்களும் வரலாற்று ரீதியான பாரம்பரிய இணைப்பைக் கொண்டவர்கள். மொழியில் இருந்து, கலை கலாச்சாரம் பண்பாடு என அவர்களின் உறவுகளால் பல நூற்றாண்டு காலமாக இணைக்கப்பட்டவர்கள். இவர்கள் ஒருவரை ஒருவர் வெறுப்பதென்பதும் புறந்தள்ளி வைக்க முனைவது என்பதும் இயலாத ஒன்றாகும். இவர்களின் உறவானது, தாயும் பிள்ளையும் உறவு போன்றது. சகோதரர்களுக்கு இடையிலான நெருக்கமானதும் ஆகும்.

இலங்கையில் தமிழ் மக்கள், சிங்களப் பேரினவாதத்தினால் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட போதெல்லாம் தமிழக மக்கள் உணர்வுபூர்வமாகத் தமது ஆதரவை ஈழத்தமிழ் மக்களுக்குத் தெரிவித்தே வந்துள்ளனர். அத்தோடு, தமிழக முதலமைச்சர்களும் ஈழத்தமிழ் மக்களை ஆதரித்தே வந்தனர். ஆனால், தமிழக மக்களின் உணர்ச்சிபூர்வமோ, கவலையோ அன்றி ஆர்வமோ அரசியல்வாதிகள் பக்கத்தில் குறைவாகவே இருந்தது. அவர்களிடம் இது குறித்து கவலை இருந்திருப்பினும் கூட, அரசியல் ரீதியான செயற்பாடுகள் குறைவாகவே இருந்தது. இவ் அரசியல் அபிலாசைகள், ஒட்டுமொத்தமாக, இலங்கைத் தமிழ் மக்கள் விவகாரத்தினை மறக்கச் செய்ததோடு, சில சமயம் எதிராகச் செயல்பட வைத்ததும் உண்டு. இந்தவகையில் ஜெயலலிதா தலைமையிலான ஆட்சி சிறந்த உதாரணமாகும்.

தமிழக மக்களின் உணர்வுகளை மழுங்கடித்து, தமது ஆதிக்க அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கு ஜெயலலிதா முனைந்தார். ஆனால், தமிழக மக்கள் ஈழத்தமிழர் மேல் கொண்டிருந்த பற்று? இல்லாது ஒடிந்து போய்விடவில்லை. இதற்கு ஓர் உதாரணமாகக் கூறக்கூடியது – யாழ். குடாநாட்டின் மீது சிறிலங்கா இராணுவம் படையெடுத்தபோது – தமிழக இளைஞன் ஒருவர் தீக்குளித்து மரணமடைந்த சம்பவம் ஒன்றாகும். அதாவது, ஜெயலலிதா ஆட்சியில் இனஉணர்வு மழுங்கடிக்கப்படுவதற்கான முயற்சிகள் இருந்ததே ஒழிய, அது மழுங்கடிக்கப்படவில்லை. இதனால், ஆதரவை வெளிப்படுத்துவோருக்கு எதிரான மிரட்டல்கள் பலமாக இருந்தன. இதன் காரணமாகவே, யாழ். குடாநாட்டின் மீது சிங்கள இராணுவம் படையெடுத்தபோது–ஆற்றாமை காரணமாக இளைஞர் தற்கொலை செய்யவேண்டி வந்தது. இல்லாவிடில், அந்த இளைஞனின் மரணம் – தனது இனஉணர்வை உலகிற்கு மட்டுமல்ல – தமிழகத்தில் ஆட்சியில் இருந்தவர்களுக்கு உணர்த்துவதாகவும் கூட இருந்தது.

ஆனால், தற்போழுது நிலைமை ஓரளவு மாற்றம் கண்டதும், தமிழக மக்கள் தமது உணர்வுகளை வெளிக்காட்டத் தொடங்கியுள்ளனர். அகதிகளாகச் செல்லும் தமிழ் மக்களுக்கு அவர்கள் ஆதரவு அளிக்க முன்வந்துள்ளனர். தமிழக அரசு, அகதிகள் விடயத்தில் பொறுமையுடன் நடந்து கொள்வதை உணர முடிகின்றது. இந்த நிலையே இனஉணர்வின் யதார்த்தத்தைப் பிரதிபலிப்பதாகும். உலகிலுள்ள தமிழ் மக்களிற்கு நாடொன்றும் இல்லை என்பது போல, எந்தச் சுதந்திர அரசிலும் அவர்கள் பெரும்பான்மையானவர்களாக இல்லையென்பதும் ஒரு கவலை அளிக்கும் விடயம்தான்.

ஆனால், உலகிலுள்ள ஒடுக்கப்படும் இனங்களில் தமிழர்கள் பலம் மிக்கவர்களும், முக்கியமானவர்களும் ஆவர். ஆகையினால், இந்த இனம் உலகின் ஒருபகுதியில் ஒடுக்கப்படும்போது – அதற்குக் குரல் கொடுக்க வேண்டியது – உலகத் தமிழர்களில் பெரும்பான்மையோடு வாழும் தமிழகத்தின் கடமையாகும். இதனைத் தமிழகம் செய்யத் தவறும் பட்சத்தில், உலகின் பல பாகத்திலும் பரந்து கிடக்கும் தமிழினம் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதுபோகும். அதாவது, உலகில் தமிழ் இனத்தைவிட மிகச் சிறிய இனங்களால், ஆட்சி அதிகாரமோ அன்றி நாடோ பெற்றுள்ள இனங்களால் கூட தமிழர்கள் பாதிப்புக்குள்ளாவது தவிர்க்க முடியாதுபோகும். அதாவது, தமிழகம் குரல் கொடுக்கவிட்டால், ஒடுக்குமுறையில் ஈடுபடும் இனங்களுக்கு அது உற்சாகம் அளிக்கும் விடயம் ஒன்றாகப் போய்விடும்.

இந்த நிலையில், இன்று தமிழகம் ஈழத் தமிழ்மக்கள் மீது அக்கறையை வெளிக்காட்டத் தொடங்கியிருப்பது, இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் ஒன்றேயாகும். இது ஒடுக்குமுறையில் சிறிலங்கா அரசு கொண்டிருந்த ஏகபோகத்திற்குச் சிறிதளவாவது முட்டுக்கட்டை போடக்கூடியது மட்டுமல்ல, தமது உரிமைகளுக்காகப் போராடும் மக்களுக்கு உற்சாகம் அளிக்கக்கூடியதும் ஆகும். ✷

# "தமிழர் படையின் பலம் அதிகரிக்கப்பட உதவவேண்டியது நமது மிகமுக்கிய கடமை"

### - விடுதலைப் புலிகளின் நோர்வே பிரதிநிதி

லண்டனில் 17-08-96இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் (பிரித்தானியக் கிளை) கலை, பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட எழுச்சி கானங்கள்–96 எனும் இசைநிகழ்ச்சியின்போது, சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் நோர்வேக் கிளைப் பிரதிநிதி திரு. சர்வே அவர்கள் கலைஞர்களைப் பாராட்டி, தாயகத்தின் இன்றைய நிலைமைகள் குறித்து உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"நாம் எமது கண்களைச் சற்று மூடிக்கொண்டால், எமது கற்பனைகளைத் தாயகம் நோக்கி திருப்புவது அவ்வளவு கடினமான விடயமாக இருக்காது; அண்மையில் நடந்த சில நிகழ்வுகளை நாம் எமது கற்பனையிலே நினைத்துக் கொண்டால், எதிரி வீசுகின்ற எறிகணைகள் எம்மீதும் விழுந்திருக்கும். இன்று இங்கு எம்மைச் சூழ்ந்திருக்கின்ற இந்த ஒளி இருந்திருக்காது. எங்கும் இருளாக இருந்திருக்கும். மக்கள் வாழ்வதற்குரிய வசதிகளற்று, மக்கள் வீதியோரங்களிலே, வாழ்கின்ற நிலைமினை நாங்கள் உணர்ந்திருப்போம். எதிரி வீசுகின்ற எறிகணை எம் கண் முன்னாலேயே எம்மில் பலரை கொன்றொழித்திருக்கும். எதிரி வீசுகின்ற குண்டு எம் கண்முன்னாலேயே எம்மில் பலரைச் சிதைத்திருக்கும். எம் கண் முன்னாலேயே உயிர்கள் துடித்திருக்கும். அந்த உயிர்களைக் காப்பாற்றுவதற்குரிய வைத்தியசாலைகளை நோக்கி நாம் ஓடிச் சென்றால், அங்கே வைத்தியசாலைகளிலே வெறும் கட்டில்களைத் தவிர எதுவுமே இருந்திருக்காது.

கிளிநொச்சி நகரமே முற்றுமுழுதாக இடம்பெயர்ந்த அந்தக் காட்சியினை எமது மனக்கண்முன்னால் கொண்டுவருவது எமக்குக் கடினமாக இருக்காது. நாம் நன்கு சிந்தித்துப் பார்த்தால், எமது மக்கள் எவ்வளவு வேதனைகளுக்கு மத்தியில், எவ்வளவு சோதனைகளுக்கு மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலே சந்திரிகா அரசு நடத்துகின்ற இன ஒழிப்பு நன்கு திட்டமிட்ட வகையிலே, மூன்று திட்டங்களை ஒருங்கிணைத்த வகையிலே, நடைபெற்றுக்கொண்டிருப்பதனை நாம் மனதிலே கொள்ள வேண்டும்.

முதலாவதாக, தமிழ் மக்களின் பிரதேசத்தை தன்னுடைய இராணுவ பிடிக்குள் கொண்டுவந்து, தமிழ் மக்களின் முன்னணிப் படையாகிய தமிழீழ விடுதலைப் புலிகளை, ஒரு தாழ்நிலைப் போரினை நடத்தக்கூடிய ஒரு இயக்கமாக ஆக்கி, தான் விரும்புகின்ற சிங்களப் பேரினவாதத்தினுடைய தீர்வினை, தமிழ் மக்களிடையே திணித்து விடுவதற்குத் தேவையான இராணுவ நடவடிக்கைகளை தன்னுடைய படை பலத்தினை அதிகரிப்பதன் ஊடாகச் சிறிலங்கா அரசு செய்துவருகின்றது. ஆட்பலத்தினை அதிகரிக்கின்றது. ஆயுத பலத்தினை அதிகரிக்கின்றது. 1995 ஏப்ரல் மாதத்தின் பின்னர் வாங்கிக் குவிக்கப்பட்ட ஆயுதங்கள் அதற்கு முன்னர் 10 ஆண்டுகளுக்குள் வாங்கப்பட்ட ஆயுதங்களை விட 10 மடங்கு கூடுதலானது என்று கூறப்படுகின்ற அளவுக்கு கோடி கோடி ரூபாவாகச் செலவழித்து ஆயுதங்களை வாங்கிக் குவித்திருக்கின்றது. எமக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக, இராணுவ ரீதியில் எம்மை அழித்து ஒழிப்பதன் ஊடாக, சிங்கள பௌத்த மேலாதிக்கம் தருகின்ற ஒரு தீர்வினை ஏற்றுக்கொள்ள வைத்து, உரிமைக்காக நிமிர்ந்து பேசமுடியாதவர்களாக்கி, எம்மைத் தலைகுனிந்து நிற்கவைப்பதற்கு இந்த இராணுவ நடவடிக்கையினை ஒரு புறத்தில் மேற்கொள்கின்றது.

இரண்டாவதாக, இன்னொரு புறத்தில் சர்வதேச அரங்கிலே, "தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். நாட்டிலே இருப்பது தமிழர்களின் பிரச்சினையல்ல, அங்கே விடுதலைப் புலிகளின் பயங்கரவாதமே நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. விடுதலைப் புலிகள் சமாதானத்தில் அக்கறையற்றவர்களாக இருக்கின்றார்கள்; அவர்கள் சமாதானத்திற்கு என்றுமே வரப்போவதில்லை; அவர்களைச் சமாதானத்திற்கு கொண்டு வரவேண்டுமானால் – அவர்களைப் பலம் குறைந்தவர்களாக – மிகப் பலம் குறைந்த ஒரு அமைப்பாக மாற்றவேண்டும். அந்த மாற்றத்திற்கு இராணுவ நடவடிக்கை ஒன்றினையே மேற்கொள்ள வேண்டும். எனவே சமாதானத்திற்கான போரினை நாம் நடாத்திக்கொண்டிருக்கிறோம்" என்று கூறி, சர்வதேச அரங்கிலே ஒரு பிரச்சாரத்தினை நடாத்திக்கொண்டிருக்கிறது.

சர்வதேச அரங்கிலே நடாத்துகின்ற இந்தப் பிரச்சாரத்தினூடாக, தமிழ் மக்களினுடைய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் நியாயங்களை மழுங்கடிப்பதன் ஊடாக, தமிழர்கள் தங்களுடைய சுயநிர்ணய உரிமைகள் அடிப்படையிலே தமக்கென்றொரு தனிநாட்டினை அமைக்கின்ற அந்த உரிமையினை மறுத்துவிடுவதற்காக, இன்று எதிரி திட்டமிட்டு சர்வதேச அரங்கிலே விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பல அவதூறுகளை பரப்பும் ஒரு பிரச்சார யுத்தத்தினை நடாத்திக்கொண்டிருப்பதனையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

மூன்றாவதாக, சிறிலங்கா அரசு, தாயகத்திலே வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான உணவு–மருத்துவ மற்றும் குடிநீர் வசதிகளை வழங்க மறுத்து விடுவதன் மூலம் மக்களை மிகுந்த துன்பத்திற்குள்ளாக்கி, மக்களுக்கு மிகக் கொடுமைகளை ஏற்படுத்துகிறது. இதனால் மக்களைக் களைப்புற வைத்து, போராட்டத்திலே இருந்து அந்நியப்படுத்தி, அப்போராட்டத்திலிருந்து மக்களைத் தன்னுடைய பக்கம் இழுக்கின்ற வகையிலே எதிரி முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறான்.

இந்த மூன்று வகையும், திட்டமிட்டு நடத்தப்படுகின்ற அடிப்படையிலேதான் நாம் தாயகத்திலே நடைபெறும் நிகழ்வுகளைப் பார்க்க வேண்டும். கிளிநொச்சியில் வீசப்படுகின்ற எறிகணை, தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டத்தினைக் கொன்றொழித்துவிடுவதற்கான ஒரு அடிப்படையினைக் கொண்டிருப்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். தாண்டிக்குளத்திலே மறிக்கப்படுகின்ற உணவு வகைகள், தமிழர்கள் தங்களுடைய உரிமைகளைப் பெற்ற மனிதர்களாக வாழ அனுமதிக்கக்கூடாது என்ற நோக்கத்தினைக் கொண்டிருப்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த மூன்று தடைகள், அடிப்படையிலேயே இராணுவ ரீதியாக –வெளிநாடுகளிலே அரசியல் ரீதியாக, மக்களுடைய தேவைகளை மறுப்பதன் ஊடாக, இந்த மும்முனைப் போரினை எதிரி நடத்திக்கொண்டிருக்கிற வேளையிலே, நாம் என்ன செய்ய போகின்றோம் என்ற கேள்வி எம்முன்னால் எழுந்து நிற்கின்றது.

தாயகத்திலே இந்த மூன்று முனைகளிலும் எதிரியினை முறியடிப்பதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து, விடுதலைப் புலிகளின் தலைமையிலே போராட்டம் தீவிரமடைந்து வரும் சூழ்நிலையைக் காண்கிறோம். விடுதலைப் புலிகள் பலம் இழந்துவிட்டார்கள்; 75 வீதமான விடுதலைப் புலிகள் அழித்தொழிக்கப்பட்டுவிட்டார்கள்; தமிழீழ விடுதலைப் புலிகளால் இனி பெரியதொரு தாக்குதலைச் செய்யமுடியாது; விடுதலைப் புலிகளின் ஆயுள் இனி மிக விரைவில் முடிந்துவிடும் என்றெல்லாம் எதிரி

தொடர்ச்சி 2ம் பக்கம்..

www.tamilarangam.net



# "பூட்டிய கதவுக்குப் பின்னால் நடக்கும் போர்"

-வணபிதா இம்மானுவேல்

"சிறிலங்கா அரசு, மேற்கொள்ளும் போரால் தமிழ் மக்கள் பெரும் அவலத்திற்கு உள்ளாகியுள்ளார்கள்" இவ்வாறு யாழ். கத்தோலிக்க திருச்சபையின் குருமுதல்வர் இம்மானுவேல் அவர்கள், லண்டனில் பி.பி.சி தமிழ்ச் சேவைக்கு அளித்த செவ்வியொன்றில் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில், "சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் தங்கியிருந்த மக்கள், கிளிநொச்சி நோக்கிய 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையால் மீண்டும் ஒரு இடப்பெயர்வுக்கு உட்பட்டதுடன், மரங்களின் கீழும், தெருவோரத்திலும் வாழும் சொல்லொணாத் துன்பநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனக்கூறி, கிளிநொச்சியில் உணவு அனுப்பாமல் மக்களைத் துன்பப்பட வைத்த சந்திரிகா அரசின் நடவடிக்கை, மனிதத் தன்மையற்ற செயல்" எனக் கூறினார்.

"விடுதலைப் புலிகள் உணவு லொறிகளைக் கடத்துகின்றார்கள், உணவு லொறிகள் போவதைத் தடுக்கின்றார்கள் என சிறிலங்கா அரசு கூறுகின்றதே" எனக் கேட்டதற்கு,

"இது அப்பட்டமான பொய். அரசு கடுமையான செய்தித் தணிக்கையைச் செய்து உண்மைச் செய்திகள் வெளிவருவதை தடுத்து வருகிறது. இப்போர் பூட்டிய கதவுக்குப் பின்னால் நடக்கின்றது. இராணுவத்தினர் வெளியிடும் ஒரேயொரு செய்தி, அதுவும் அவர்களுக்குச் சார்பான செய்தி மாத்திரம் தெற்கிலுள்ள மக்களை எட்டுகின்றது. உண்மை நிலவரம் முற்றாக சிறிலங்கா அரசினால் மறைக்கப்படுகின்றது" என மேலும் அவர் தெரிவித்தார். ✷

# மட்டு-பொலநறுவை எல்லை....

மேலும் இரு இராணுவத்தினர் மரணமடைந்துள்ளதாக 01-09-96 அன்று சிறிலங்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இவ்வெற்றிகரத் தாக்குதலின்போதும் சில ஆயுதங்கள் புலிவீரர்களால் கைப்பற்றப்பட்டன. இதன்போது விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை.

**இரண்டு தாக்குதல்களின் போதும் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்**

**தன்னியக்க துப்பாக்கிகள்**

T56-01 - 22

T56-02 - 08

Altimax LMG - 01

மோட்டார்

60mm Mortar - 01

கைத்துப்பாக்கி

40mm Pistol - 02

Bronium Pistol - 01

எறிகணைகள்

Para Shells - 13

Smoke Shells - 10

60mm Shells - 13

40mm shells - 24

ரவைக்கூடுகள்

T56 Magazine - 77

கைக்குண்டுகள்

Grenades - 15

ரவைகள்

IM Bullets - 2210

AK Holster - 12

## மணலாற்றில் 3 படையினர் பலி

மணலாற்றுப் பகுதியில் புலிவீரர்களால் நடாத்தப்பட்ட பதுங்கித் தாக்குதலில் 3 சிறிலங்காப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 10 படையினர் காயமடைந்தனர். கொக்குத்தொடுவாய் பகுதியிலிருந்து உதவிக்கு விரைந்த படையினர் மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டது. சேதவிபரம் அறியப்படவில்லை. இத்தாக்குதல்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் சேதமெதுவும் ஏற்படவில்லை. ✷

# தமிழர்களின் சுதந்திர தாயகத்திற்காக ...

இருந்தும் வந்து வாழ்கின்றனர்: தமிழர்களும் மற்றைய மக்களைப் போலவே, பயங்கரவாதத்திற்கு உதவுவதை விலக்கும் பிரித்தானியாவின் சட்டதிட்டங்களுக்கு அமைந்து வாழ்ந்து வருகின்றனர். அவர்கள், பேச்சுச் சுதந்திரத்தில் நம்பிக்கையுள்ள ஒரு நாட்டில் வாழ்கின்றவர்கள் என்ற முறையில், தங்களது கருத்துக்களை வெளியிடும் உரிமையினை இயல்பாகவே கொண்டிருப்பது, அவர்களின் அடிப்படை உரிமை. அவர்கள் கட்டிடங்களையோ அலுவலகங்களையோ வைத்து நடாத்துவதை, சட்டத்தின் மூலம் தடைசெய்ய முடியாது" எனவும் கூறினார்.

தொடர்ந்து பேசுகையில் "பிரித்தானியா, இத்தீவின் மக்கள் தமது வேறுபாடுகளுக்கு நிலையானதும் நீதியானதும் நிரந்தரமானதுமான தீர்வுகளைக் காண எடுக்கும் எல்லா முயற்சிகளையும் ஆதரிக்கத் தக்கவகையில், தனது சிறிலங்கா குறித்த கொள்கைகளை வகுக்க விளைகிறது.

தொடர்ச்சி 2ம் பக்கம்...

# பாலியல் வன்முறைகள் மூலம்...

ஒன்றைச் சிறிலங்கா அரசு யாழ்குடாநாட்டுக்குள் மேற்கொண்டு வருகின்றது.

சிங்கள இராணுவக் குண்டர்களால் கூட்டாக, பாலியல் வன்முறைக்குப் பலியாகியுள்ள பெண் ஒருவரின் சடலம் கடந்த ஒரு மாதமாக யாழ் வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது போன்ற பல சம்பவங்கள் குடாநாட்டில் அதிகரித்து வருகின்றது. கடந்த மாதம் 1ஆம் திகதி, இராணுவ மிருகங்களால் ஒரு பெண்ணும் அவரது சகோதரியும் சகோதரியின் மகளும் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டதுடன், இதனைத் தடுக்கவந்த வயோதிபர் இராணுவத்தினரால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட பெண்கள் இப்போது மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த மாதம் முதல் வாரத்தில் பருத்தித்துறையில், பாலியல் பலாத்காரம் புரியமுயன்ற இராணுவக் குண்டர்களிடமிருந்து தனது மகளைக் காப்பாற்ற முனைந்த தந்தை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தென்மராட்சி மட்டுவில் பகுதியில் கடந்த மாதம் 15 ஆம் திகதி இரவு இராணுவத்தினர், 18 வயதுடைய மாணவி ஒருவர் மீது பலாத்காரமாகப் பாலியல் உறவு கொள்ள முயற்சித்துள்ளனர். இதற்கு அவர் இடம் கொடுக்க மறுத்ததினால் இராணுவக் குண்டர்கள், அவரைக் கூரிய ஆயுதங்கள் கொண்டு மிகக் கொடூரமாக வெட்டிக்கொன்றுள்ளனர்.

இதற்கு முன்னர், தாய்-தந்தையர் முன்னிலையில் வைத்தே பல மாணவிகளும் இளம் பெண்களும் சிறிலங்கா இராணுவத்தினரால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்ட சம்பவங்களும் பல பதிவாகியுள்ளன.

மேலும், கர்ப்பிணிப் பெண்கள் என்றும் பார்க்காமல், தமிழ்ப் பெண்களைக் கைது செய்து சித்திரவதைப்படுத்தும் கொடுமைகளையும் சிறிலங்காப் படையினர் செய்து வருகின்றனர்.

யாழ் டேவிற் வீதியில் குடும்பத்துடன் வசித்து வந்த 22 வயதுடைய இளம் கர்ப்பிணிப் பெண்ணான திருமதி யோகி சுகந்தினி என்பவரை, கடந்த மாதம் 21 ஆம் திகதி இரவு 10 மணியளவில் இராணுவம் கைது செய்து கடத்திச் சென்றுள்ளது. இக்கர்ப்பிணிப்பெண் பற்றிய விபரம் ஏதும் பின்னர் அறியப்படவில்லை. கைதுக்கான காரணமும் கூறப்படவில்லை. இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டவர்கள் பற்றிய விபரங்களை வெளியிடாது, இராணுவத்தினர் தொடர்ந்து மௌனம் சாதித்து வருகின்றனர். இதற்குப் பதிலாக, பெரும்பாலும் சித்திரவதை செய்யப்பட்டு வீசப்பட்ட உடல்களையே பொது மக்கள் அடையாளம் கண்டு வருகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, தமிழ்ப் பெண்கள் தம்மைத் திருமணம் செய்ய வேண்டுமெனச் சிங்களப் படையினர் ஆயுத முனையில் வற்புறுத்தும் சம்பவங்களும் பல இடம் பெற்றுள்ளன. தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன. இதற்கு இடம் கொடுக்க மறுக்கும் பெண்களின் நகைகள், கைப்பைகள், பணம் என்பன பலவந்தமாக கொள்ளையிடப்பட்ட சம்பவங்களும் பல நடந்துள்ளன. அண்மையில் யாழ் வீதியொன்றால் சென்ற இளம் பெண்ணை வழிமறித்த இராணுவத்தினன் ஒருவன், தன்னைத் திருமணம் செய்யுமாறு தொந்தரவு செய்தபோது, அதற்கு மறுப்புத் தெரிவித்த அப்பெண்ணின் கைப்பையை 500ரூபா பணத்துடன் பிடுங்கிச் சென்றுள்ளான்.

மேலும், தமிழ்ப் பொது மக்களைப் பலவந்தமாகச் சிங்களத்தைப் படிக்க வருமாறு வற்புறுத்தி, ஆயுத பலத்தைக் கொண்டு சிங்களத்தைத் திணிக்கும் முயற்சியும் கல்வியங்காடு உட்பட பல இடங்களில் இடம் பெற்றுள்ளது.

பொது மக்களுடன் நல்லுறவு ஏற்படுத்துவதற்காகக் கலந்துரையாட வருவதாகக் கூறிக் கொண்டு, இரவில் பொதுமக்கள் வீடுகளுக்குச் செல்லும் இராணுவத்தினர், தமது உடற்பசியைத் தீர்ப்பதற்காகவே இவ்வாறான தந்திரங்களைக் கையாள்வதாகக் கருதப்படுகின்றது. ✷

# அராலிக்கடலில் மீனவர்கள் பலர் .....

கடற்கரையோரம் ஒதுங்கியுள்ளன. இவ் உடல்களில் பல வெட்டுக் காயங்களும், எரிகாயங்களும், துப்பாக்கிச் சூட்டுக் காயங்களும் காணப்பட்டன.

கரையொதுங்கிய உடல்களில் 5 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

9 பிள்ளைகளின் தந்தையான ராசையா திருச்செல்வம் (வயது 50)

5 பிள்ளைகளின் தந்தையான தெய்வேந்திரம் சந்திரராசா (வயது 36)

5 பிள்ளைகளின் தந்தையான செல்வரட்ணம் ராஜசிங்கம் (வயது 30)

2 பிள்ளைகளின் தந்தையான சீவரட்ணம் இரத்தினகுமார் (வயது 28)

1 பிள்ளையின் தந்தையான தவராசா இதயராசா (வயது 22).

ஆகியோரே கொல்லப்பட்டுள்ளனர்.

## இராணுவம் சூடு ஆசிரியர், மாணவன் படுகாயம்

கடந்த மாதம் 24ஆம் திகதி, வண்ணார்பண்ணையில் சிறிலங்கா இராணுவம் நடாத்திய மிலேச்சத்தனமான துப்பாக்கிச் சூட்டில் 12 வயதுடைய மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் சிதம்பரநாதன் பிரதீபனும், அதேகல்லூரி ஆசிரியரான 40 வயதுடைய இராசேந்திரன் வசந்தகுமாரும் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை 23-08-96 அன்று, நீர்வேலிப் பகுதியில், இராணுவம் விதைத்த மிதிவெடியில் சிக்கி 38 வயதுடைய இரத்தினேஸ்வரன் முழங்காலுக்குக் கீழ் கால்களை இழந்துள்ளார்.

சிறுப்பிட்டியைச் சேர்ந்த சுப்பர் சந்திரன் (வயது 40) என்பவர் வடமராட்சியில் இருந்து தனது மாட்டுவண்டிலில் வீடு நோக்கி வந்துகொண்டிருக்கையில் இராணுவத்தால் ஒழுங்கை ஒன்றில் புதைத்துவைக்கப்பட்ட மிதிவெடியில் அகப்பட்டு தனது கால் ஒன்றை இழந்துள்ளார்.

தெல்லிப்பளையில் தனது வீட்டைப் பார்த்துவிட்டு திரும்பி வரும் வேளையில், மல்லாகத்தில் இராணுவத்தின் கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூட்டுக்கு மருதனாமடத்தைச் சேர்ந்த சண்முகராசா சசிகரன் (வயது 22) பலியாகியுள்ளார். அதேதினம் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் சாவகச்சேரியைச் சேர்ந்த தம்பிராசா தரணீதரன் (வயது 20) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

## மாணவர்கள் கைது

தென்மராட்சியில் தனங்கிளப்பு, மறவன்புலவில் மூன்று மாணவர்களை சிறிலங்காப் படையினர் எதுவித காரணமின்றிக் கைது செய்துள்ளனர். பல்கலைக்கழக மாணவன் கிருஸ்ணமூர்த்தி தவநேசன் (வயது 22), க.பொ.த சாதாரணதரத்தில் படிக்கும் திருநாவுக்கரசு (வயது 19), தி. சுதாகரன் (வயது 23) ஆகிய இவர்கள் கைது செய்யப்படும்போது கடுமையாக இராணுவத்தால் தாக்கப்பட்டுள்ளனர். இவர்களின் பெற்றோர், உறவினர் அருகில் உள்ள இராணுவ முகாமிற்குச் சென்று தமது பிள்ளைகள், 'மாணவர்கள்' என்பதை உறுதிப்படுத்தும் சரியான ஆவணங்களுடன் சென்று விளக்கியபோதும், இக்கைதுக்கும் தமக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை என இராணுவம் மறுத்துவிட்டது. தமது பிள்ளைகளின் நிலைகுறித்த பெரும் துன்பத்துடன் திரும்பினர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய குளிர்பானச் சாலையான 'லிங்கம்' உரிமையாளரும், அதன் ஊழியர்களும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இராணுவத்தினர் தமது கைக்குண்டுகள் இரண்டை அக்கடையில் மறைத்துவிட்டு, சோதனை எனும் பெயரில் அதனை எடுத்துவிட்டு ஆயுதம் வைத்திருந்தார்கள் எனக்கூறி இவர்களைக் கைதுசெய்துள்ளார்கள்.

நல்லூர் செட்டி வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் யோகநாதன் (வயது 57) என்பவர் தனது வீட்டு வளவு இலைச்சருகுகளை எரிக்கும்போது அதற்குள் வெடிக்காமல் கிடந்த எறிகணையொன்று வெடித்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சூரியக்கதிர் நடவடிக்கையின்போது, இராணுவத்தால் ஏவப்பட்ட பல எறிகணைகள் இவ்வாறு வெடிக்காமல் மக்களுக்குப் பெரும் சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன. இவ்வாறாக சிறிலங்கா இராணுவம் தமது படுகொலைகளுக்கு பாதுகாப்பு நடவடிக்கை எனப் பெயரிட்டு உலகை ஏமாற்ற முனைகிறது. ✷

www.tamilarangam.net



# வஞ்சிக்கப்பட்ட தமிழர்: வாக்குறுதிகளும் சூழ்ச்சிகளும்!



கதைக்கும்போது பரிந்து பேசி, தமிழர்களுக்கு நீதி வழங்கப்போவதாக வாக்குறுதிகளை அள்ளி வீசிய முன்னைய சிங்களத் தலைவர்கள் எல்லாருமே, பின்பு என்ன செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்பதை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகின்றது. இப்போது –குடாநாட்டை ஆக்கிரமித்து நின்று, அங்கு அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிக்கப்போவதாகவும், தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பதற்கான 'தீர்வுப் பொதி' தயாராகி வருவதாகவும் சந்திரிகா அரசாங்கம் பிரச்சாரப்படுத்துகின்ற வேளையில், மு. திருநாவுக்கரசு அவர்களின் இக்கட்டுரை எம்மக்களுக்குப் பழைய சரித்திரத்தை நினைவூட்டும்.

தமிழ் மக்களும் தமிழ்த் தலைவர்களும் தமது தனித்துவத்தைப் பேணிய வண்ணம், ஐக்கிய இலங்கையில் சிங்கள மக்களுடன் இணைந்து வாழவும் இலங்கையைச் சுபீட்சம் நிறைந்த ஒரு புதிய தேசமாகக் கட்டியெழுப்பவும் விரும்பினர். மேலும், ஒரு படி மேலே சென்று, சிங்கள பௌத்தத்தின் வளர்ச்சிக்காய்த் தமிழ்த் தலைவர்கள் பாடுபட்டனர். சிங்களத் தலைவர்கள் ஆங்கிலேயரின் கீழ் பெட்டிப்பாம்பாக இருந்த காலத்தில், பௌத்த மதத்தின் மிகமுக்கிய தினமான வெசாக் தினத்தை விடுமுறை தினமாக்க வேண்டும் என்று, சேர் பொன். இராமநாதன் 1880களில் பிரித்தானிய ஆதிக்கத்துக்கு எதிராகக் குரல் எழுப்பி, அதை விடுமுறை தினமாக்கினார். பௌத்தத்தைப் பேணிக் காப்பதற்கான பௌத்த நிர்வாகம் சம்பந்தமான பிரேரணை மீது, 1888இல், சட்டநிரூபண சபையில், இராமநாதன் மிகத் துடிப்பாக வாதிட்டார்.

*(ஹன்சார்ட், 5. 12. 1888)*

பௌத்தத்தின் வளர்ச்சிக்காக இராமநாதன் பெரிதும் பாடுபட்டதை நினைவுகூர்ந்து 7. 12. 1889இல் ஓல்கொட் என்பவர் இராமநாதனுக்கு எழுதிய கடிதத்திற் புகழாரம் சூட்டியிருந்தார். இத்துடன், ஆனந்தாக் கல்லூரியை ஆரம்பிக்கும் முயற்சியிலும் இராமநாதன் பங்கெடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன், கலாநிதி ஆனந்த குமாரசாமி, பௌத்த கலை கலாசாரத்துக்கு மிகப்



பெரும் தொண்டாற்றி இருந்தார் என்பது இங்கு சுட்டிக்காட்டப்படத்தக்கது.

சிங்களத் தலைவர்கள் விடுதலை பற்றிச் சிந்தித்திராத காலகட்டத்தில் இலங்கையின் விடுதலைக்குச் சேர் பொன். அருணாசலம், தேசிய கொங்கிரஸ் என்னும் ஒரு அமைப்பை 1919 இல் ஆரம்பித்தார். இவ்வாறாகத் தமிழ்த் தலைவர்கள் செயற்பட்டிருந்த போதிலும், தமிழ் மக்கள் இதை ஆதரித்த போதிலும், சிங்களத் தலைவர்கள் தமிழர்களைப் பௌத்தத்தின் எதிரிகளாய் விளக்கி – தமிழின விரோத நடவடிக்கைகளில் ஈடுபடலாயினர். இராமநாதன், அருணாசலம் போன்ற தமிழ்த் தலைவர்கள், சிங்களத் தலைவர்களால் தாம் ஏமாற்றப்பட்டும் வஞ்சிக்கப்பட்டும் விட்டதை உணர்ந்தனர். சிங்களத் தலைவர்களால் தோற்கடிக்கப்பட்ட துயரத்துடனும், விரக்தியுடனும் இவர்கள் இருவரும் இறந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒரு தருணத்தில், தமிழ் மக்களின் உரிமைகளைச் சிங்களத் தலைவர்கள் ஏற்றும் ஆதரித்தும் பேசுவர். இன்னொரு தருணத்தில் - அதிகாரத்திலமர்ந்து தம்மை உறுதிப்படுத்திக்கொண்டபின் - தமிழ் மக்க

**- மு.திருநாவுக்கரசு**

ளுக்குக்கெதிராகச் சிங்கள மக்களைத் தூண்டுவதுடன், உள்நாட்டு வெளிநாட்டுச் சக்திகள் அனைத்தையும் ஒன்றிணைத்து, முழு அளவில் தமிழரை ஒடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவர். சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரித்தும், ஆதரித்தும் ஒரு தருணத்தில் பேசிவிட்டு, நேர்மாறாக இன்னொரு தருணத்தில் நடந்துகொள்ளும் கபடத்தனத்தை, நாம் இனி இக்கட்டுரை முழுவதிலும் காணப்போகிறோம்.

அ) சமஷ்டி முறைதான் இனப்பிரச்சினைக்கான ஒரே சிறந்த தீர்வு என, 1926 இல் பண்டாரநாயக்கா கூறினார்.

ஆ) ஈழத்தமிழர் பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமையுடையவர்கள் என்று, 1944 இல், இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி கூறியது.

இ) தமிழுக்குச் சம அந்தஸ்த்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று 1950 மத்தி வரை – ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி, இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகிய அனைத்துச் சிங்களத் தலைமைத்துவக் கட்சிகளும் கூறின.

ஈ) சமஷ்டி முறையே சிறந்த தீர்வு என்று, 1995 இல், ஜே. ஆர். கூறினார்.

இவ்வாறு சிங்களத் தலைவர்கள் கூறியிருந்தபோதிலும், இவற்றிற்கு முரணாக அவர்கள் பின்வருமாறு நடந்திருக்கிறார்கள்.

1) 1958 இல் தமிழருக்கெதிரான படுகொலை பண்டாரநாயக்கா ஆட்சியின் கீழ்க் கட்டவிழ்த்துவிடப்பட்ட நான்காவது தினம், அதனைக் கட்டுப்படுத்த அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி ஊரடங்கு சட்டத்தைப் பிறப்பிக்குமாறு, சில தமிழ்ப் பிரமுகர்கள், பிரதமராக இருந்த பண்டாரநாயக்காவிடம் கோரியபோது, "அற்ப விடயத்தைப் பெரிதுபடுத்துகிறீர்கள்" என்று கூறிய தன்மூலம், இனப்படுகொலையை அவர் அங்கீகரித்தார்.

2) "இனப்பிரச்சினைக்குத் தீர்வு தமிழரின் தலைகளை நொருக்குவதுதான்" என்று, 1982 இல், லலித் அத்துலத் முதலி கூறினார்.

3) *"யாழ்ப்பாணத்தவர்களின் உயிர்களைப் பற்றியோ அவர்கள் எம்மைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியோ நான் கவலைப்படவில்லை" என்று, 1983 இனப் படுகொலை முடிந்தவுடன் ஜே. ஆர். கூறினார்.*

இவ்வாறாக, ஒருபுறம் வாக்குறுதி அளித்துவிட்டுத் தாம் பலமுற்று இருக்கையில் இனப் படுகொலை புரிவதும், இன ஒடுக்குமுறையை முழு மனதுடன் நடத்துவதும் சிங்களத் தலைவர்களின் ஒரு இயல்பாகவும் – இவ்வாறான விதத்தில் வஞ்சிக்கப்படுவது தமிழரின் வரலாறாகவும் உள்ளன. இவற்றை ஆதார பூர்வமாக, 1925 இல் இருந்து படிமுறையாக நோக்குவோம்.

1) 1925 இல் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சிங்களத் தலைவர்கள், வைத்தியலிங்கம் துரைசாமியின் வீடாகிய 'மகேந்திர இல்லத்'தில் வைத்துத் தமிழ்த் தலைவர்களுடன், இலங்கைத் தேசிய கொங்கிரஸின் சார்பில் ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். அந்த ஒப்பந்தத்தின்படி இலங்கையின் வட – கிழக்கு மாகாணங்கள் ஓர் அலகு என்பது ஒப்புக்கொள்ளப்பட்டு, அந்த அடிப்படையில் ஒப்பந்தத்தின் சரத்துக்களும் அமைக்கப்பட்டன. அவ்வாறு எழுதப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள அனைத்து அம்சங்களையும் சிங்களத் தலைவர்கள், ஒருதலைப் பட்சமாகப் பின்பு கிழித்தெறிந்தனர். தமிழ் மக்களின் சார்பில் 8 தமிழ்த் தலைவர்களும், தேசிய கொங்கிரஸின் சார்பில் 8 பேர்களும் 1925, 12 ஆம் மாதம் 19 ஆம் திகதி கைச்சாத்திட்டனர்.

(எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, இலங்கைத் தேசிய கொங்கிரஸின் கைநூல், 1919 – 1928, கொழும்பு, பக். 662 – 663)

2) பண்டாரநாயக்கா 1926 இல் யாழ்ப்பாணத்தில் உரையாற்றும்போது, இனப்பிரச்சினைக்குச் சமஷ்டித் தீர்வு அவசியம் என்று வலியுறுத்தினார். அவ்வாண்டு ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில், இலங்கைக்குச் சமஷ்டி ஆட்சிமுறை வேண்டுமென்றும் அது கண்டிச் சிங்களவர், கரையோரச் சிங்களவர், இலங்கைத் தமிழர் என்று மூன்று மாநிலங்களாக அமைய வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார். இவ்வாறமையும் சமஷ்டி மாநிலம் ஒவ்வொன்றும் பூரண சுயாட்சி அதிகாரம் உடையதாயிருத்தல் வேண்டும் என்றும் அவர் கூறினார். ஆயிரத்தொரு எதிர்ப்புகள் இதற்கெதிராக எழுந்தாலும் இறுதியில் இவ்வாறானதொரு சமஷ்டித் தீர்வே அவசியம் என்றும் கூறியிருந்தார்.

*(மோணிங் லீடர், யூலை 17, 1926)*

3) 1944 இல் ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனிச் சிங்கள மசோதாவைப் பிரேரித்த போதிலும் இறுதியில், தமிழும் சிங்களமும் உத்தியோக மொழிகளாக வேண்டும் என்ற திருத்தத்தை ஏற்று, அதற்குச் சார்பாக உரையும் ஆற்றினார். மேற்படி மசோதா மீதான விவாதத்திற் பேசிய பண்டாரநாயக்கா, தமிழ் இலக்கியம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்றும், தமிழை உத்தியோக மொழியாக அங்கீகரிப்பது அவசியம் என்றும் வாதித்தார். ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் உத்தியோக மொழிகளாய் உள்ள நாடுகளைச் சுட்டிக்காட்டிய பண்டாரநாயக்கா, இலங்கையில் தமிழையும் சிங்களத்துடன் உத்தியோக மொழியாக்குவதில் எந்தவித இடருமில்லை என்று கூறினார்.

*(ஹன்சாட், மே 24 – 25, 1944)*

4) இலங்கையில் சிங்களவரும் தமிழரும் தத்தமக்கெனத் தனித்துவமான பிரதேசங்களைத் தாயகங்களாகக் கொண்டுள்ளனர் என்பதுடன், அவர்களுக்கெனத் தனித்துவமான மொழி, கலாச்சாரம், பொருளாதார வாழ்வு உண்டு. இதன்பிரகாரம் தமிழ்த் தேசிய இனத்தினர், கேள்விக்கிடமற்ற வகையில், பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமையை உடையவர்கள் என்று, இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி 1944 இல் தீர்மானம் நிறைவேற்றியது.

(மைக்கல் றொபேர்ட்ஸ், இலங்கை தேசிய கொங்கிரஸின் ஆவணங்கள், கொழும்பு, 1927, பக். 2575 – 2578)

5) 1945 இல் டி. எஸ். சேனநாயக்கா அரசாங்க சபையில் உரையாற்றுகையில், "சுதந்திரத்திற்கான எமது மகாத்தான போராட்டத்தில் தமிழர்களின் சென்ற தலைமுறையைச் சேர்ந்த பெருந்தலைவர்கள் தோழோடு தோழ் சேர்ந்து போராடினர் என்பதை நான் உறுதியாகக் கூறுவேன்" என்றும், "தமிழர்களின் விசேட இயல்புகளைப் பற்றி எமக்குத் தெரிந்திருப்பதுடன், அவற்றால் நாம் ஆகர்சிக்கப்படுகின்றோம், இலங்கையின் நல்வாழ்வுக்குத் தமிழர்கள் அவசியம்" என்றும் கூறினார்.

*(ஹன்சாட், நொவம்பர் 8, 1945, சி 6931)*

"இலங்கையில் சிங்களவரும் தமிழரும் தத்தமக்கெனத் தனித்துவமான பிரதேசங்களைத் தாயகங்களாகக் கொண்டுள்ளனர் என்பதுடன், அவர்களுக்கெனத் தனித்துவமான மொழி, கலாச்சாரம், பொருளாதார வாழ்வு உண்டு. இதன் பிரகாரம் தமிழ்த் தேசிய இனத்தினர், கேள்விக்கிடமற்றவகையில்,பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமையை உடையவர்கள்" –இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி –1944இல்

அடுத்த இதழில் முடிவுறும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசுப் பொருளாதாரமும் குடும்பப் பொருளாதாரமும்

"இந்த ஆண்டு முடிவிற் சுமார் ஒரு இலட்சம் பேர் தங்களது வேலைகளை இழப்பர்" என, சிறிலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் **ரணில் விக்கிரமசிங்க** அபாய அறிவிப்புச் செய்துள்ளார்.

அரசைப் 'பதவியிறக்கும்' ஆசையுடன் – அதன் ஆட்சிவறுமையைச் சுட்டிக்காட்ட விரும்பும் ஒரு சாதாரண எதிர்க்கட்சியின் பேச்சாக மட்டும், இதை எடுக்க முடியாது.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிகளின் விளைவுகளாலும் மற்றும் அரசின் தனியார் மயமாக்கல் கொள்கைகளாலும், சிங்கள தேசத்தின்

## செய்தி ஆய்வு

ஊழியர்கள் மேற்குறித்த அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்பது வெளிப்படை.

இதேவேளை, **சந்திரிகா அரசின்** பொருளாதார ஆலோசகர்களும், மத்திய வங்கியின் ஆளுநர் உட்படச் சில அதியுயர் அதிகாரிகளும், நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியின் அபாயம் பற்றி அரசிற்குப் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிங்களப் பொருளியல் வல்லுநர்களின் இந்த அபாய அறிவிப்பை, 07-07-1996ஆம் திகதிய 'சண்டேலீடர்' பத்திரிகை, தனது தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்து முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றது.

உலக வங்கி ஆலோசனை கூறியதுபோல கோதுமை மாவினதும், உரத்தினதும் மானியத்தை நிறுத்தும்படியும், பயிற்றப்படாத பட்டதாரி ஆசிரியர்களது நியமனங்களை உடனடியாக நிறுத்துமாறும் அவர்கள் அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளனர்.

இந்தப் பொருளியல் அறிஞர் குழுவில், ஜனாதிபதி சந்திரிகாவின் பொருளியல் ஆலோசகரான **கலாநிதி லால் ஜெயவர்த்தன** மற்றும் மத்திய வங்கியின் **ஆளுநர் ஏ. எல். ஜெயவர்த்தன**, மத்திய வங்கியின் ஆய்வுப் பிரிவுத் தலைவர் **கலாநிதி எல். குணரட்ணா** என்போரும் அடங்கியுள்ளதாகச் 'சண்டேலீடர்' விபரம் வெளியிட்டுள்ளது.

போராலும் அதன் விளைவுகளாலுமே, சிங்கள அரசு இத்தகைய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளது என்பது, அனைத்து நிபுணர்களதும் ஏகோபித்த கருத்தாகும்.

"போர் முடியாமல் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்க முடியாது; அந்த அளவுக்கு அரசுக்குப் பண



பேராசிரியர். ஜி.எல்.பீரிஸ்

நெருக்கடி உண்டு" என, அண்மையில் சந்திரிகா அம்மையாரும் அறிவிப்புச் செய்துள்ளார். அதேவேளை, "அடுத்த வருடத்துடன் போரை முடித்துவிடுவோம்" என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தையும் இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் வைத்தபடி, வன்னியின் ஒருபகுதியையும் அரசுப் படைகள் கைப்பற்றினாலுங்கூட போர் முடியப்போவதில்லை. உண்மையில், போர் தீவிரம் பெறப்போகின்றது! அரசின் போர்ச் செலவும் உயரப்போகின்றது. அடுத்த வருட முடிவில், தாங்கொணாப் பொருளாதாரச் சுமையாற் சிங்கள மக்கள் திணறப்போகின்றனர் என்பதே உண்மையாகும்.

அரசுப் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பாரிய நெருக்கடி காரணமாக, சாதாரண மக்களின் குடும்பப் பொருளாதாரமும் பெரும்பாதிப்புக்குள்ளாகி வருகின்றது. பொருட்களின் விலையுயர்வு, போக்குவரத்துக் கட்டண உயர்வு என்பவற்றுக்கு மத்தியில் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. இதனால் மக்களின் வாழ்க்கைச் செலவு பெரியதொரு அதிகரிப்பைக் கண்டுள்ளது.

இந்த நிலையில், "இலவச உணவு விநியோகங்களை நிறுத்த வேண்டும், ஆசிரிய நியமனங்களை நிறுத்த வேண்டும்" என்ற வேண்டுகோள்கள், சிங்கள மக்களின் குடும்பப் பொருளாதாரத்திற்கு மேலும், அச்சுறுத்தல்களையே விடுத்துள்ளது.

உல்லாசப் பயணத்துறையிற் பாரிய வீழ்ச்சி, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மனத்தில் அச்சம், முதலிடுவதில் பின்னடிப்பு என்பனவற்றால் அந்நியச் செலாவணிச் சம்பாத்தியம் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இது அரசுப் பொருளாதாரத்திற்கு மேலும் பின்னடைவுகளைக் கொடுக்கப்போகின்றது.

அரசுப் பொருளாதாரம் பாதிக்கப்படும்போது, குடும்பப் பொருளாதாரம் சிக்கல்களைச் சந்திக்கும்; குடும்பப் பொருளாதாரத்தில் நிகழும் தாக்கங்கள் அரசியல் குழப்பங்களுக்கு வித்திடும் என்பது, உலக வரலாற்று அனுபவமாகும். ✷

# முக்கால் பங்கு முடிவு.....?

"அடுத்த ஒரு ஆண்டு காலத்திற்குள் நாட்டில் சமாதானம் நிலை நாட்டப்பட்டுவிடும். இதற்கென அரசு மேற்கொண்டுள்ள முக்கால் பங்கு முயற்சிகள் பெரும் பலனைத் தந்துள்ளன" இவ்வாறு தெரிவிக்கின்றார் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா. ஆனால், இவரின் இந்தக் கூற்றுக்கள் எதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்றுதான் நிரூபிக்க முடியாதுள்ளது. ஆட்சிக்கு வருமுன்னர் பேச்சுவார்த்தை மூலம்

> ஆட்சிக்கு வருமுன்னர் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தைக் கொண்டு வருவேன் என்று கூறிய சந்திரிகா, ஆட்சிக்கு வந்தபின் பேச்சுவார்த்தைகளைக் கைவிட்டுப் போரைத் தொடங்கினார். புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணமுடியாது என்று கூறினார். இதனைத் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்ட சந்திரிகா, இதற்குச் "சமாதானத்திற்கான போர்" எனப் பெயரிட்டார். இதன்மூலம் ஒரு புதிய அரசியல் தத்துவத்தை அவர் உருவாக்க முனைந்தார்.

சமாதானத்தைக் கொண்டு வருவேன் என்று கூறிய சந்திரிகா, ஆட்சிக்கு வந்தபின் பேச்சுவார்த்தைகளைக் கைவிட்டுப் போரைத் தொடங்கினார். புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியாது என்று கூறினார். இதனைத் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்ட சந்திரிகா, இதற்குச் "சமாதானத்திற்கான போர்" எனப் பெயரிட்டார். இதன்மூலம் ஒரு புதிய அரசியல் தத்துவத்தை அவர் உருவாக்க முனைந்தார்.

இந்தநிலையில், சமாதானம் நிலைநாட்ட அரசு மேற்கொண்ட முக்கால் பங்கு முயற்சிகள் பெரும்பலனைத் தந்துள்ளது என அவர் மதிப்பீடு செய்துள்ளார். இந்த மதிப்பீடானது, 'ரிவிரெச' இராணுவ நடவடிக்கை முடிந்தபின் புலிகளில் 70 வீதமானோர் ஒழிக்கப்பட்டுவிட்டனர் எனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் கணிப்பீட்டின் அடிப்படையில் கூட எழுந்து இருக்கலாம். 70க்கும் முக்கால் பங்கிற்கும் 5 வீத இடைவெளிதானே என்று அவர் எண்ணியிருக்கலாம். இந்த இடைவெளியை, பின்னர் நடந்த இராணுவ நடவடிக்கைகளில் ஈடுசெய்யப்பட்டிருக்கலாம் என சனாதிபதி சந்திரிகா கருதியிருக்கக்கூடும்.

ஆனால், உண்மையில் இனப்பிரச்சினை விடயத்தில் அரசு மேற்கொண்ட முயற்சிகள் எந்தளவு முன்னேறியுள்ளன? இதில் சமாதானம் உருவாக எத்தனை பங்களித்துள்ளன என்றொரு கேள்வி கேட்கப்படுமானால், சமாதானத்திற்கான நிலை முன்னரை விட மோசமாகியுள்ளது என்பதே சரியான கணிப்பீடு ஆகும். அதாவது, சந்திரிகா அரசின் முயற்சிகள் சமாதானத்தை உருவாக்கும் நிலையை அறவே இல்லாது ஒழித்துள்ளது என்றே கூறலாம்.

சமாதானத்திற்கான போர் எனக் கூறிக்கொண்டு – யாழ். குடாநாட்டின் மீது அரசு மேற்கொண்ட படையெடுப்பானது – அரசு எதிர்பார்த்தது போன்று, புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க அதற்கு உதவவில்லை. மாறாக, ஆயுதப் போராட்டத்தை மேலும் தீவிரமாக்கி சமாதானத்திற்கான வாய்ப்புக்களைப் பெருமளவு இல்லாது ஆக்கியுள்ளது என்றே கூறமுடியும். அதாவது, யாழ். குடாநாட்டின் மீது இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படுமேயாயின், சமாதானத்திற்கான வாய்ப்புக்கள் முற்றாக அற்றுப்போகும் என புலிகள் இயக்கம், அதிமுன்கூட்டியே எச்சரித்தும் இருந்தது.

ஆனால், அரசோ அதனைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. புலிகளைத் தம்மால் தோற்கடிக்க முடியும் எனப் படையெடுப்பை நடாத்தியது. ஆனால், புலிகளை தோற்கடிக்க முடியாது என்பது தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் சந்திரிகா மேற்கொண்ட முயற்சியில் 75 வீதம் பெரும்பலனைத் தந்துள்ளன என்பது எந்த அடிப்படையில்?

அதாவது, சந்திரிகா அரசு செய்துள்ள அதிகாரப் பரவலாக்கம் திட்டத்தின் அடிப்படையிலா? இராணுவ நடவடிக்கைகளை அரசு தீவிரமாக்கியபோது – மறுகையில் உலகையும், தமிழர் தரப்பில் சிலரையும் ஏமாற்றும் பொருட்டு – அதிகாரப் பரவலாக்கல் திட்டம் ஒன்றையும் அது முன்வைத்தது. ஆனால், கழுதை தேய்ந்து கட்டெறும்பானதுபோல், அரசு முன்வைத்த அதிகாரப் பரவலாக்கம் திட்டமானது, அரசினாலேயே அரைவாசி கலைக்கப்பட்டுவிட்டது. அதாவது, ஆரம்பத்தில் காணப்பட்ட முற்போக்கான அம்சங்கள் அரசாலேயே நீக்கப்பட்டுள்ளன.

இதற்கும் அப்பால், பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஓர் அனாதைப்பிள்ளைபோல் எவரும் ஆதரிப்பாரின்றி, அது அல்லல்பட்டுக்கொண்டு இருக்கின்றது. ஆரம்பத்திலேயே குறைநிறைவாக வந்த இந்த அதிகாரப் பரவலாக்கல் திட்டமானது, தீண்டத்தகாத ஒன்றாகும் என பிரதான எதிர்கட்சிகளினால் பார்க்கப்பட்டது. இதன் காரணமாக அதன் இறுதி நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. இந்தநிலையில் சந்திரிகா, "முக்கால் பங்கு நடவடிக்கைகள் வெற்றியைத் தந்துள்ளது; அடுத்த ஆண்டுக்குள் சமாதானம் நிலை நாட்டப்பட்டுவிடும்" என எந்த அடிப்படையில் கூறுகின்றார் என்பது தெரியவில்லை. பொய்ப்பிரச்சாரம் செய்வதிலும் சம்பவங்களை மூடிமறைப்பதிலும் சந்திரிகா அரசு தனித்திறமை பெற்றுள்ளது என்பது சகலரும் அறிந்ததொன்றாகும். ஆனால், இவ்வாறான உறுதிமொழிகளை எவ்வளவு காலத்திற்கு அவரால் கூறிக்கொண்டிருக்க முடியும்? இதனை எவ்வளவு காலத்திற்குக் கேட்டுக் கொண்டிருப்பது என்பதைச் சிங்கள மக்களே தீர்மானிக்க முடியும்! ✷



www.tamilarangam.net



# அரசின் சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைப்பது விடுதலைப்போராட்டத்திற்கு அவசியமானதா?

சிங்கள அரசின் ஆட்சியை – தமிழர் தாயகத்தில் இருந்து – தூக்கி வீசுவது என்பது, புலிகள் இயக்கத்தின் அரசியல் கொள்கையாகும்.

சிவில் நிர்வாகம் என்ற பெயரில் நடைபெறும் சிங்கள ஆட்சியானது, தமிழரின் தேசிய அபிலாசைகளைக் கட்டுப்படுத்தி அல்லது நசுக்கி, தமிழினத்தின் சுதந்திர எழுச்சியைக் கருவறுக்க முயற்சிகள் பல செய்கின்றது.

**❈ சிவில் நிர்வாகம் என்பது மக்களுக்கானதுதானே!**

**❈ அதனால் மக்கள்தானே பயன் பெறுகின்றனர்!**

**❈ அதைச் சீர்குலைப்பதால் அரசுக்கு என்ன நட்டம்?**

**❈ விடுதலைப் போராட்டத்திற்கு என்ன இலாபம்?**

மக்கள் மத்தியில் எழுகின்ற இவ்வாறான வினாக்களுக்கு விடை தருகின்றது இக்கட்டுரை.

தமிழினத்திற்கெதிரான அடக்குமுறைச் சட்டங்களையும், அதை நடைமுறைப்படுத்துவதற்கான ஆட்சி அலகுகளையும் – அவற்றிற்கு நியாயம் கற்பித்து, அவற்றை வலுப்படுத்தும் நிறுவனங்களையும் ஒருங்கே கொண்ட, ஒரு சங்கிலித்தொடர் அமைப்புத்தான், சிங்களச் சிவில் நிர்வாகமாகும்.

சிவில் நிர்வாகம் என்ற இந்த விடயத்திற்குள், எமது மக்களின் அத்தியாவசியத் தேவைகளான உணவு, கல்வி, மருத்துவம் போன்ற சில பணிகளும் அடங்கியிருப்பதால், சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைத்தல் என்ற புலிகள் இயக்கத்தின் கொள்கையை, சிலர் குழப்பத்துடன் நோக்குகின்றனர்.

மேற்குறித்த அத்தியாவசியப் பணிகளை நிறைவேற்றல் என்பது, சிங்களச் சிவில் நிர்வாகத்தின் ஒரு பகுதியாக இருந்த பொழுதிலும், இந்தப் பணிகளுக்குப் புலிகள் தடை விதிப்பதில்லை; இன்னும் சொல்லப்போனால், அந்தப் பணிகளுக்குப் புலிகளும் உதவுகின்றனர்.

எனினும், மக்களின் தேவைகளை நிறைவேற்றும் போக்கில், படையினர் தமது தேவைகளை நிறைவேற்ற முயலும் புத்திசாதுரியத்தைப் புலிகள் அனுமதிப்பதில்லை.

சில விடயங்களில், மக்களின் தேவைகளும் – படையினரின் இராணுவத் தேவைகளும் ஒரு இடத்தில் சந்தித்து விடுகின்றன. மக்கள் சேவை என்ற போர்வையில், தமது படைத்தேவைகளையும் பூர்த்திசெய்துவிட, இராணுவத்தினர் முனைகின்றனர்; இதை அனுமதிக்கமுடியாது. இதனால் மக்களும் சில சிரமங்களை – சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். ஆயினும், அது தவிர்க்கமுடியாத ஒரு செயற்பாடாக விளங்குகின்றது. எனவே இத்தகைய சந்தர்ப்பங்களில், மக்கள் புரிந்துணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும்.

> அரசின் சிவில் நிர்வாகம், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் ஒழுங்காக நடைபெறுமானால், உலக நாடுகள், சிங்கள அரசிற்குப் பெருந்தொகைப் பணத்தைப் "புனர் நிர்மாணத்திற்காக" என அள்ளி வழங்கும் அந்தப் பணம் திசைதிருப்பப்பட்டு, தமிழினத்திற்கு எதிரான போரிலேயே செலவிடப்படும். அத்துடன், தனது ஆட்சியைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று உலகிற்குக் காட்டுவதுடன், தமிழினம் மீதான அரசின் ஒடுக்குமுறையையும் சிங்கள அரசு மறைத்துவிடும். அதேவேளை, தனது சட்டங்களை – அதைப் பாதுகாக்க முயலும் சிங்களக் காவல்துறையை – இராணுவத்தை – கடற்படையை – வான்படையை – தமிழ் மக்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று உலகிற்குக் கூறுவதுடன், ஒரு "ஏமாளிகள் கூட்டமாக தமிழினத்தை உலகின் முன் நிறுத்திவிடும்"

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளுக்குள் வாழும் மக்களுக்கான விநியோகங்களை மேற்கொள்ளும் கப்பற் போக்குவரத்தைப் புலிகள் தடுக்கவில்லை; ஆனால், படையினருக்கான கப்பல் போக்குவரத்தைப் புலிகள் நிச்சயம் தாக்குவர். அதனால், மக்களுக்கான விநியோகங்களுடன் சேர்த்து, படையினரின் பொருட்களையும் கொண்டு செல்வதிலேயே, அரசு குறியாக இருக்கின்றது. இதை அனுமதிக்க முடியாது. இத்தகையதொரு சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாக்க முயலும் சிங்கள அரசு, "மக்களின் விநியோகத்திற்குப் புலிகள் தடைவிதிக்கின்றனர்" என்ற அபத்தமான குற்றச்சாட்டை புலிகள் இயக்கம் மீது சுமத்துகின்றது; இதை எமது மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டும்.

சிங்களப் படைகளை எமது தாயக மண்ணிலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என்பதே, எமது போராட்டத்தின் பிரதான இலக்கு. இதில் நாம் வெற்றிபெற வேண்டுமாயின், சிங்களப் படைக்கு பல்வேறு நெருக்கடிகளைக் கொடுக்க வேண்டும். இராணுவரீதியான நெருக்கடிகளுடன் பொருளாதார சீரழிவுக்குள்ளும் அரசைத் தள்ளவிடவேண்டும். அத்துடன், எமது மண்ணில் நிலைகொண்டுள்ள சிங்களப் படைகளின் சின்னச் சின்னத் தேவைகளையும் தடைசெய்வதன்மூலம், அதன் இருப்பிற்கு நாம் தொல்லைகளை ஏற்படுத்தவேண்டும். "சிறுதுளி பெருவெள்ளம்போல்" சிறிய சிறிய சிரமங்கள் மற்றும் இல்லாமைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து, படையினருக்கு ஒரு பாரிய நெருக்கடியைக் கொடுக்கும்; அது எமது விடுதலைக்கு வலுச்சேர்க்கும்.

எமது மண்ணிலுள்ள சிங்கள அரசின் சொத்துக்களை அழித்து, அதற்குப் பொருளாதார நஷ்டங்களை ஏற்படுத்தும் விடயத்திலும், மக்கள், சில சிரமங்களைச் சந்திக்கக்கூடும். எமது இனத்தின்மீது அரசு ஏவிவிட்டுள்ள போர்அரக்கனின் முதுகெலும்பாக, அரசுப் பொருளாதாரமே உள்ளது. இதை நாசஞ் செய்வதன்மூலம், போர்அரக்கனை நகரவிடாது – அவனை – படுக்கையில் வீழ்த்தமுடியும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சில அரசுச் சொத்துக்களை அழித்தல் என்ற இராணுவச் செயற்பாடு, அரசு நிர்வாகத்தை எமது மண்ணில் சீரழித்தல் என்ற அரசியல் இலக்கிற்கும் துணை செய்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் அரசுச் சொத்துக்களான மின்மாற்றிகளையும் – தொலைத் தொடர்பு நிலையங்களையும் புலிகள் தாக்கி அழித்துவருவதால், மக்கள் சில வசதிக் குறைபாடுகளை எதிர்கொள்கின்றனர் என்பது உண்மைதான்; ஆனால், அந்த நாசவேலைகள் மூலம் அரசுப் படைகளின் இராணுவச் செயற்பாடுகளும் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன என்ற உண்மையை உணர்ந்துகொண்டு, மேற்குறித்த வசதிக் குறைபாடுகளை மனமுவந்து ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவையை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மலையளவு உயர்ந்து விட்ட போர்ச் செலவை ஈடுசெய்வதற்கு வெளிநாட்டு உதவிகளையே அரசு நம்பியிருக்கின்றது. போர்ச்செலவுக்கென்று வெளிநாடுகள் பணம் கொடுக்க முன்வரமாட்டாது. அத்துடன், எப்படியாவது போரை முடிவுக்குக் கொண்டுவந்து அமைதியை நிலைநாட்டினால், புனரமைப்பு–அபிவிருத்திக்கென்று நிறையப் பணம் தருவோம் என வெளிநாட்டு அரசுகள் நிபந்தனை விதிக்கின்றன.




ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குடாநாட்டில் அமைதி திரும்பிவிட்டதென்று உலகுக்குக் காட்டுவதற்காக, அங்கே சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த அரசு துடிக்கின்றது. குடாநாட்டில் சிவில் நிர்வாகம் நடைபெறுகின்றது என்று காட்டுவதற்காக அமைச்சர் வருகைகளும் – திறப்பு விழாக்களும் மற்றும், குடாநாட்டில் இயல்பு நிலை திரும்பிவிட்டது என்று கூறுவதற்காக, திட்டமிட்ட வகையில், விதவிதமான புகைப்படங்களைப் பத்திரிகைகளில் பிரசுரிக்கச் செய்வித்தும், பொய்ப்பிரச்சாரங்களில் அரசு ஈடுபடுகின்றது. இந்த நாடகத்தில் அரசு அக்கறை காட்டுவதற்குப் பிரதான காரணம், வெளிநாடுகளில் இருந்து நிதிபெறுவதுதான். அந்த நிதிபெறுதலில் அரசு வெற்றி பெறுமாயின், அந்தப் பணத்தைப் பயன்படுத்தி அடுத்த படையெடுப்பைச் செய்து, மேலும் ஒரு தொகுதி நிலத்தை ஆக்கிரமிக்க அது முயலும்.

இந்த ஆபத்தை வருமுன் தடுக்கும் வழிகளில் ஒன்றாக, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் அரசின் சிவில் நிர்வாகத்தை இல்லாது செய்துவிடுதல் என்பது அத்தியாவசியத் தேவையாகின்றது.

கைப்பற்றப்பட்ட நிலங்களில் சிவில் நிர்வாகத்தை அரசால் நடைமுறைப்படுத்த முடியாது போகும்போது, அந்த நிலத்தையும்–மக்களையும் கையகப்படுத்தியதால் தனக்கு எந்தவொரு நன்மையும் கிடைக்கவில்லையே என்ற விரக்தி உணர்வை, அரசு அனுபவிக்கும்; இது இனப்பிரச்சினை மீதான இராணுவ அணுகுமுறையை கேள்விக்குரியதாக மாற்றும்.

அதற்குப் பதிலாக, அரசின் சிவில் நிர்வாகம், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் ஒழுங்காக நடைபெறுமானால், உலக நாடுகள், சிங்கள அரசிற்குப் பெருந்தொகைப் பணத்தைப் "புனர் நிர்மாணத்திற்காக" என அள்ளி வழங்கும் அந்தப் பணம் திசைதிருப்பப்பட்டு, தமிழினத்திற்கு எதிரான போரிலேயே செலவிடப்படும். அத்துடன், தனது ஆட்சியைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று உலகிற்குக் காட்டுவதுடன், தமிழினம் மீதான அரசின் ஒடுக்குமுறையையும் சிங்கள அரசு மறைத்துவிடும். அதேவேளை, தனது சட்டங்களை – அதைப் பாதுகாக்க முயலும் சிங்களக் காவல்துறையை – இராணுவத்தை – கடற்படையை – வான்படையை – தமிழ் மக்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று உலகிற்குக் கூறுவதுடன், ஒரு 'ஏமாளிகள் கூட்டமாக தமிழினத்தை உலகின் முன் நிறுத்திவிடும்' அதுமட்டுமல்ல, அரசினது சிவில் நிர்வாக அமைப்புக்களில் பணிபுரியும் தமிழ் ஊழியர்களை – அதிகாரிகளை – தனது புலனாய்வு முகவர்களாக இருந்து செயற்படும்படி, படையினர் நிர்ப்பந்திப்பர்; இறுதியில் தமிழினத்திற்கு ஒட்டுமொத்த அழிவையே இவை ஏற்படுத்தும்.

ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் அரசின் சிவில் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுமானால், எமது போராட்டத்திற்கும் எமது இனத்திற்கும் ஏற்படும் ஆபத்தை – அழிவை – மக்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே, அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைத்துவிடல் என்பது, எமது போராட்டத்திற்கு நன்மை பல பயக்கும் என்ற உண்மையை, எமது மக்கள் அறிந்து கொள்ளவேண்டும்! ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தோல்வி நிச்சயம்

முல்லைப் படைத்தளத் தோல்வி, 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையின் பின்னடைவு என்பன, சிறிலங்கா இராணுவத்தின் மேலோங்கிய நிலை என்ற கச்சிதத்தை முற்றாக இல்லாது ஒழித்துள்ளது.




அதாவது, 'ரிவிரெச' நடவடிக்கைகளின் பின்னர் இராணுவச் சமநிலையைச் சிறிலங்காப் படையினர் பெற்றிருந்ததாகச் சிறிலங்கா அரசினால் பிரச்சாரம் செய்யப்பட்ட, மேலாதிக்க நிலை போலியானது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால், இது குறித்து ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சருமான சந்திரிகாவோ அன்றி அவரின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான ஜெனரல் ரத்வத்தவோ பொருட்படுத்துவதாக இல்லை. சந்திரிகாவோ, இன்னும் ஒரு வருடத்திற்குள் சிலவேளை அடுத்த ஆண்டுக்குள் போரை முடிவுக்குக் கொண்டு வந்துவிட முடியும் என உறுதியாகக் கூறுகின்றார். அதன் மூலம் சமாதானமும் அதைத் தொடர்ந்து அபிவிருத்தியும் ஈட்டப்பட்டு விடும் என்கிறார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தவும், 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கை மூலம் தரை வழிப்பாதையொன்று யாழ். குடா நாட்டுக்குத் திறக்கப்பட்டு அதன் மூலம் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும்; அபிவிருத்திப் பணிகளின் மூலம் சமாதானம் நிலவும் எனக் கூறுகின்றார். ஆனால், இதுவரையில் கிளிநொச்சியைக் கைப்பற்ற எடுத்த முயற்சிகள் வெற்றிகாணவில்லை. ஒரு விடுதலைப் போராட்ட வரலாற்றில், போராடும் அமைப்பிற்கு இராணுவ ரீதியில் முன்னேற்றங்கள் வருவதுண்டு. இடைஇடையில் பின்னடைவுகளும் வரலாம். ஆனால், இதனையே அடிப்படையாகக் கொண்டு அரசதரப்பு, இராணுவத்தின்மூலம் பிரச்சினையைத் தீர்க்கலாம்; தொடர் வெற்றிகளைப் பெறலாம் என்று செயற்படுவது தவறானது - இதற்குத் தனியாக இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் மட்டுமல்ல - வேறு இடங்களிலும் இது போன்ற பல உதாரணங்களைக் காணலாம். உலகத்திலுள்ள பலம் பொருந்திய நாட்டுப் படையில் ரஸ்யப் படைகளும் ஒன்று என்பதை எவராலும் மறுக்க முடியாது. சோவியத் யூனியன் சின்னாபின்னமாகிய போதும் ரஸ்யாவின் இராணுவ ஆற்றல் ஒன்றும் குறைந்துவிடவில்லை. அதே வேளை, போர்த் தளபாட ஆயுதரீதியில் அமெரிக்காவிற்கு அடுத்த அளவை ரஸ்யா கொண்டுள்ளது என்பது வெளிப்படையானதாகும். ஆனால், இந்த நிலையிலும் அண்மையில் ரஸ்யத் துருப்புக்கள் செச்னிய தலைநகரான குறோஸ்னியில் அவமானகரமான தோல்வியொன்றைத் தழுவிக்கொண்டுள்ளனர். 200க்கு மேற்பட்ட துருப்புக்கள் கொல்லப்பட்டதோடு, பல நூற்றுக்கணக்கானோர் காயமும் அடைந்தனர். அத்தோடு டாங்கிகள், கவச வாகனங்கள், உலங்கு வானூர்திகள் எனப் பெரும் எண்ணிக்கையிலான இராணுவத் தளபாடங்களையும் இழந்தனர். இதற்கும் மேலாக மருத்துவமனை ஒன்றைக் கைப்பற்றி நோயாளர்களையும் பொதுமக்களையும் பணயக் கைதிகளாக எடுத்துக் கொண்டனர்.

இத்தோல்வியானது அமெரிக்கா, வியட்நாமில் அடைந்த தோல்வியையோ அன்றி, சோவியத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானில் அடைந்த தோல்வியையோ விட மோசமானது ஆகும். ஏனெனில் வியட்நாமிலும், ஆப்கானிஸ்தானிலும் அவர்கள் தோல்வி கண்டது,

செச்னியத் தலைநகராகிய குறோஸ்னியில், ரஸ்ய இராணுவம் அடைந்த தோல்வியானது, இனப்பிரச்சினை ஒன்றுக்கு இராணுவ ரீதியில் தீர்வு காணமுடியாது என்பதை மீண்டும் உலக வரலாற்றில் ஒரு தடவை வலியுறுத்தியுள்ளது என்று கூறலாம். இதனைத் தற்பொழுது செச்னிய இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணமுற்பட்ட ரஸ்யாவும் உணர்ந்துள்ளது எனலாம். இதன் வெளிப்பாடே, குறோஸ்னியைக் கைப்பற்றுவதற்குப் படைகளை ஏவாது சமாதானத் தீர்வு ஒன்றினை ரஸ்யா கடைப்பிடிக்கின்றது. ஆனால், உலக வல்லரசுகள் போன்று இதனை உணர்ந்துகொண்டு அதற்கேற்ப செயற்படுவதை விட, சந்திரிகா அரசு இராணுவத் தீர்வில் முனைப்பாக இருப்பது, அதன் அறியாமை என்பதைவிட அதன் பேரினவாதப் போக்கு என்றே கூறலாம்.

அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் தமது நாடுகளின் எல்லைக்கு அப்பால் நிகழ்ந்தவையாகும். ஆனால், செச்சினியத் தலைநகரில் ரஸ்ய இராணுவம் அடைந்த தோல்வியானது, தமது ஆட்சியின் எல்லைக்கு உட்பட்டது எனக்கொள்ளும் பகுதிக்குள் இடம் பெற்றதாகும்.



இந்த வகையில், செச்னியத் தலைநகராகிய குறோஸ்னியில், ரஸ்ய இராணுவம் அடைந்த தோல்வியானது, இனப்பிரச்சினை ஒன்றுக்கு இராணுவ ரீதியில் தீர்வு காணமுடியாது என்பதை மீண்டும் உலக வரலாற்றில் ஒரு தடவை வலியுறுத்தியுள்ளது என்று கூறலாம். இதனைத் தற்பொழுது செச்னிய இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணமுற்பட்ட ரஸ்யாவும் உணர்ந்துள்ளது எனலாம். இதன் வெளிப்பாடே, குறோஸ்னியைக் கைப்பற்றுவதற்குப் படைகளை ஏவாது சமாதானத் தீர்வு ஒன்றினை ரஸ்யா கடைப்பிடிக்கின்றது. ஆனால், உலக வல்லரசுகள் போன்று இதனை உணர்ந்துகொண்டு அதற்கேற்ப செயற்படுவதை விட, சந்திரிகா அரசு இராணுவத் தீர்வில் முனைப்பாக இருப்பது, அதன் அறியாமை என்பதைவிட அதன் பேரினவாதப் போக்கு என்றே கூறலாம். ஆனால், சந்திரிகாவிற்கு இது ஒருபோதும் நன்மை பயக்கப்போவதில்லை. தனது இரண்டாண்டு கால ஆட்சியில் மக்களுக்குப் பிரச்சினையையும் அவநம்பிக்கையையும் வழங்கியுள்ள சந்திரிகா, இதேவழியில் நடந்தால் தோல்வியையும் பெரும் அழிவினையையும் சந்திக்க வேண்டுமென்பது நிச்சயம். ✷

# பொய்ப்பிரச்சாரம்

தமிழர் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் நோக்கிலும் - தனது இனப்படுகொலை நடவடிக்கையை மறைக்கும் நோக்கிலும் - சிறிலங்கா அரசு சில தீவிர பிரச்சாரங்களை மேற்கொண்டுள்ளது. இராணுவத்தின் உளவுப் பிரிவு மேற்

தமிழர் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் நோக்கிலும் – தனது இனப்படுகொலை நடவடிக்கையை மறைக்கும் நோக்கிலும் –சிறிலங்கா அரசு சில தீவிர பிரச்சாரங்களை மேற்கொண்டுள்ளது. இராணுவத்தின் உளவுப் பிரிவு மேற்கொண்டுவரும் இந்த நடவடிக்கை, சர்வதேசச் செய்தி நிறுவனங்கள் மூலமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கொண்டுவரும் இந்த நடவடிக்கை, சர்வதேசச் செய்தி நிறுவனங்கள் மூலமாகவும் மேற்கொளப்பட்டு வருகின்றது. இதனை அண்மையில் சுட்டிக்காட்டியுள்ள விடுதலைப் புலிகள், சர்வதேச செய்தி நிறுவனங்கள் விரும்பியோ விரும்பாமலோ இப்பிரச்சாரத்தை மேற்கொண்டு வருவதனையும் குறிப்பிட்டுள்ளது. இதன்மூலம், தமிழர் தாயகத்தில் இடம்பெறும் இனப்படுகொலை மற்றும் இன ஒடுக்கல் நடவடிக்கை மூடி மறைக்கப்படுவதோடு, தமிழ் மக்கள் உரிமைப்போரை இழிவுபடுத்தவும் சிறிலங்கா அரசு முனைந்தது. இவ்வாறான பிரச்சாரத்திற்கு வசதியாக - அரசு கடைப்பிடித்துவரும் உக்கிரமான செய்தித் தணிக்கையானது - செய்தியாளர்களை முக்கியமான செய்திகளைச் சேகரிக்க அனுமதிக்காதது மட்டுமல்ல - செய்தியாளரை ஒரு மாய உலகிற்குள் வைக்கவும் உதவுகின்றது. இதற்குச் சிறப்பான உதாரணங்களும் உண்டு.

முல்லைத்தீவுப் படைத்தளம், புலிகளால் தாக்கப்பட்டபோது சிறிலங்கா இராணுவம் செய்த பிரச்சாரமும், கிளிநொச்சி நோக்கிய 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையின்போது அரசு செய்த பிரச்சாரமும் இதற்கு உதாரணமாகும். அரசின் பிரச்சாரத்தினால் கொழும்பில் இருந்த - சர்வதேச செய்தி நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் சமநிலை இழந்ததோடு - பிழையானதொரு கச்சிதத்தையும் உருவாக்கி வந்தனர். இதில் முதன்மையாக இருந்தது; கிளிநொச்சியை இராணுவம் அடைந்துவிட்டது அல்லது அடைந்துவிடும் எனச் செய்தியாளர்கள் செய்த ஆரூடம் ஆகும். அதாவது, சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் பிரச்சார மானது அதன் நம்பகத்தன்மையை மட்டுமல்ல, அவற்றைத் தொடர்ந்து வெளியிடும் செய்தி நிறுவனங்கள், குறித்த நம்பகத் தன்மையையும் கேள்விக்குரிய தாக்கிவிடும்.

இவ்வாறானதான ஒருநிலையே, கிளிநொச்சிக்கு இராணுவம் வந்துவிட்டதென்ற செய்திகளினால் உருவானதெனலாம். செய்தித் தணிக்கை மூலம் இவ்வாறானதொரு மறைப்பு நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ள அதேவேளை, தமது செய்தியின் நம்பகத்தன்மையைக் காட்டும் முயற்சியில் அரசு தீவிரமாக உள்ளது. இதன்போது அரசு கைக்கொள்ளும் முக்கிய மான வழிமுறையாக, வடக்கு-கிழக்கில் செயற்படும் சர்வதேச மனிதநேய அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிவாரண அமைப்புக்கள் என்பவற்றைத் தமது தகவல் மூலமாகக் காட்ட முனைவதாகும். சர்வதேசரீதியில் இவ்வாறன அமைப்புக்கள் காத்திரமான பங்கைக் கொண்டிருப்பதன் காரணமாக, அவர்களின் ஒத்துழைப்புடன் தமது பொய்ப்பிரச்சாரத்தை அரசு மேற்கொண்டு வருகின்றது.

பொதுவில், 'சர்வதேச நிவாரண அமைப்புக்கள்' எனக் குறிப்பிட்டு வெளியிடப்படும் செய்திகள், எந்த அமைப்பினது என்றோ அன்றி வழங்கியவர் பெயரோ கூறப்படுவதில்லை. மாறாக, உண்மைக்கு மாறான தகவல்களைக் கொண்டவையாக அவை உள்ளன. ஆனால், இவை உண்மைக்கு மாறானவை என அமைப்புக்கள் கூட மறுப்புக்களைத் தெரிவிக்க முடியாது இருக்கும். அதேவேளை, சிறிலங்கா அரசு பிரச்சாரத்தை முடுக்கிவிட்ட வண்ணம் உள்ளது.


இந்த அணுகுமுறையானது, பொதுவாக நிவாரணப் பணி நடவடிக்கைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விவகாரத்திலேயே அரசினால் செய்யப்படுகின்றது. உணவு விநியோக நடவடிக்கையில் பெரும்பாலும் சர்வதேச நிவாரணப் பணியாட்கள் கடமை செய்வதால் அவர்கள் தரப்புக் கூறுவதை மக்கள் ஓரளவு ஏற்றுக்கொள்வார்கள் என்பதே அரசின் நம்பிக்கையின் செயற்பாடும் ஆகும். ஆனால், அரசின் இப்பொய்ப் பிரச்சாரங்களை, சில சமயங்களில் தொடர்ச்சியாகக் கேட்பதினால் தமிழ் மக்களுக்குத் தடுமாற்றத்தை ஏற்படுத்தினாலும் அவர்கள் அவற்றை ஒருபோதும் நம்பியதாக இல்லை. ஆனால், அரசின் செய்திக்கு முதன்மை கொடுக்கும் சர்வதேச செய்தி நிறுவனங்கள் மீதும் - சர்வதேச நிவாரண அமைப்பு க்கள் மீதும் மக்கள் நம்பிக்கை இழக்க வாய்ப்பு அதிகரித்து வருகின்றது. இது அரசுக்குக் குறுகிய காலத்திற்குச் சில சமயம் நன்மை பயப்பவையாக இருக்கலாம். ஆனால், நீண்டகாலத்திற்கு இது உதவப்போவது இல்லை. இருப்பினும் சர்வதேச அமைப்புக்களின் பெயர்களைக் களங்கப்படுத்திவிடும். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஸ்ரான்லி வீதிக் குண்டு சொல்கின்ற செய்தி !



குண்டு வெடிப்புக்குட்பட்ட இடமும், காயப்பட்ட அமைச்சர் நிமால் சிறீபால டி சில்வாவும்.

**1996** – யூலை – 4ஆம் நாள், மதியம் 14.50 மணியளவில், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் நடந்த சம்பவத்துக்குப் பின்பு – "எமது அரசியல் இராணுவ வெற்றிகளைப் பயங்கரவாதிகளாற் சீர்குலைத்துவிட முடியாது" என அமைச்சர் மங்கள சமரவீர அறிக்கைவிட்டுள்ள போதிலும் –

அந்த மனிதக்குண்டுத் தாக்குதல்,

> யாழ்ப்பாணத் தளபதியாகவும் நியமிக்கப்பட்ட ஆனந் எஸ். எஸ். கமன்கொட தான் இந்தக்கதையின் சிறப்புக் கதாநாயகன். சாதுரியமாகவும், புத்திக்கூர்மையுடனும், மிகக் கவனத்துடனும் அரங்கேற்றப்படும் இந்த வஞ்சக நாடகத்தில் முக்கிய பாத்திரம் அவருக்குத்தான். குடாநாட்டில் இராணுவ – அரசியல் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து, ஒன்றுக்கு ஒன்றைத் துணையாக்கி, கூட்டு நடவடிக்கைகளை நகர்த்திச் சென்று, "மக்களின் மனங்களை வெல்லும்" பொறுப்பு அவருடையது.

யாழ்குடாநாடு மீதான சந்திரிகா அரசின் சூழ்ச்சிகரக் கையாளலுக்கு முதலாவதும், தாக்கமுள்ளதுமான ஒரு அடியேதான்!

குண்டுச் சிதறல்கள் தமக்குரிய அரசியல் – இராணுவ நோக்கங்களை நிறைவேற்றிவிட்டன என்பதற்கு ஆதாரம், தாக்கப்பட்ட இலக்குகளாகும்.

'புனர்நிர்மாணப் பொறி' வைத்து, யாழ்ப்பாண மக்களை 'அணைத்துக் கெடுக்கும்' நவீன இனவாதத் திட்டத்தின் அமுலாக்கலுக்குப் பொறுப்பானவர்தான், அமைச்சர் நிமல் சிறிபால டி. சில்வா.



கொல்லப்பட்ட மேஜர் ஜெனரல் ஆனந்த கமன்கொட

அவரது துணைவர்களான –

வடக்குப் "புனரமைப்புக்கு" (?) பொறுப்பாக நியமிக்கப்பட்ட – முன்னாட் சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி – கார்லேல் டயஸ், சந்திரிகா அரசின் வெற்றிக்காக தேர்தற் காலங்களில் அயராது உழைத்த – சீமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் – ரஞ்சித் கொடமுதுனே, சந்திரிகா கட்சியின் தீவிர ஆதரவாளரான – கட்டடப்பொருள் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகக் குழு அதிகாரி, ஏ. ஏ. தசநாயக்க எனப்படுவோர்தான் இயக்குநர்கள். இவர்களோடிணைந்த அடுத்தவர் ஒரு இராணுவக்காரர்.

அவர்தான் மேஜர் ஜெனரல் ஆனந்த எஸ். எஸ். கமன்கொட. யாழ்ப்பாணத் தளபதியாகவும் நியமிக்கப்பட்ட அவர்தான், இந்தக் கதையின் சிறப்புக் கதாநாயகன். சாதுரியமாகவும், புத்திக்கூர்மையுடனும், மிகக் கவனத்துடனும் அரங்கேற்றப்படும் இந்த வஞ்சக நாடகத்தின் முக்கிய பாத்திரம் அவருக்குத்தான். குடாநாட்டில் இராணுவ – அரசியற் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து, ஒன்றுக்கு ஒன்றைத் துணையாக்கி, கூட்டு நடவடிக்கைகளை நகர்த்திச் சென்று, **"மக்களின் மனங்களை வெல்லும்"** பொறுப்பு அவருடையது.

குருநாகலையைச் சேர்ந்த அந்த 46 வயது 'இளைஞர்', 26 வருட இராணுவ சேவையாளர். தியத்தலாவ இராணுவக் கல்லூரியில் 'ஆட்டிலறி' போதகராக, 'ஆட்டிலறி' பயிற்சிக் கல்லூரியின் பொறுப்பாளராக, 4வது 'ஆட்டிலறி' பிரிவின் தளபதியாக, வவுனியா மாவட்ட 'பிரிகேட்' படையணியின் பொறுப்பதிகாரியாக, இராணுவத் தலைமையகத்தின் துணைச் செயலாளராக என உயர் பணிகளில் சேவையாற்றியதற்காக மட்டுமன்றி – கடந்த நவம்பர் 15இல் பதவி உயர்வு பெறுவதற்கு முன்னர், கேணல் தரத்தில் இருக்கும்போதே பிரிகேடியர் தரத்தளபதிக்குரிய பணியேற்று, **"சூரியப்பிரகாசம்-1" படையெடுப் பின்போது 'ஆட்டிலறி"ப் பிரிவின் கட்டளை அதிகாரியாக** ஆற்றிய சிறந்த சேவைக்காகவும் –

"உத்தம சேவா பதக்கம்", "வடமராட்சி பதக்கம்", "பூரணபூமி பதக்கம்" ஆகிய படைத்துறை விருதுகளையும் ஏற்கனவே பெற்றிருந்தவருமாவர்.

இவ்வாறாக, **தமிழர்களுக்கு எதிரான நீண்ட இனவாதப் போரில் இன்றிமையாத கடமைகளைச் செய்துவந்த** மேஜர் ஜெனரல் கமன்கொட – வடபகுதியில் புனருத்தாரண அமைச்சரின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர் என்பதுடன், **"தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக"** புனர்வாழ்வளிக்கும் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு இயக்குனராகவும் நியமிக்கப்பட்டார். இத்தகைய நியமனத்தினை வழங்கி, டென்சில் கொப்பேகடுவ இல்லாத இடத்திற்குப் பிரதியீடாக அரசியற் களத்தில் இறக்கப்படும் அளவிற்கு அவரது பின்னணி என்னவெனில், ஒரு இராணுவக்காரராக மட்டுமன்றி, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்காரராகவும் அவர் இருந்தார் என்பதுதான் என நம்பலாம். எனவே, உண்மையில் அந்த மனிதக் குண்டுத் தாக்குதலானது, தீர்க்கமான சில எச்சரிக்கைகளைச் சிங்கள அரசிற்கு விடுத்துத்தான் உள்ளது.

பறிக்கப்பட்ட – மறுக்கப்பட்ட – தமது அடிப்படையான அரசியல் உரிமைகளை, தன்னாட்சி அதிகாரங்களை மீளப்பெறுவதற்காக – அளப்பரிய அர்ப்பணிப்புக்கள் புரிந்து, சொல்லொணாத் துயரங்களைக் கடந்து உறுதிப்பாடு குன்றாத ஒரு **சுதந்திரப் புரட்சியை முன்னெடுத்துச் செல்லும், தேசிய இன அந்தஸ்துடைய ஒரு மக்கள்** சமூகத்தை – வெறும் சலுகைகளால் மூழ்கடிப்பதன் மூலம் போலி மாயைக்குள் திணறடித்து, அவசரத் தேவைகளை உடனடியாக நிறைவேற்றுவதன் மூலம் அரசியல் உரிமைகளின் அடிப்படைக் கோரிக்கைகளை மறக்கடித்து, இதன் வாயிலாக – **அற்ப அன்றாடத் தேவைகளுக்காக மட்டுமே போராடிய வெறும் மக்கள் குழு** என்று உலகின் முன் காட்டி – தமிழினத்தை – எதிர்காலம் சூன்யமாக்கப்பட்ட நிரந்தரமான அரசியல் அடிமையாக்கிவிடக் கனவு காணும் சிங்களப் பேரினவாதிகளுக்கும், சிங்களத் தனித்துவத்தை நிலைநிறுத்துவதற்காக அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ள சூழ்ச்சிகரமான புதியவகை இனவாதச் செயற்பாட்டுக்கும் கொடுக்கப்பட்ட, காத்திரமான அடியேயாகும். அந்தக் குண்டுத் தாக்குதலின் அரசியற் பரிணாமங்கள் இன்னும் விரிந்து, பின்வருமாறு வருகின்றன.

**95இன் ஏப்ரில் 19இற்கு முன்னான** நாட்களையும், **96இன் ஏப்ரில் 19இற்குப் பின்னான** நாட்களையும் நாம் ஒப்பிட்டுப் பார்ப்பதொன்றே, சந்திரிகா அரசின்

> தமிழர்க்கு எது எது தேவை என்பதைத் தானே தீர்மானித்து, அவையும் எப்போது எப்போது தேவை என்பதையும் தானே தீர்மானித்து, தமிழர்களின் விருப்பு வெறுப்புக்களையும் தானே தீர்மானித்துஹ வெறும் மின்சாரத்திற்கும், "சதொச"வில் விற்கும் மிதிவண்டி ரயருக்கும், "கொக்கோகோலா" பானத்திற்காகவும் மாத்திரமே போராடிய மக்கள் – அவர்கட்கு அரசியல் பிரச்சினைகளே இல்லை என்ற தீர்மானத்தையும் தானே தீர்மானிக்கக்கூடிய விதமாகச் செயற்படுகின்றது அரசு.

பேரினவாத – வஞ்சக, அரசியலைப் புலப்படுத்துவதாக அமையும். சுருக்கமாக நான்கு வரிகளுக்குள் தெளிவாகச் சொல்லிவிடக்கூடிய அந்தக் கபடத்தனத்திற்கு, நீண்ட விளக்கமெதுவும் தேவையில்லை.

சந்திரிகா அரசுடன் சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த அன்றைய நாட்களில், நான்காண்டு காலமாக ஆகக்கூடிய துன்பங்களை அனுபவித்துவிட்ட மக்களை ஆசுவாசப்படுத்துவதற்காக – அவர்களது அவசர அன்றாடத் தேவைகளை முதலிற் பூர்த்தி செய்துவிட்டு, பின்பு அடிப்படை அரசியற் பிரச்சினைகள் பற்றிப் பேசலாம் என்று, புலிகள் இயக்கம் நியாயமாகக் கோரியது. அதனை நிராகரித்து, அரசியற் சிக்கல்களைப் பற்றிப் பேசவே அவசரப்பட்டு, பேச்சுக்களை முறிக்கச் செய்யும் விதமாகச் செயற்பட்டு, **மீண்டும் போர் வெடிக்க வழிகோலியது அரசுதான்** என்பதை,

> அந்த மனிதக் குண்டுத் தாக்குதல், யாழ். குடாநாடு மீதான சந்திரிகா அரசின் சூழ்ச்சிகரக் கையாளலுக்கு முதலாவதும், தாக்கமுள்ளதுமான ஒரு அடியேதான்!
>
> குண்டுச் சிதறல்கள் தமக்குரிய அரசியல் – இராணுவ நோக்கங்களை நிறைவேற்றிவிட்டன என்பதற்கு ஆதாரம், தாக்கப்பட்ட இலக்குகளாகும்.

அன்று சர்வதேச சமூகம் கண்டுகொள்ளவில்லை. ஆனால், அதே அரசின் இன்றைய செயற்பாடுகள் விசித்திரமாகவல்லவா உள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளை அப்புறப்படுத்தி, மண்ணையும் மக்களையும் தான் கைப்பற்றிவிட்டதையடுத்து, இப்போது, அடிப்படைப்பிரச்சினைகளை ஆறப்போட்டுவிட்டு – அவசரப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கே அது அவசரப்படுகின்றது. "பாவம் தமிழ் மக்கள்; **அவர்கள் இப்போது அரசியற் தீர்வுகள் குறித்து அக்கறைப்படவில்லை;** அவர்கள் பட்டு நிற்கின்ற துன்பங்களுக்குப் பரிகாரம் தேடுவது எமக்குரிய முதற் கடமை; புனர்நிர்மாண வேலைகளை உடனடியாகக் குடாநாட்டில் செய்து – அவர்களது நாளாந்த வாழ்வை முதலில் சீரமைக்க வேண்டும்" என்றவாறாக அக்கறையோடு அவதிப்படுகின்ற அரசு, ஓராண்டு இடைவெளிக்குள், யாழ்ப்பாண மக்கள் தொடர்பான தன் நிலைப்பாட்டைத் தலைகீழாய் மாற்றி – சூழ்ச்சிகர வலை விரித்து நிற்கிறது.

எனவேதான், குடாநாட்டின் இத்தகைய கபடத்தனமான அரசியற் சூழலில் நிகழ்ந்த மனிதக்குண்டுத் தாக்குதலானது –

தமிழர்க்கு எது எது தேவை என்பதைத் **தானே தீர்மானித்து,** அவையும் எப்போது எப்போது தேவை என்பதையும் **தானே தீர்மானித்து,** தமிழர்களின் விருப்பு வெறுப்புக்களையும் **தானே தீர்மானித்து:** தமிழர்கள் அரசியல் பிரச்சினைகள் பற்றி அக்கறைப்படவில்லை – அவர்களுக்கு அன்றாடப் பிரச்சினைகளே உள்ளன என்பதையும் **தானே தீர்மானித்து,** முடிவாக, வெறும் மின்சாரத்திற்கும், 'சதோச'வில் விற்கும் மிதிவண்டிரயருக்கும், 'கொக்கோகோலா' பானத்திற்காகவும் **மாத்திரமே போராடிய மக்கள்** – அவர்கட்கு அரசியற் பிரச்சினைகளே இல்லை என்ற தீர்மானத்தையும் தானே தீர்மானிக்கக்கூடிய விதமாகச் செயற்படுகின்ற – மிகச் சாதுரியமான பேரினவாத அரசியலை இலக்கு வைத்து, இத்தகைய தீர்மானங்களுக்குரிய அரசியல் அநாதை நிலைக்குத் தமிழ் தேசிய இனத்தைக் கொண்டுவரும் பணியேற்றுள்ள 'புனருத்தாரண' குழு மீது மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தலான தண்டனையுமாகும். இத்தருணத்திற்தான் ஒரு விடயம் ஐயமறத் தெளிவாகின்றது.

இப்போது தங்கள் முன் இன்முகங்காட்டித் தொண்டாற்றி நிற்பது, இதுவரையும் தம்மை அடக்குமுறைக்குள் வைத்திருந்த ஒரு அந்நியப்படை என்பதையும் –

அந்தப் படையைக் கொண்டு வஞ்சக நாடகமாடி நிற்பது, தமக்கு ஒருபோதுமே நீதி வழங்கமாட்டாத சிங்களப் பேரினவாத ஆளும் வர்க்கமும், அவர்களைக்கொண்ட அரசுமே என்பதையும் தமிழ் மக்கள் எப்போதுமே மறந்துவிடாத நிலையில் – **எந்த மக்களைத் தனது படைகள் மீட்டெடுத்ததாக அரசு இப்போது** பிரச்சாரங்களைச் செய்கின்றதோ, அந்த **மக்களிடமிருந்தே தன் படைகளை நாளை மீட்டெடுக்க முடியாமல், அது** அவதிப்படப்போகின்றது! ✷

www.tamilarangam.net


புகைப்படம்: பிரசன்னா

# மக்களுக்கு உணர்வெழுச்சி தந்த முல்லைப் படைத்தள வெற்றி

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த இராணுவ நடவடிக்கைகளாலும் – அதனால் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வுகளாலும், மனச் சோர்வுற்றிருந்த மக்களின் உள்ளங்களில் – முல்லைத்தீவு படைத்தளம் மீதான தாக்குதல் பெரியதொரு உணர்ச்சிப் பெருக்கையும், உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இராணுவ அழுத்தங்களை மீறியவாறு – விடுதலைப்போராட்டத்தின் வழிப்போக்கு எவ்விதம் செல்லப்போகிறது, படைத்துறையில் ஏற்பட்ட பின்னடைவுகளை வெற்றி கொள்ள முடியாதா? என மக்கள் தரப்பில் எழுந்த பல்வேறு வினாக்களுக்கு, கடந்த யூலை 18 வியாழன் அதிகாலையில் – விடுதலைப் புலிகள் அளித்த தெளிவான பதிலின் மூலம் இந்த உறுதிப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

யாழ். குடாநாட்டில் – சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைகளினால், விடுதலைப் போராட்டத்தை நேசித்த மக்களின் மனங்களில் நிழலாடிய துயரப்படிமங்கள் – கடந்த யூலை 18 வியாழன் அதிகாலை முதல் கட்டம் கட்டமாக அகலவும் ஆரம்பித்தன.

முல்லைத்தீவு படைத்தளத்தினுள் புலிகள்

> காலம் காலமாக – மக்களை அழித்து – எமது வரலாற்றுப் பக்கங்களை இரத்தக் கறைகளால் நிரப்பிய – ஆட்டிலறிப் பீரங்கிகள், இன்று புலிகள் வசமாகிப் போனதில் ஒவ்வொருவருமே அகமகிழ்ந்து போயினர்.


புகைப்படம்: கஜனி

புகுந்து விட்டதாக அங்கொன்றும் இங்கொன்றுமாக – அன்று காலையில் செய்திகள் பரவ ஆரம்பித்தபோது, மக்களின் மனதில் ஏற்பட்ட மகிழ்ச்சிப் பெருக்கை அவர்களின் முகங்களில் தெளிவாகக் காணமுடிந்தது.

மேலும் மேலும் விபரங்களை அறிய, வீதிகளில் புறப்பட்டுச் சென்ற மக்கள் கூட்டமும் ஒவ்வொரு தொகுதி தொகுதியாகக் கூடிக் கதைத்து குதூகலித்த மக்களும் – தேசத்தின் உணர்வை வெளிக்காட்டினர்.

பரந்து விரிந்திருந்த பெரும் படைத்தளப் பிரதேசமொன்றை – ஒரு சில மணிநேரங்களுக்குள் தமது கையில் எடுத்துக் கொண்ட புலிகளின் வீரமிகு தாக்குதலின் விளைவுகளை நேரில் அறிந்து கொள்ள –புதுக்குடியிருப்பை நோக்கிச் செல்லும் வீதிகளில் மக்கள் அலைமோதி நின்றனர். தத்தம் வீட்டு வளவுகளில் நின்றபடி நாம் நேரில்

**-நிதர்சனா**

காணமுடியாத அதிசயத்தை – பார்த்து வந்தவர் முகங்களிலாவது தெரிந்து கொள்வோம் எனக்கூறுகின்ற வயோதிபர்களும்,

தமது பிள்ளைகள் வீரவரலாறு படைத்து வரும் காட்சியைக் கண்குளிரப் பார்ப்பதற்கு முண்டியடித்து நின்ற தாய்மார்களும்,

படைத்தளத்தைத் தகர்த்துவிட்டு, இராணுவ ஆயுத தளபாடங்களை அள்ளிவரவென – புலிகளுடன் கூடச்செல்ல போட்டியிட்ட இளைஞர் கூட்டமும் – எமது மண்ணின் விடுதலை வேட்கை வற்றிப் போய்விடவில்லை என்பதைத் துலாம்பரமாகக் காட்டி நின்றனர்.

பிரதான வீதிகளில் ஒலிக்கத் தொடங்கிய புரட்சிப்பாடல்களோடு, காற்றிலாடிய மஞ்சள், சிவப்புப் தோரணங்களும் மக்களின் உணர்வுகளைத் தம்மோடு இணைத்துக் கொண்டன.

இதேவேளை, முல்லைத்தீவு படைத்தளத்திலிருந்து லொறிகளிலும், உழவு இயந்திரங்களிலும் அள்ளிக் குவிக்கப்பட்ட ஆயுத தளபாடங்கள் வீதிகளில் வர ஆரம்பித்ததுமே மக்களின் உணர்வலைகள் எல்லை மீறின.

குறிப்பாக – 'ஆட்டிலறி' செலுத்திகளை புலிகள் கொண்டு வந்தபோது எழுந்த கரகோசங்களும், மகிழ்ச்சிப் பெருக்கால் கண்களில் நீர் மல்க புலிகளைக் கட்டியணைத்தவர்களுமாக – வானளாவப் பரவசமான சூழ்நிலைகொண்டது.

காலம் காலமாக – மக்களை அழித்து – எமது வரலாற்றுப் பக்கங்களை இரத்தக் கறைகளால் நிரப்பிய – ஆட்டிலறிப் பீரங்கிகள், இன்று புலிகள் வசமாகிப்


தொடர்ச்சி 14 ம் பக்கம் ...


புகைப்படம்: கஜனி

**அள்ளப்பட்ட ஆயுதங்களின் விபரம் ம் பக்கத்தில் உள்ளது**


புகைப்படம்: பிரசன்னா

கொல்லப்பட்ட இராணுவத்தின் உடல்கள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பலம் மிகுந்த படைத்தளமும் ஜீரணிக்க முடியாத தோல்வியும்

- ரகு

ல்லைத்தீவு படைத்தளம் மீதான க்குதல் மூலம், விடுதலைப் புலிகளின் ார்முறைத் தந்திரத்தில் ஏற்பட்ட ணாம வளர்ச்சி மீண்டும் ஒருமுறை ளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ாணுவ ரீதியான அழுத்தங்களின் மூலம் ர்னடைவைச் சந்தித்திருப்பதாகக் நதப்பட்டு வந்த – விடுதலை மைப்பொன்று மரபுவழி சார்ந்த க்குதல் ஒன்றை வெற்றிகரமாக நடாத்தி டித்திருப்பது உலகின் கவனத்தைப் ரிதும் ஈர்த்திருக்கிறது.

துவரை காலமும் கெரில்லா முறைப் ார்த் தந்திரத்தில் சிறந்தவர்கள் என்று நதப்பட்டு வந்த விடுதலைப் புலிகள், ரில்லாப் போர்முறையின் நுட்பங்களைப் ன்படுத்தி மரபுவழிப் போரொன்றை ாத்தியிருப்பதும் – ஒரு பட்டாலியன் ளவு துருப்புக்கள் நிலைகொண்டிருந்த டைத்தளப் பிரதேசமொன்றை நான்கு னங்களுக்குள் முற்றாகத் தமது ட்டுப்பாட்டில் கொண்டு வந்தமையும் – ராணுவ நிபுணர்கள் மத்தியிலும் டைத்துறை மதிப்பீட்டாளர்கள் ந்தியிலும் பெரும் வியப்பைத் தோற்று த்துள்ளது.

டுதலைப் புலிகளின் போர்முறைத் ர்ச்சியை இத்தாக்குதல் சுட்டிக்காட்டும் தேவேளை, முல்லைத்தீவு இராணுவத் ளத்தின் கேந்திர முக்கியத்துவமும் தன் விஸ்தீரணமும் புலிகளால் ட்டப்பட்ட இராணுவ வெற்றியின் க்கியத்துவத்தை வெளிக்காட்ட தக்கவை என்றே கூறலாம்.

றுக்கும் அதிகமான கிராமப்புற டியேற்றங்களையும், ஒரு ளர்ச்சியடைந்த நகரப் பகுதியையும் ன்னகத்தே கொண்டிருந்த முல்லை தீவுப் படைத்தளம், இலங்கைத்தீவின் டலோரப் பிரதேசத்தில் கேந்திர க்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது.

பார், தீவிரமாக நடைபெறும் வடக்கு–ிழக்குப் பகுதியில் – கடல் வழியான பாக்குவரத்தும் விநியோகமும் முக்கியத்துவம் பெற்றுவிட்ட இக்கால பகுதியில், கிழக்குக் கடற்பகுதியிலிருந்து வடபகுதி பிரதேசம் வரையான நீண்ட தொலைவிற்கு ஒரு மத்திய நிலைய மாகவும், கண்காணிப்பு மையமாகவும் முல்லைத்தீவு படைத்தளம் செயற்பட்டு வந்தது.

இயற்கையான புவியியல் காரணிகளால் இப்படைத்தளத்தின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

கிழக்கே இந்துமா கடலும் மேற்கே நந்திக் கடலுமாக இந்தப் படைத்தளம் – இராணுவ நோக்கல்களால் கூறப்படுவதுபோல் தனிமைப்படுத்தப்பட்டிருந்தமையால், இத்தளம் தாக்குதலுக்கு இலக்காகும் வாய்ப்புக்கள் பற்றி சந்தேகம் காணப்பட்டும் வந்தது.


முற்றிலுமாக இராணுவ மயமாக்கப்பட்ட இந்தப் பிரதேசம் – வட்டுவாகல், செல்வபுரம், மணற்குடியிருப்பு, கரைச்சிக் குடியிருப்பு, கள்ளப்பாடு, உண்ணாப்புலவு ஆகிய கிராமங்களையும், முல்லைத்தீவு நகரப் பகுதியையும் கொண்டு – சுருக்கமாகக் கூறப்போனால் "இராணுவக் குடியிருப்பு" போன்றதொரு அமைப்பையே பெற்றிருந்தது.

**இதுவரை காலமும் கெரில்லா முறைப் போர்த் தந்திரத்தில் சிறந்தவர்கள் என்று கருதப்பட்டு வந்த விடுதலைப் புலிகள், கெரில்லாப் போர்முறையின் நுட்பங்களைப் பயன்படுத்தி மரபுவழிப் போரொன்றை நடாத்தியிருப்பதும் – ஒரு பட்டாலியன் அளவு துருப்புக்கள் நிலைகொண்டிருந்த படைத்தளப் பிரதேசமொன்றை நான்கு தினங்களுக்குள் முற்றாகத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தமையும் – இராணுவ நிபுணர்கள் மத்தியிலும் படைத்துறை மதிப்பீட்டாளர்கள் மத்தியிலும் பெரும் வியப்பைத் தோற்றுவித்துள்ளது.**

இந்த அளவு பெரிய விஸ்தீரணத்தைப் பாதுகாப்பதற்காக – சிறிலங்கா இராணுவத்தின் மிகமுக்கியமான படைப்பிரிவுகளான சிங்க 'ரெஜிமெண்டினதும்', 'கஜபாகு ரெஜிமெண்டினதும்' படையணிகள் இங்கு நிலைகொள்ள வைக்கப்பட்டிருந்தன. இப்படையணிகளை நிர்வாகம் செய்யும் கட்டளை அதிகாரியாக பிரிகேடியர் தரத்திலுள்ள அதிகாரியான பெர்ணான்டோ என்பவர், இத்தளத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதைவிட, முல்லைத்தீவுப் படைத்தளத்தை மேலும் பலப்படுத்தும் நோக்கில் – நடுத்தர வீச்சு 'ஆட்டிலறி' செலுத்திகளும், கனரக ஆயுதங்களும்

தொடர்ச்சி 14 ம் பக்கம்...


புகைப்படம்: பார்த்தமன்


புகைப்படம்: சசி


புகைப்படம்: கஜனி






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் ஏழு

( தொடர்ச்சி )

ஒரு ஏழை என்றும் நாடக மேடைக்கு ஓடினாள் என்பது மட்டுமே.

காலங்கள் சென்றன. புரூஸ் இராணுவ சேவையில் இணைந்து கொண்டு, நெடி அஸ்ரனை மணந்து கொண்டான். பிள்ளைகளான அல்பேர்ட்டும் மார்த்தாவும் பிறந்தார்கள். கரோல்ட் சுதர்லாண்ட் இறந்துவிட, டெபோரா வயதில் முதிர்ந்தாள்.

அது நிகழ்ந்த நாள் புரூசுக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. அவன் அன்று நெடியோடும், குழந்தைகளோடும் ஒரு நீண்ட விடுமுறையைக் கழிப்பதற்காக சுதர்லாண்ட் மேட்டுநிலங்களுக்கு வந்தான். டெபோரா வழமையாக ஒன்றில் தனது ரோஜா தோட்டத்திலேயோ, அல்லது இளம்செடிகொடிகளைப் பயிரிட்டுப் பாது காக்கும் இடத்திலோ (Concervatory) அல்லது வீட்டு வேலைகளில் மகிழ்வுடன் மிதந்து கொண்டோ, புன்சிரிப்புடனும், மகிழ்ச்சியுடனும் மகிமையுடனும் காண ப்படுவாள். ஆனால், அன்றைக்கு அவனுக்கு முகமன் கூற அங்கிருக்காததோடு, எங்கிருக்கிறாள் எனத் தேடிக்கண்டுபிடி க்கவும் முடியவில்லை. கடைசியாக அவளைக் கண்டுபிடித்தபோது அவள் வீட்டின் அறையொன்றில் இருளில் தனிமையாக அமர்ந்திருக்கக் காண ப்பட்டாள். இது அவளது இயல்புக்கு முற்றும் மாறாகக் காணப்பட்டது, அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவள் ஒரு சிலையைப் போல் சுவரையே பார்த்துக்கொண்டு, சுற்றுப்புறங்களிலிருந்து முற்றாகவே அந்நியமான நிலையில் காணப்பட்டாள்.

புரூஸ் தாயாருடைய கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு அவளருகே முழந்தாளிட்டபடி "ஏதாவது பிரச்சினையா அம்மா?" என்று கேட்டார்.

அவள் மிக மெதுவாகத் திரும்பி "இன்று யொம் கிப்பூர் பிராயச்சித்தம் செய்யும்நாள். (Yom Kippur-செய்த பிழைகளுக்குப் பரிகாரம் தேடும் நாளான ஒரு யூத மத விசேட தினம்)

அவளுடைய வார்த்தைகள் எலும்புகளைக் குளிரவைக்கும் அளவிற்குத் திகிலூட்டின.

புரூஸ் இதைப்பற்றி நெடியுடனும், தனது சகோதரியுடனும் கலந்தாலோசித்தான். தகப்பனார் இறந்தபின்பு அவள் மிகுந்த தனிமைப்பட்டுவிட்டதால்தான் இப்படியாகிவிட்டதென்றும், அத்தோடு சுதர்லாண்ட் மேட்டுநிலச் சொத்துக்களைப் பராமரிப்பதும் அவளுக்கு மிகுந்த சுமையாகிவிடும் என்றும் மேரிக்கு அண்மையில் இருக்கும் பொருட்டு, லண்டனில் ஒரு வீட்டுக்கு அவளைக் கொண்டு செல்லவேண்டும் என்றும் முடிவு செய்தனர். அப்படியும் அவள் வயதாகிக்கொண்டே சென்றாள். ஆனால் அவர்களுக்கு அதை உணர்வது கஸ்டமாயிருந்தது. ஏனெனில் அவர்களது சிறு வயதில் அவள் எப்படி அழகாயிருந்தாளோ, அப்படியே இப்போதும் இருப்பதுபோல் அவர்களுக்குத் தோன்றியது.

புரூசும் நெடியும் அவர்களது கடமைக்காக மத்திய கிழக்குச் சென்றனர். தாயார் நலமாயிருப்பதாகவே மகிழ்ச்சிகரமான கடிதங்கள் மேரியிடமிருந்து வந்து கொண்டிருந்தன. டெபோராவிடமிருந்து வந்த கடிதங்களோ, மேரியின் குடும்பத்தோடு லண்டனில் இருப்பது பற்றிய அவள் மகிழ்ச்சியைப் பிரதிபலித்தன.

ஆனால், புரூஸ் லண்டனுக்கு வந்தபோது கதை வேறாக இருந்தது. மேரி தன்னுடைய அலுவல்களையே கவனித்துக் கொண்டிருந்தாள். தாயார் இப்போ 70வயதாகிவிட்டதோடு, மேலும் மேலும் விசித்திரமான முறைகளில் நடந்து கொண்டிருந்தார். முதுமை ஏறிக்கொண்டிருந்தது. முதல்நாள் நடந்த சம்பவங்களை மறந்துவிடும் அதே நேரம், 50வருடங்களுக்கு முன் நடந்த சம்பவங்களை பற்றித் தொடர்பற்ற முறையில் உளறிக்கொண்டிருந்தாள்.

இது மேரிக்கு மிகுந்த பயத்தைக் கொடுத்தது. ஏனெனில் தாயார் முன்னர் ஒருபோதும் தன்னுடைய கடந்த காலத்தைப்பற்றி பிள்ளைகளிடம் சொன்னதில்லை. திடீர் திடீரெனத் தாயார் காணாமல் போவது பற்றி மேரி மிகவும் பயந்திருந்தாள்.

புரூஸ் திரும்பியதனால் மேரி மிகவும் மகிழ்சியடைந்தாள். அவன்தான் குடும்பத்தில் பெரியவனாயும், தாயாருடைய செல்ல மகனாகவும் இருந்ததோடு, உறுதியான நடவடிக்கைகளை எடுக்கக்கூடியவனாகவும் இருந்தான். ஒருநாள் புரூஸ் தாய்க்குத் தெரியாமலேயே அவள் செல்லும் மர்மமான இடத்துக்குப் பின்தொடர்ந்தான். அவள் போய்ச்சேர்ந்த இடமோ வைற்சப்பலில் (White Chaple) இருந்த ஒரு யூத ஆலயமாகும். (சின்னகோக்– Synagogue) - யூத வழிபாட்டிடம்.)

இவையெல்லாம் ஆறுதலாக ஆராய்ந்தபின், அவளை அவளின்பாட்டில் விட்டுவிட முடிவுசெய்தார். அவள் வயது முதிர்ந்தவள். 50வருடங்களுக்கு முன் நடந்தவைகளை அவளுக்கெதிராக இப்போ தூக்கிப் பிடிப்பது அவ்வளவு சரியில்லை. மெதுவாக மறந்து விடுவதுதான் நல்லது என நினைத்தார்.

எழுபத்தைந்து வயதானபோது அவள் மரணப்படுக்கையில் வீழ்ந்தாள். புரூசும் சரியான நேரத்தில் இங்கிலாந்து வந்து சேர்ந்தார்.

தனது மகன் தனது கட்டிலருகில் அமர்ந்திருப்பதைக்கண்டு புன்னகைத்தபடி அவள், "புரூஸ் என்மகனே...... நீ இப்போ ஒரு லெப்டினன்ட் கேணல் இல்லையா? நீ எவ்வளவு நன்றாயிருக்கிறாய்....... எனக்கு இன்னும் அதிக நேரமில்லை.

"ஸ்......ஸ்......அம்மா அதிகம் பேசவேண்டாம். நீங்கள் கெதியில் சுகமாகி நடமாடுவீர்கள்."

"இல்லை நான் உனக்குச்சில விடயங்களைச் சொல்லியாக வேண்டும்."

நான் உனது தகப்பனாருக்குச் சிறந்த மனைவியாக இருக்க முயன்றேன். சுதர்லாண்ட் மேட்டு நிலங்களின் சிறந்த எஜமானியாயிருக்க முயன்றேன். ஆனால், நான் ஒரு கொடுமையான காரியத்தைச் செய்து விட்டேன். என் சொந்த மக்களை நான் புறக்கணித்து விட்டேன். நான் இப்போ அவர்களுடன் இருக்க விரும்புகிறேன். புரூஸ்......புரூஸ் எனது தந்தையாருக்கும், தாயாருக்கும் பக்கத்தில் என்னைப் புதைப்பதாக எனக்கு வாக்குறுதியளிப்பாயா?

> "ஸ்.......ஸ்........அம்மா அதிகம் பேசவேண்டாம். நீங்கள் கெதியில் சுகமாகி நடமாடுவீர்கள்."
> "இல்லை நான் உனக்குச்சில விடயங்களைச் சொல்லியாக வேண்டும்."
> நான் உனது தகப்பனாருக்குச் சிறந்த மனைவியாக இருக்க முயன்றேன். சுதர்லாண்ட் மேட்டு நிலங்களின் சிறந்த எஜமானியாயிருக்க முயன்றேன். ஆனால், நான் ஒரு கொடுமையான காரியத்தைச் செய்து விட்டேன். என் சொந்த மக்களை நான் புறக்கணித்து விட்டேன். நான் இப்போ அவர்களுடன் இருக்க விரும்புகிறேன். புருஸ்........புருஸ் எனது தந்தையாருக்கும், தாயாருக்கும் பக்கத்தில் என்னைப் புதைப்பதாக எனக்கு வாக்குறுதியளிப்பாயா?
> "நான் கட்டாயம் செய்கிறேன் அம்மா."

"நான் கட்டாயம் செய்கிறேன் அம்மா."

"எனது தகப்பனார்....... உனது பாட்டனார்......... அவரை உனக்குத் தெரியாது......... நான் சிறு பெண்ணாக இருக்கும் போது தனது மடியில் என்னை அணைத்தபடி எனக்குச் சொல்வார், "விழித்தெழு........ விழித்தெழு....... டெபோரா விழித்தெழு........ விழித்தெழு......"

அவைதான் டெபோரா சுதர்லாண்டின் இறுதி வார்த்தைகளாயின.

தாயின் உயிரற்ற உடலுக்குப்பக்கத்தில், உறையவைக்கும் துயரத்தோடு ஒரு மணித்தியாலம்வரை புரூஸ் அமர்ந்திருந்தார். ஒரு இறந்த வயதான பெண்மணிக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றத்தான் வேண்டுமா என்ற ஐயம், அவர் மனதில் இருந்து விலக்க முடியாதபடி குழப்பி இவ்வுலக நிலையில் இருந்து அவரை வெளியே இழுத்தது.

அவர், தவிர்க்க முடியாமல் கொடுத்த ஒரு வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டுமா? அப்படிச் செய்யாவிட்டால் தான் இதுவரை வாழ்க்கை முறையாகக் கொண்டிருந்த கௌரவத்துக்காகக் கைக்கொள்ளும் விதி முறைகளைச் சிதறடித்துவிடுவதாக அது அமைந்து விடாதா? கடந்த சில வருடங்களாக டெபோரா சுதர்லாண்டின் மனநிலை சிறிது சிறிதாக அவளது கடந்த காலத்தைக் குறித்துப் பாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தது உண்மைதானே? அவள் உயிரோடிருந்தபோது ஒரு யூதப் பெண்ணாக வாழவில்லை. இறந்தபின் அப்படியிருக்க வேண்டிய தேவையென்ன? டெபோரா ஒரு சுதர்லாண்ட்தான். வேறெப்படியும் இருக்கத் தேவையில்லை.

லண்டனில் ஏழ்மையான பகுதியிலிருக்கும், அலங்கோலமான யூத சேமக்காலையில் அவளைப் புதைக்கப் போனால் எவ்வளவு மரியாதை கேடுகளை விளைவிக்கும். தாயார் இறந்து விட்டாள். அவர் விருப்பப்படி செய்யப்போனால் சீவிப்பவர்களான நெடி, அல்பேர்ட், மார்த்தா, மேரியுடைய குடும்பத்தவர், அடம் எல்லோருடைய மனங்களும் உடைந்து விடும். சீவிப்பவர்களைத் திருப்திப்படுத்தியாக வேண்டும்.

அவர், தனது தாயாரை இறுதியாக முத்தமிட்டுப் பிரியாவிடை கூறியபின், அறைக்கு வெளியே செல்லும் போதே தனது முடிவை எடுத்துவிட்டார்.

டெபோரா, சுதர்லாண்ட் மேட்டு நிலக்குடும்ப மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டாள்.

அந்த சைரன்கள்......

அகதி வாகனத் தொடரின் சைரன்......

சைரன்களின் ஓசை அதிகமாகி அதிகமாகி, அவரது காது சவ்வுகளைக் கிழித்துச் செல்வது போல் மேலும் அதிகமாகிக் கொண்டே சென்றது. பேர்கன் – பெல்சன்....... மரினா....... நெடி....... கூண்டுபோல ட்ரக் வண்டிகள்....... காராஒலொஸ் முகாம்கள்......... நான் வாக்களிக்கிறேன் அம்மா....... சத்தியமாய்ச் செய்கிறேன் அம்மா.....

இடியோசையொன்று கட்டிடத்தின் அத்திவாரத்தையே உலுக்குவது போல் முழங்கியது. கடல் அலைகளோ ஆக்ரோஷமாக எழுந்து கரையில் மோதி வீட்டுக்குள்ளேயே வர முயன்றன. சுதர்லாண்ட் போர்வைகளை உதறி எறிந்து விட்டுக் குடித்தவர் போல் அறையினுள் தட்டுத் தடுமாறினார். அவர் யன்னலுள்ளால் பார்த்தபடி உறைந்து போனார்.

மின்னல்....... முழக்கம் உயர்ந்து வரும் நீர்மட்டத்தின் ஆவேசம்.

"கடவுளே! கடவுளே!........ கடவுளே.....!கடவுளே......!"

"பிரிகேடியர் சுதர்லாண்ட்! பிரிகேடியர் சுதர்லாண்ட்! எழுந்திருங்கள்' எழுந்திருங்கள். " கிரேக்கப் பணியாளன் அவரைப் பலமாக உலுக்கிக் கொண்டிருந்தான்.

சுதர்லாண்டின் கண்கள் திறந்து அங்கும் இங்கும் இலக்கற்று விழித்து நோக்கின. உடல் முழுவதும் வியர்வையால் நனைந்து, இதயம் வேதனையோடு பலமாக அடித்துக் கொண்டிருந்தது. அவரது மூச்சுத் திணறியது. பணியாளன் அவசரம் அவசரமாகப் பிறண்டி கொண்டு வந்து

**லியோன் யூரிஸ்**

அவருக்குக் கொடுத்தான்.அவர் வெளியே கடலைப் பார்த்தார். எப்போதும் போலவே இரவு அமைதியாய் இருந்தது. கண்ணாடி போலக் காட்சியளித்த கடல் நீர் மென்மையாகக் கரையில் மோதிக் கொண்டிருந்தது.

எனக்கொன்றுமில்லை........ எனக்கொன்றுமில்லை...... என்றார்.

"நிச்சயமாக ஒன்றுமில்லையா ஐயா?......"

"ஆமாம்"

கதவு பூட்டிக் கொண்டது.

புரூஸ் சுதர்லாண்ட் கதிரையொன்றினுள் சரிந்து, முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டு விம்மியபடி திரும்பத்திரும்ப முணுமுணுத்தார்.

" சொர்க்கத்திலிருக்கும் என் தாயே........ சொர்க்கத்திலிருக்கும் என் தாயே...... ✷

தொடரும்

www.tamilarangam.net



சிறுகதை




கொற்றவை

குறிப்பிட்ட நாட்களுக்குள் அந்த ஊரின் கோலம் மாறிப்போய் இருந்தது. மரணபயம் குடிகொண்ட இரவுகளும் வெறுக்கத்தக்க அமைதியும் அவளுக்குப் பீதியை உண்டாக்கின. அவளது கால்கள் நடக்கும் சக்தியற்றுத் தொய்ந்தன. இந்த இடத்தைவிட்டுப் போய்விட வேண்டும். தாமதித்துக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு கணமும் ஏதோ ஓர் அவலத்தில் கொண்டுபோய் முடியலாம்.

கெதியாய்ப் போய் வீட்டுக்குச் சேர வேணும். பிள்ளைகள் என்ன பாடோ? மூத்தவன் ஒரு சுடுசுடுத்தான். கால்களிலை இறக்கை கட்டிக்கொண்டு திரிவான்.

அவளது மனம் பரபரத்தது.

ஐயோ! என்ன இது? வீதியில் பள்ளத்துக்குள் இரத்தம் தோய்ந்தபடி........ சந்தேகமே இல்லை! ஒரு ஒற்றைக்கால்! என்ன அநியாயம்! ஐந்து வயதுப்பிள்ளை அல்லது ஏழு வயதுக்குள் வெட்டி எறியப்பட்ட நிலையில். அவளுக்கு அதில் நிற்கப் பயமாக இருந்தது. மூத்தவனின் ஞாபகம் வந்தது. எப்படித்தான் ஓடி வந்து சேர்ந்தானோ?

> நாய் இப்போது படலையைப் பார்த்துக் குரைக்கத் தொடங்கியது. கரிய உருவங்கள் அசைவது நின்றது. அவளுக்கு இதயம் தொண்டைக்குழிவரை வந்ததுபோல இருந்தது. வாய் மட்டும் "முருகா" என்றபடி ஓயாமல் உச்சரித்தது. அந்த உருவங்கள் படலையைத் தள்ளின. சப்பாத்துக் காலொன்றின் பலமான உதைப்புக்குப் பின்னே படலை திறந்தது.

வீடு அமைதியாக இருந்தது.

உயிரை உலுக்கிக்கொண்டு போகின்ற அதிர்வோடு எறிகணை ஒன்று வெடித்துச் சிதறியது. மூலையில் படுத்திருந்த நாய் வாலைத் தொங்க விட்டபடி அங்குமிங்கும் அந்தரித்து ஓடியது.

அவளது இளைய மகன், காதுகளைப் பொத்திக்கொண்டு சுவரோரமாகத் தன்னைக் குறுக்கிக்கொண்டான். அவளது மூத்தமகனும் நடுவில் கவிக்குட்டியும் அவளது இருபக்கத்திலும் வந்து அவளை இறுகக் கட்டிக்கொண்டனர். சூரியன் மறையத் தொடங்கியது. யாழ்ப்பாணத்து வீடுகளும் வீதிகளும் இருளில் மூழ்கி அரவங்கள் ஒடுங்கிப் போய் இருந்தன. வழமையாக முற்றத்து மாமரத்திலே கூட்டமாகக் குரலெழுப்புமே அந்தப் பெயர் தெரியாத குருவிகள் கூடக் காணாமல் போய்விட்டனவோ! எல்லாமே கனவாகிப்போன வாழ்க்கையாகப்பட்டது. முற்றத்துப் பூமரங்கள் வாடிப்போய் இருந்தன, அவர்களது முகங்களைப்போல.

அவளுக்கு வெளியில் செல்லப் பயமாக இருந்தது. முன் விறாந்தைக்குள் வந்து 'சீலிங்' பலகையின் மறைப்புத் தட்டி வழியாக வெளியே பார்த்தால், அங்கிருந்தபடியே வெளி முற்றமும் நடைபாதையினூடாகத் தெரிகின்ற தார்வீதியும் தெரியும். அவள் செல்ல எழுந்தாள். எந்தப் பொருளிலாவது கால் தட்டுப்பட்டு ஓசை உண்டாக்கிவிடக்கூடாது என்ற நிதானத்தோடு மெல்ல நடந்தாள். அந்தக் கனத்த காலடி ஓசைகள் கேட்டுக்கொண்டே இருந்தன.

மூன்று பிள்ளைகளும் அவள் போகும் இடமெல்லாம் அவள் உடுத்திருந்த பாவாடையில் ஒவ்வொரு பக்கத்தையும் பிடித்தபடி இழுபட்டனர். அவர்களது மனங்களில் பீதியும் பயமும் குடிகொண்டிருந்தன. இளையவன் போட்டிருந்த காற்சட்டை பயத்தால் நனைந்திருந்தது. வெளியே சத்தம் வராமல் அவன் அழுதான். அவளுக்குத் தனது பிள்ளைகளைப் பார்க்க நெஞ்சு வலித்தது. இளையவனை நினைத்தால் எப்போதுமே அவளுக்கு மிகுந்த வேதனையாக இருக்கும். அவனொரு பயந்தாங்கொள்ளியாக மாறியிருப்பது அவளுக்குத் தாங்கமுடியாமல் இருக்கும். சுப்பசொனிக்கின் இரைச்சலையும் எறிகணையின் கனத்த அதிர்வினையும் அவனால் தாங்கிக்கொள்ளவே முடியாது. அனேகமான பொழுதுகள் அவன் தனது காற்சட்டை நனையத் தாயிடம் அலறியபடி ஓடிவருவான். அதன்பிறகு அவனது பயத்தைப் போக்கி அவனை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதென்பது பெரும்பாடாய் இருக்கும். கண்களில் மிகுந்த பயம் குடிகொள்ள, அவனது கைகள் அவளை விடாமல் பற்றிக்கொள்ளும். அந்தப் பிஞ்சுக் கைகளின் நடுக்கமும் விறைத்துக் கொண்ட விரல்களும் அவளிடம் அடைக்கலம் கொள்ளும்போது அவளது நெஞ்சு வலிக்கும். அவன் வயிற்றில் சிசுவாக இருந்தபோது அவளுக்கு ஏற்பட்ட பயங்களும் நடுக்கமுமே அவன் இவ்வாறு இருப்பதற்குக் காரணமாக இருக்க வேண்டுமென்று அவள் அடிக்கடி நினைப்பதுண்டு. அவனை வயிற்றில் சுமந்த அந்தக் காலங்களிலிருந்துதான் அவள் இந்த உலகில் தனியாக வாழத்தொடங்கினாள். அவளுக்குக் கணவன் என்று வந்து வாய்த்தவனின் பிரிவும் தாயின் சாவும் அடுக்கடுக்காய் நிகழ்ந்த துயரச்சம்பவங்களின் பாதிப்பும்தான் இவ்வாறு அமைந்ததற்குக் காரணமாக இருக்க வேண்டும்.

சப்பாத்துக் காலடிகளின் சீரான ஓசைகள் இப்போது கிட்டவாகக் கேட்டன. சிகரெட்டின் மணமும் சிங்கள மொழியின் வெறித்தனமான கூச்சல்களும் கேட்டுக்கொண்டே இருந்தன.

"இதுகளை வைத்துக்கொண்டு தனியாக என்ன செய்யப்போறன்?"

அவளுக்கு மனம் எல்லாம் சோர்வாக இருந்தது.

"அம்மா தேத்தண்ணி வேணும்"

"சீனி முடிஞ்சுது. நெருப்புப்பெட்டி இல்லை"

"அம்மா நான் வாங்கி வரட்டுமோ?"

எட்டு வயது மூத்தவனை அனுப்புவது யோசனையாக இருந்தது. வெளியில் போனால் என்ன நடக்குமோ?"

சற்றுத் தூரத்திலே துப்பாக்கி வெடித்து ஓய்ந்தது. யாரோ கலவரப்பட்டு ஓடுகின்ற சத்தங்கள் தெளிவாகக் கேட்டன. "வா.....சு....கி" என்று பெயரைச் சொல்லித் துயரத்தோடு ஒலிக்கின்ற ஒரு பெண்ணின் குரல் கேட்டது. சாவு ஓலத்தோடு அந்தக் குரல் காற்றில் உரத்துக் கேட்டது. எதுவோ நடக்கக் கூடாதது நடந்திருக்க வேண்டும்.

இவளது உள்மனம் சொல்லிக் கொண்டது.

எந்த நேரமும் அவளது வாசற் கதவு தட்டப்படலாம். இரும்புக்கரங்கள் மேனியைத் தீண்ட நேரிடலாம். அப்போதைக்கு அந்தப் பயம் நிறைந்த எதிர்பார்ப்பு மட்டுமே அவளிடம் எஞ்சியிருந்தது.

சின்னையா இப்போது இருமத் தொடங்கிவிட்டார். அந்த இருமல் அடங்கச் சில கணப் பொழுதுகள் அல்லது சில நிமிடங்கள் எடுக்கலாம். வாழ்க்கையில் அவளுக்குக் கிடைத்திருந்த ஒரு வயதுபோன ஆணின் பாதுகாப்பாகச் சின்னையா இருந்தார். அவளது அம்மாவின் கடைசி ஆசையின்படி அவரை இறுதிவரைப் பாதுகாக்கும் பொறுப்பு அவளுடையதாகவே இருந்தது. எழுபத்திரண்டு வயதில் அவளது தாயின் தம்பியான இந்தச் சின்னையாக் கிழவரிடம் எப்போதுமே அவளுக்குப் பாசம் உண்டு. எல்லா உறவுகளும் அவளைக் கைவிட்டுப் போன பின் வஞ்சிக்கப்பட்ட அவள் வாழ்க்கையில் இன்றும் அவளிடம் ஒட்டிப்போன உறவாக அவர் இருந்தார். முன்பு இருந்த நிலமையில் அவளது வீட்டுக்கு அவர் காவலாக இருந்ததில் அவளது சுமைகள் ஓரளவு குறைந்தன என்றே சொல்ல வேண்டும்.

"எண்டாலும் பிள்ளை வீட்டில ஒரு ஆம்பிளைத் துணை இருக்கவேணும். நீ தனிச்சுப்போய் நிற்கிறாய். அந்தரமாபத்துக்கு உதவிக்கெண்டாலும் சின்னையா உன்னோடு இருக்கட்டும்" என்று அவளது தாய் மனிசி அவளிடம் அடிக்கடி கூறுவதுண்டு. அந்தக் கூற்று அப்போது என்னவோ நியாயமாகப்பட்டாலும் இப்போது அதுவே அவளுக்குச் சுமையாகிப் போனதென்னவோ உண்மைதான். சின்னையாவை விட்டுவிட்டுப் போவது சரியில்லைத்தான்.



சின்னையாவின் இருமல் சத்தம் பெரிதாகக் கேட்டது.

இந்தச் சத்தத்தைக் கேட்டு அவங்கள் கதவைத் தட்டுவாங்களோ?

அவள், அவர் இருந்த அறைக்கதவை மூடப்போனாள்.

"மோனை எங்கை விழுந்தது? குறுக்கால போவாங்கள் ஆரைப் பலியெடுத்தாங்களோ?"

"சின்னையா சத்தம் போடாதையுங்கோ. அவங்கள் றோட்டால போறாங்கள் போலக்கிடக்குது."

> "குருத்துக்கள் எல்லாம் வாழுகிற வயதில சாகுதுகள். இந்தக் கிழத்தையெல்லாம் ஏன் கூப்பிடாமல் இருக்கிறாய் இறைவா?"

படுத்த படுக்கையாகி இருக்கும் சின்னையா மௌனமாகிப் போனார். சின்னையாவுக்குப் பாரிசவாதம் வந்து படுத்த படுக்கையாக்கிவிட்டது.

"குருத்துக்கள் எல்லாம் வாழுகிற வயதில சாகுதுகள். இந்தக் கிழத்தையெல்லாம் ஏன் கூப்பிடாமல் இருக்கிறாய் இறைவா?" என்று அவர் வேதனையும் விரக்தியுமாக அடிக்கடி புலம்புவதுண்டு. இருபத்தினான்கு மணித்தியாலங்களும் அந்தக் கட்டிலில் ஒவ்வொரு பக்கமாய்ப் புரண்டு படுத்தபடி மருமகள் கொண்டுவரும் புத்தகங்களைக் கண்களை இடுக்கிக்கொண்டு வாசிப்பதோடு, அவரின் வாழ்வு கழிந்துகொண்டிருந்தது.

"பிள்ளை ஊர்மனைக்குள்ள வந்திட்டாங்களோ மோனை?"

சின்னையாக் கிழவர் முகட்டு வளையில் வெறித்த கண்களைத் திருப்பி அவளிடம் கேட்டார்.

"என்னைப் பாராமல் மூண்டையும் கொண்டு தப்பிப் போவன் பிள்ளை" அவர் அவளை பரிதாபமாகப் பார்த்தார்.

நேற்று ஐஸ் கிறீம் கடைக்காரரின் மகளை அவர்கள் செய்த அலங்கோலத்தையும் அந்தக் குடும்பத்துக்கு ஏற்பட்ட கொடூரத்தையும் கேள்விப்பட்டதிலிருந்து சின்னையாக் கிழவர் அடிக்கடி அவளை நச்சரிக்கத் தொடங்கிவிட்டார்.

தன்னால்தான் அவள் வன்னிக்கு அப்போதே இடம் பெயர்ந்து

தொடர்ச்சி 14 ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முல்லைப் படைத்தளத்தில் அள்ளப்பட்ட ஆயுதவிபரம்

122 mm Howitzers ஆட்டிலறிப் பீரங்கி - 02

**மோட்டார்கள்**

| | |
|---|---|
| 120 mm Mortar - | 02 |
| 106 mm RCL M-40 A1 - | 01 |
| 81 mm Mortar - | 12 |
| 60 mm Mortar - | 30 |

**கனரக ஆயுதங்கள்:**

| | |
|---|---|
| 40 mm CIS-40 Grenade launcher - | 26 |
| T69-1 RPG launcher - | 29 |
| Type W-85 anti aircraft machine gun - | 03 |

**தன்னியக்க துப்பாக்கிகள்:**

| | |
|---|---|
| AK model rifles - | 1402 |
| G3A3 - | 05 |
| FNC - | 01 |
| RPD LMG - | 93 |
| T-81 LMG - | 02 |
| PK GPMG - | 26 |
| L-300 - | 04 |

**துப்பாக்கி உதிரிப் பாகங்கள்:**

PK GPMG Extra Barel - 22
PK GPMG Tripod - 16
PK GPMG Bolt - 01

**கைத்துப்பாக்கிகள்:**

| | |
|---|---|
| 45 Colt - | 01 |
| Browning - | 04 |
| TT-33 Tokarev - | 02 |
| CZ-75 - | 02 |
| Revolver 380 - | 01 |
| HK 69 A1 40mm Grenade pistol - | 03 |

**ரவைகள் (Bullets:)**

| | |
|---|---|
| 5.56-45 ss | 109 - 121,193 |
| 7.62-54 - | 84,452 |
| 7.62-51 - | 8,483 |
| 12.7-108 - | 23,377 |
| 12.7-98 - | 10,243 |

**தொடர் ரவைகள் (Linked Bullets:)**

| | |
|---|---|
| 7.62-39 - | 28,300 |
| 7.62-51 - | 80,800 |
| 7.62-54 - | 8,675 |

**கைக்குண்டுகள்:**

| | |
|---|---|
| 40mm Grenade - | 42 |
| Rifle Grenade - | 487 |
| 40mm RP Grenade - | 821 |
| Hand Grenade - | 2,846 |
| Smoke Grenade - | 138 |

**எறிகணைகள்:**

106mm RCL ammunition - 59

122mm Howitzer (ஆட்டிலறி) shells - 903
120mm Mortar shells - 2,297
81mm Mortar shells - 1,350
82mm Mortar shells - 30
60mm Mortar shells - 1,071
25 pounder shells - 672

**கண்ணிவெடிகள்**

Claymore - 334
Jumbing mines - 360
Pressure mines - 3,222
Vehicle mines - 369
Control mines - 65

**கண்ணிவெடி வெடிக்க வைக்கும் கருவி**

Hand Electrical Firing Device - 227

***தரையிறக்கப்பட்ட படையினரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்***

***மோட்டார்கள்:***

| | |
|---|---|
| 81mm Mortar - | 04 |
| 60mm Commando Mortar - | 01 |
| 60mm Mortar - | 03 |
| Mechem 40mm MGL - | 02 |

**தன்னியக்க துப்பாக்கிகள்:**

AK model Rifles - 85
RPD LMG - 16
MAG GPMG - 02
T-69 RPG Launcher - 05
PK GPMG - 01
Sniper rifle model AW - 01
UZI - 01

**ரவைகள்: (Bullets:)**

7.62-39 (AK Bullets) - 146,000
7.62-54 - 5,915
7.62-51 - 874

**தொடர் ரவைகள்: (Linked Bullets:)**

| | |
|---|---|
| 7.62-54 - | 2,675 |
| 7.62-51 - | 2,500 |
| 7.62-39 - | 900 |

இவற்றைவிட இராணுவத் தளத்தில் இருந்து பலவிதமான தொலைத்தொடர்பு சாதனங்கள், கடற்படைப் படகுகள், பவள் கவசவாகனங்கள் உட்பட பல இராணுவ வாகனங்கள், இராணுவ உபகரணங்கள் என்பனவும் புலிவீரர்களால் கைப்பற்றப்பட்டன. ✷

# மக்களுக்கு உணர்வெழுச்சி தந்த .....

போனதில் ஒவ்வொருவருமே அகம கிழ்ந்து போயினர்.

ஒருபுறம், இதுவரை கண்டிராத பெரும் ஆயுத தளபாடங்களை மக்களோடு இணைந்து புலிகள் அள்ளிவர, மறுபுறம் – உழவு இயந்திரங்களில் மலையெனக் குவித்து படையினர் சடலங்களும் எடுத்து வரப்பட்டன.

புலிகளால் மீட்கப்பட்ட ஆயுதக் குவியலை மகிழ்ச்சி பொங்கப் பார்த்து மகிழ்ந்த மக்கள் – படையினர் சடலங்கள்

> முல்லைப் படைத்தளத்தின் வீழ்ச்சியானது, இராணுவத்திற்கு எதிராக ஈட்டப்பட்ட மாபெரும் வெற்றியென்பதோடு, இராணுவ அழுத்தங்களால் சோர்வுற்றுக் கிடந்த மக்களின் விடுதலை வேட்கையை இன்னும் உரமூட்டியதும் – புதிய உத்வேகத்தையும் உறுதியையும் நிலைநாட்டியிருக்கிறது

எடுத்து வரப்பட்டபோது தினம்தினம் தம்மை அழித்து வந்த எதிரிகளை, உயிரற்ற நிலையில் பார்த்தும் ஆவேசமடைந்தனர்.

வீதிகளில் நின்ற சின்னஞ்சிறு பிள்ளைகளின் முகங்களில் கூட, இந்த வெறுப்பு தாண்டவமாடியதைக் காண முடிந்தது.

படைத்தளம் வீழ்ச்சி கண்டபோதும், வானிலிருந்து தன் இயலாத்தன்மையைக் குண்டுகள் வாயிலாகக் கிபிர்களும், எம்.ஐ–24களும் காட்டியவேளை கூட, மக்களிடம் பதற்றத்தைக் காண முடியவில்லை.

வட்டுவாகல் தாம்போதியைக் கடந்து, புலிகள் வசமான பவள் கவச வாகனங்களும், இராணுவ வாகனங்களும் தொடர் தொடராக வந்து கொண்டிருந்ததை – கிபிர்களாலும், எம்.ஐ–24களாலும் தடுக்க முடியாதிருந்தது.

ஒட்டு மொத்தத்தில், முல்லைப் படைத்தளத்தின் வீழ்ச்சியானது, இராணுவத்திற்கு எதிராக ஈட்டப்பட்ட மாபெரும் வெற்றியென்பதோடு, இராணுவ அழுத்தங்களால் சோர்வுற்றுக் கிடந்த மக்களின் விடுதலை வேட்கையை இன்னும் உரமூட்டியதும் – புதிய உத்வேகத்தையும் உறுதியையும் நிலைநாட்டியிருக்கிறது என்பதும் மிக முக்கியமானதாகும். ✷

# மரண வலி....
## (சிறுகதை)

போகாதிருந்தது அவருக்கு மிகுந்த கவலையை உண்டுபண்ணியது.

அவள் முன்விறாந்தைக்கு வந்தாள்.

சின்னவன் 'பசிக்குது' என்றபடி, அவளைப் பற்றிப்பிடித்த கைவிடாதபடி வந்தான்.

நாய் இப்போது படலையைப் பார்த்துக் குரைக்கத் தொடங்கியது. கரிய உருவங்கள் அசைவது நின்றது. அவளுக்கு இதயம் தொண்டைக்குழிவரை வந்ததுபோல இருந்தது. வாய் மட்டும் 'முருகா' என்றபடி ஓயாமல் உச்சரித்தது. அந்த உருவங்கள் படலையைத் தள்ளின. சப்பாத்துக் காலொன்றின் பலமான உதைப்புக்குப் பின்னே படலை திறந்தது. மூன்று, நான்கு........ ஐந்து........ ஆறு...... ஆறு பேர் வந்தனர். அவள் தனது மூன்று குழந்தைகளுடனும் அவசரமாக வெளியே வந்தாள். கைகள் மூன்று குழந்தைகளையும் இறுக அணைத்திருந்தன. குழந்தைகள் வீரிட்டுக் கத்தின.

சிங்களத்தில் அதட்டலான அவர்களின் மிரட்டல்களுக்கும் அரைகுறைத் தமிழில் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கும் அவள் நாக்குளற மறுப்புச் சொன்னாள்.

தனக்கு மூன்று குழந்தைகள் மட்டுந்தான் என்றும் கணவனைப் பிரிந்தபடி வாழ்கின்றேன் என்றதுமான அவளது வார்த்தைகளை அசட்டை செய்தபடி வீட்டுக்குள் சென்றனர். அவள் வெளியிலேயே நின்றாள். அவளை அவர்கள் உள்ளே வரும்படி வற்புறுத்தியும், அவள் எங்கோ பார்த்தபடி நின்றாள். அவளை அவர்கள் திரும்பத் திரும்ப அழைத்தார்கள். உயிர் போகின்ற அவலத்தோடு அவள் நின்றாள்.

சிறிது நேரத்தின் பின் அவர்கள் வெளியேறினர். அவர்களது அருவருக்கத்தக்க பார்வைகளும் செய்கைகளும் அவளுக்குச் சினத்தையும் மிகுந்த பயத்தையும் உண்டு பண்ணின. அதுவும் கடைசியாகச் சென்றவனின் பார்வையும் அவளது சேலைத் தொங்கலைப் பிடித்து இழுத்ததும்.........

ஐயோ......... இனி ஒரு நிமிடம்கூட அவள் அங்கு இருக்கப்போவதில்லை.

இனிவரும் நாட்களிலும் அவர்கள் வரலாம். வாழ்வு பயந்து நடுங்கிப்போன சிறையாகத்தான் இருக்கப்போகிறது. ஒரு பயணப் பைக்குள் உடுப்புக்களையும் சமைப்பதற்குத் தேவையான சில பாத்திரங்களையும் மட்டும் அடுக்கி வைத்தாள். ஊர் அடங்கி அங்கிருந்து போவதற்கு வழி எப்போது உண்டாகும் எனக் காத்திருக்கத் தொடங்கினாள். ✷

# பலம் மிகுந்த படைத்தளமும் ...

கூட இங்கே பொருத்தப்பட்டிருந்தன. அத்தோடு, கட்டம் கட்டமாக 'பாதுகாப்பு வலயங்கள்' பலவும் இப்படைத்தளத்தில் உருவாக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான நிலையில் – விடுதலைப் புலிகளின் படையணிகள், இறுக்கமான பாதுகாப்பு அரண்களைக் கடந்து தளத்தினுள் வேகமாக பிரவேசித்ததும், சமர் ஆரம்பமாகி சில மணி நேரங்களிலேயே தளத்தின் மையப்பகுதியைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததும் – படை வட்டாரங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தின.

தமது பாதுகாப்புச் செயற்பாடுகள் பற்றிய அதீதமான தன்னம்பிக்கையின் காரணமாகவே – படைத்தளம் இன்னமும் புலிகளிடம் வீழ்ச்சியடையவில்லை என இராணுவத்தரப்பு கூறி வந்ததிற்கு காரணமாகவிருக்கலாம். புலிகள் தமது அரண்களை ஊடுருவி, தளத்தினுள் உள்நுழைவது சுலபமல்ல என்று இராணுவம் தொடர்ந்து நம்பியதன் வெளிப்பாடே இதுவாகும் – என்று கொழும்பில் இருந்து வெளிவரும் செய்திகள் ஊர்ஜிதம் செய்தன.

இவ்வாறான நிலைப்பாடு ஒன்றே படைத்தளத்தின் வலிமையை எடுத்துக்காட்டப் போதுமானதாகும்.

இந்தவகையில் – புலிகள் படைத்தளத்தை வெற்றி கொண்டிருக்கும் விடயம், உலகின் கவனத்தை ஈர்த்ததில் வியப்பில்லை என்றே கூறமுடியும்.

அதிலும், ஒரே தாக்குதலில் ஆயிரத்திற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டதும், 'ஆட்டிலறி' செலுத்திகள் உட்பட கனரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதும், உலகின் படைத்தள ஆய்வாளர்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ✷

## தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளையின் செய்திச்சேவை தொலைபேசி இலக்கங்கள்


| | | | |
|---|---|---|---|
| Baden | 056/2229114 | Luzern | 041/2601729 |
| Basel | 061/3210289 | Solothun | 065/254819 |
| Bern | 031/9410314 | Thun | 033/365492 |
| Bern | 031/9913862 | Wattwil | 071/9886527 |
| Burgdorf | 034/530065 | Zug | 041/7602392 |
| Chur | 081/6515436 | Zurich | 01/7307024 |
| Lausanne | 021/646749 | Zurich | 01/2426359 |
| Langenthal | 063/228349 | Zurich | 01/4516586 |
| Lugano | 091/9668884 | | |

www.tamilarangam.net



# விடிவு தோன்றாத - முடிவு தெரியாத - நிலையில் ருஷ்யா!

எப்படியோ ஒருவாறாக போரிஸ் யெல்ட்சின் அடுத்த நான்கு வருடங்கட்கு ருஷ்ய ஜனாதிபதியாகிவிட்டார். 'இப்போதுதான் எனக்கு நிம்மதி' என கிளின்டன் பெருமூச்சு விடுகின்றார்: என்றாலும் அவருக்கு முழு நிம்மதி கிடைக்க வழியில்லை. ஏனென்றால், மிதமிஞ்சிய குடியால் ஈரலும் கெட்டுப்போய், கடுமையான மாரடைப்பு இருதடவை ஏற்பட்டதால் இருதயமும் தளர்ந்திருக்கும் யெல்ட்சின், எவ்வளவு காலம் இன்னமும் காலம் தள்ளுவார் என்பது கேள்விக் குறியாக உள்ளது. இருந்தபோதும், வியப்புக்களும்



போரிஸ் யெல்ட்சின்:
இன்னும் எவ்வளவு காலம்?

திகைப்புக்களும் நிரம்பிய இரண்டு சுற்றுத்தேர்தல்களின் பின், 53.7 விழுக்காடு வாக்குகளை யெல்ட்சின் பெற, வெல்வார் என எதிர்பார்க்கப்பட்ட ருஷ்ய கொம்யூனிஸ்ற் கட்சியின் பொதுச் செயலர் கெனடி சுகனோவ், 40.4 விழுக்காடு வாக்குகளையே பெற்றார். என்றாலும் தீண்டத்தகாத கட்சியாக வருணிக்கப்பட்ட அக்கட்சியின் வருகையை எவராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை.


இன்று கிழக்கு ஐரோப்பிய நாடுகளில், தம்மை சனநாயக வழிக்கு இட்டுச்சென்றதாகப் பெருமை பேசிய கட்சிகளைக் கைகழுவிவிட்ட மக்கள், தமது முன்னைய வரட்டுச் சித்தாந்தப் போக்குகளைக் கைவிட்டு – காலமாற்றத்திற்கேற்ப கருத்தை மட்டுமல்ல, பெயரையும் மாற்றிக் கொண்ட பொதுவுடமைக் கட்சிகளை ஆளும் கட்சிகளாகத் தெரியும் பின்னணியிலே, இம் முடிவையும் பார்க்க வேண்டும். கடந்த இரண்டரை வருடங்களுக்குள்ளே கங்கேரி, ருமேனியா, விதுவேனியா, பல்கேரியா போன்ற நாடுகளில் சோசலிச, சமூக சனநாயகக் கட்சிகளாகப் பெயர் மாற்றிக் கொண்ட முன்னைய கொம்யூனிஸ்ற் கட்சிகள், ஆளும் கட்சிகளாக மாற்றம் பெற்றுவிட்டன. அதிலும் குறிப்பாக, போலந்தில் ஏற்பட்ட மாற்றமே குறிப்பிடத்தக்கது. போலந்து கொம்யூனிஸ்ற் கட்சிக்கு எதிராகப் போராடி, சனநாயகத்தை மீட்டதாகக் கருதப்பட்ட 'சொலிடாரிட்டி' அமைப்பு இப்போது முற்றாக போலந்தில் செல்வாக்கிழந்து செல்லாக்காசாகிவிட்டது. இவ்வருடத் தொடக்கத்தில் போலந்தில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில், மேற்குலகின் செல்லப்பிள்ளையான லெக்வலேசா முதல் சுற்றில் வெற்றிபெற்றபோதும், இரண்டாம் சுற்றில், சீர்திருத்தி அமைக்கப்பட்ட கொம்யூனிஸ்ற் கட்சியின் அலெக்சாண்டர் குவாசினியெவ்ஸ்கியிடம் தோற்றுப் போனார். தான் முன்னர் தோற்கடித்த அதே கட்சியிடம் தானே தோற்றுப் போன வலேசா, மீண்டும் கடான்ஸ்க் நகர் கப்பல் கட்டும் தளத்தில் - தனது முன்னைய மின்தொழிலாளப் பணியை மேற்கொள்ளப் போய்விட்டமை வரலாற்றின் சுவையான பக்கம்தான்.

எனவேதான், போலந்து போலவே ருஷ்யாவிலும் நடக்கும் என பொதுவில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவ்வாறு நிகழாமைக்கு என்ன காரணம்? "யெல்ட்சினின் வெற்றி எனது வெற்றி" எனக் கூறிய கிளின்டன் செய்த வேலையொன்று இப்போது, அமெரிக்க 'ரைம்' இதழில் வெளியாகிவிட்டது. வரும் டிசெம்பர் ஜனாதிபதித் தேர்தலில் தனது வெற்றிக்கு நம்பியிருக்கும் – அதி நவீன விளம்பர உத்திகளைப் பயன்படுத்தி தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்ளும் – விளம்பர நிறுவனமொன்றை இரகசியமாக மொஸ்கோ அனுப்பி, அடாவடியான அதிரடி விளம்பர மாயைகளை உருவாக்கக் கிளின்டனே உதவினார் என்பது அச்செய்தி. அத்தோடு, ருஷ்ய அரசின் மக்கள் தொடர்புச் சாதனங்களும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களும், முழுமையாக யெல்ட்சின் பற்றி மட்டுமே பெருத்த எடுப்பில் முக்கியப்படுத்தியதோடு, கொம்யூனிஸ்ற் கட்சி பற்றிய இழிவான செய்திகளை – வதந்திகளை – திரைப்படங்களை இடைவிடாமல் ஒளிபரப்பின. அதேவேளை அரசுச் செலவிலே, புகழ்மிக்க இசைக்குழுக்கள் யெல்ட்சின் புகழ்பாடின. இவையெல்லாவற்றிற்கும் மேலாக உலக வங்கி, சருவதேச நாணய நிறுவனம் போன்றவை, நலிந்துபோயிருக்கும் ருஷ்யப் பொருளாதாரத்தை மீட்க, தாம் செய்யும் உதவிகளை யெல்ட்சின் வெற்றி பெறாவிட்டால் நிறுத்திவிடுவோமென்று வேறு மிரட்டின. அதிலும் குறிப்பாக சருவதேச நாணயநிறுவனம், ருஷ்ய பொருண்மியத்தை உறுதிப்படுத்தத் தான் வழங்கவிருந்த பாரிய 10 பில்லியன் டொலர் கடனை நிறுத்திவிடுவதாக மிரட்டி, சூதாட்டம் ஆடியது. இவையெல்லாவற்றின் விளைவாக, நகரப்புறங்கள் யாவும் யெல்ட்சின் பக்கம் மாறின. குறிப்பாக ருஷ்யாவின் மிகப் பாரிய இரு நகரங்களான மொஸ்கோவிலும், சென் பீட்டர்ஸ்பேர்க்கிலும் முறையே 75, 70 விழுக்காட்டிற்கு மேல் யெல்ட்சினுக்கு ஆதரவாக வாக்களிக்கப்பட்டன. எனவேதான், இவ்வெற்றி யாரினது வெற்றி என்கின்ற கேள்வி எழும்புகின்றது.

இதுபற்றி மேலும் அறிய நாம், முதலாம் சுற்றுத் தேர்தல் முடிவுக்குப் போக வேண்டும். ருஷ்ய இராணுவத்தின் 14வது படைப்பிரிவின் தளபதியாகவிருந்து செச்சென்யாவில் இராணுவத் தலையீட்டை எதிர்த்துப் பதவி விலகிய ஜெனரல் அலெக்சாண்டர் லெப்பெட்டின் அரசியல் பற்றியும் அறிய வேண்டும். யூன் 16ம் திகதி நடைபெற்ற தேர்தல் முடிவுகள் இவ்வாறுதான் அமைந்தன. யெல்ட்சின் 35.1

வே.பாலகுமாரன்.

விழுக்காடு வாக்குகளை அதாவது ஏறத்தாழ இரண்டரைக்கோடி வாக்குகளைப் பெற, சுகானோவ் 32 விழுக்காடு அதாவது 2கோடியே 32இலட்சம் வாக்குகள் பெற, எவரும் எதிர்பார்க்காத வகையில் லெப்பெட் 14.7 விழுக்காடுகளை அதாவது ஏறத்தாழ 1கோடி 6இலட்சம் வாக்குகளைப் பெற்றார். இங்கே ஒரு தகவலை ஆய்வாளர்கள் வலியுறுத்துகின்றார்கள். அதாவது, சீரழிந்துபோன தமது வாழ்க்கையை - சரிந்துபோன பொருண்மியத்தை - விபச்சாரமும் போதைப்பொருள் வணிகமும் வன்முறையும் நிரம்பிய மாஃபியா குழுக்களின் கட்டுப்பாட்டில் வந்துவிட்ட தமது நிலையை - எண்ணி வேதனைக் கண்ணீர் வடித்த ருஷ்ய மக்கள், யெல்ட்சினுக்கு மாற்றாக ஒருவரையே தெரிவு செய்ய விரும்பினர். எனினும், ருஷ்ய தேசியவாதத்தைத் தட்டியெழுப்பி பொது வாழ்வினைச் சுத்திகரிக்கப்போவதாக உறுதியளித்த மூவரிடையே, அவர்களின் வாக்குகள் பங்கிடப்பட்டுவிட்டன என்பதே அது. குறிப்பாக, நடைமுறைக்குப் பொருந்தாத அதி தீவிரவாதப்போக்கினை வெளிப்படுத்திய விளாடிமிர் சிரினோவ்ஸ்கியை மக்கள் நிராகரித்தபோதும், அவருக்கும் 5.8 விழுக்காடு வாக்குகள் பிரிந்தன. (அதேவேளை, முன்னர் மேற்குலகம் "கோர்பி, கோர்பி" எனத் தலையில் வைத்துக் கொண்டாடிய கோர்பச்சேவ் வெறுமனே 0.5 விழுக்காடு வாக்குகளைப் பெற்று படுதோல்வியடைந்தமை, மக்களின் மனநிலையைத் தெளிவாக்கியது.) எனவே, இவ்வாக்குப் பங்கீடு காரணமாகச் சுகானோவுக்குச் சேரும் என எதிர்பார்க்கப்பட்ட கணிசமான வாக்குகள் – உறுதி, கண்டிப்புடன்



கெனடி சுகானோவ்
கைக்கு வந்தது?

தோற்றமளித்த லெப்பெட்டிற்குச் சேர்ந்துவிட்டதாகக் கருதப்படுகின்றது. அத்தோடு, ஒரு காலத்தில் 'செஞ்சேனை' எனப் புகழ்பெற்று, இன்று சீரழிந்து போய் – தகுந்த வேதனம், பராமரிப்பின்றி – நடுத்தெருவில் நிற்கும் ருஷ்ய இராணுவத்தினரிடையே லெப்பெட்டிற்கு மிகுந்த செல்வாக்குண்டு. அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 15விழுக்காடு வாக்குகள் ருஷ்ய இராணுவ சமூகத்தைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவேதான், வேறுவழியின்றி இறுதிநேரச் சூதாட்டமாக யெல்ட்சின், லெப்பெட் விதித்த நிபந்தனைகளையெல்லாம் ஏற்று – அவரை வளைத்துப்பிடித்து, மிகுந்த அதிகாரமுள்ள தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமித்தார்: இதற்காக, அதுவரை தம் ஆதரவாளராக இருந்த பலரையும் காவு கொடுத்தார். பதவி ஏற்ற கணமே லெப்பெட், தனது நீண்டகால எதிரிகளான – ருஷ்ய இராணுவத்தின் சீரழிவுக்குக் காரணமாக இருந்தோர், செச்சென்யாவில் இராணுவத்தலையீட்டை ஏற்படுத்தியோர் என – ஏழுக்கும் மேற்பட்ட ஜெனரல்களை வீட்டிற்கு அனுப்பினார். அதற்கு முதலே, கடும்போக்காளரான பாதுகாப்பு அமைச்சரும் தனது நெருங்கிய நண்பருமான பாவெல் கிரச்சேவ்வை யெல்ட்சின் பதவி நீக்கினார். லெப்பெட் பதவி நீக்கியோரில், கே. ஜி. பி யின் மறுவடிவமான எஃவ். ஐ. எஸ் எனப்படும் வெளிவிவகாரப் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர், உயர்பாதுகாப்புத்துறை ஜெனரல்கள் என்போரும் உள்ளடங்குவர். தன்னை ஒரு சீர்திருத்தவாதியாக – ருஷ்ய தேசியவாதியாக – ருஷ்ய இராணுவத்தின் காப்பாளராக – காட்டிக்கொள்ளும் ஜெனரல் லெப்பெட், சிலியின் முன்னாள் இராணுவ சருவாதிகாரி ஜெனரல் பினோசெட்டின் விசுவாசி எனக் குறிப்பிடப்படுகின்றது. அடுத்தபடியாக இப்போது, ஊழல் நிறைந்த அமைச்சர்கள், அதிகாரிகளைப் பந்தாடப்போவதாகவும் – பாதாள உலகை ஒழித்துக்கட்டி, கட்டுப்பாடும், ஒழுங்கும் நிறைந்த ருஷ்யாவை கட்டியெழுப்ப 'புது இரத்தம்" பாய்ச்சப்போவதாகவும் லெப்பெட் பறைசாற்றியுள்ளார். எனவே, எதிர்காலத்தில் உண்மையான அதிகாரம் எவர்கையில் என்பதே இப்போது எழும்பும் வினாவாகின்றது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, மீண்டும் செச்சென்ய சிக்கல் எரிமலையாக வெடித்து – பூதமாக யெல்ட்சினைப் பின்தொடர்கின்றது. முன்னைய பாதுகாப்பு அமைச்சரும் இராணுவத் திமிர் நிரம்பியவருமான பாவெல் கிரச்சேவின் கதையைக்கேட்டு, செச்சென்ய மீது படையெடுத்த டிசெம்பர் 11. 1994 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை, புதைசேற்றுக்குள் கால்விட்ட நிலையில் யெல்ட்சின் இருப்பதும், செச்சென்யப் போர் தொடர்ந்தால் தேர்தலில் தோல்வி நிச்சயம் என்கின்ற நிலையில், "பயங்கரவாதிகள்", "கொள்ளைக்காரர்" எனத் தானே கூறிய போராளிகளை மொஸ்கோவிற்கு அழைத்து – விருந்து வைத்து –போர்நிறுத்தம் கொண்டுவந்த கதையும் தெரிந்ததே. இப்போது மீண்டும் செச்சென்ய சிக்கல் மேலெழுகின்றது.

"குறிப்பிட்ட கால எல்லைக்குள் ருஷ்யப் படைகள் விலகாவிட்டால் மீண்டும் போர்" என முழக்கமிடும் செச்சென்யவின் தற்போதைய தலைவரான செலீமகான் யண்டர் பியேவ், மோதலுக்குத் தயாராகின்றார். இப்போது லெப்பெட் என்ன செய்யப்போகின்றார்? செச்சென்யவில் இராணுவத் தலையீட்டைக் கண்டித்தும், வீணாக ருஷ்யப் படையினர் இறப்பதை அனுமதியேன் என்றும், செச்சென்ய சுதந்திரம் பற்றிக் கவனத்திற்கு எடுப்பேன் என்றும் இதுவரை கூறிய அவர், இனி என்ன செய்யப்போகின்றார் என்பதே, உலக



அலெக்சாண்டர் லெப்பெட்:
அடித்தது யோகம்?

அரங்கில் எழுந்துள்ள கேள்வி. 'நரிப்புத்தி' நிரம்பிய யெல்ட்சின் இனிமேல் லெப்பேட்டை எவ்வாறு கையாளுவார் என்பது, இன்னொரு கேள்வி. இந்தச் சிக்கலுக்கிடையில், புகழ்பூத்த பொதுவுடமைப் புரட்சியின் 'மூத்த குடிகள்' எனப்பட்ட ருஷ்ய மக்கள், முடிவு தெரியாத – விடிவு தோன்றாத – புரட்சியொன்றில் மூழ்கிய மக்களாகிவிட்டனர் என்பதே இன்றைய ருஷ்யாவின் உண்மை நிலையாகும்!. ✷

www.tamilarangam.net



# தனியார்மயமாக்கல் - தடுமாறும் அரசாங்கம்!

**வ**ளர்முக நாடுகளின் பொருளாதார நெருக்கடிகளையும் பின்னடைவுகளையும் அதனால் அவை எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளையும் கவனத்திற்கொண்டு, இவற்றைச் சீர்செய்யும் நோக்குடன், 1980களில் உலக வங்கி, அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கையை அறிமுகப்படுத்தியது. இக் கொள்கையின் முக்கிய செயற்பாடுகளில் ஒன்று, அரசு உடைமையாக உள்ள நிறுவனங்களை தனியார் துறைக்கு விற்றல் என்பதாகும். இதன்மூலம் அரசு நிறுவனங்களை திறமையானதாக மாற்றுவதுடன், அரசினது வரவு செலவுத் திட்டத்தின் பற்றா

சி.வரதராஜன்.

க்குறையின் அளவைக் குறைக்க முடியுமெனவும் உலகவங்கி ஆலோசனை கூறியது. இத் தனியார்மயமாக்கல் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நாடுகளுக்கு சலுகை அடிப்படையிலான கடன்களை வழங்கவும், உலக வங்கி முன் வந்தது. வளர்முக நாடுகளின் வளங்களை வளர்ச்சியடைந்த நாடுகள் மறைமுகமாகச் சுரண்டுவதற்கு வழிவகுக்கும் ஒரு நவ கொலனித்துவக் கொள்கையாகவே, உலக வங்கியின் அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கை அமைந்துள்ளது. பல்தேசிய நிறுவனங்கள் தமது முதலீடுகளை வளர்முக நாடுகளில் மேற்கொள்வதற்கு வழிவகுத்துக் கொடுப்பதன்மூலம், வளர்முக நாடுகளின் செல்வத்தினை, வளர்ச்சியடைந்த நாடுகளுக்குக் கொண்டுசெல்வதற்குரிய ஒரு பாதையினை அமைத்துக் கொடுப்பதே, உலக வங்கியின் வேலையாகும்.

அதிகரித்துவரும் பாதுகாப்புச் செலவு, கட்டுக்கடங்காமல் விரிவடைந்துவரும் வரவு–செலவுத் திட்டப் பற்றாக்குறை போன்றவற்றினால் நிதி நெருக்கடிக்குள்ளாகியிருந்த இலங்கை அரசு, அரசு நிறுவனங்களை விற்பதன் மூலம், உடனடியாகக் காசு கிடைக்கும். மேலும், உலக வங்கியின் கடன் உதவியும் கிடைக்கும் என்பதனால், தனியார்மயப்படுத்தலை உடனடியாக நடைமுறைப்படுத்த ஆரம்பித்தது. 1989 ஆம் ஆண்டு டிசெம்பரில், 'யுனைட்டட் மோட்டேர்ஸ்' என்ற அரசு நிறுவனத்தை 9 1/2 கோடி ரூபாவிற்கு தனியாருக்கு விற்பதன்மூலம், அன்றைய ஐ.தே.கட்சி அரசு இதனை ஆரம்பித்துவைத்தது. அப்போது எதிர்க்கட்சியில் இருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி இத்தனியார் 'மயமாக்கலை எதிர்த்ததுடன், குறைந்த விலைக்கு அரசு நிறுவனங்கள் விற்கப்படு வதாகவும் குற்றம் சாட்டியது.

எனினும், பின்னர் பதவிக்கு வந்த பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு, தனியார்மயமாக்கலை தீவிரமாக நடைமுறைப்படுத்த ஆரம்பித்தது. இதற்காக 1994 இல் உருவாக்கப்பட்ட 'பொது அரசு முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு'விற்கு (பி.ஈ.ஆர்.சி) சனாதிபதி சந்திரிகா, தனது குடும்ப நண்பரான திரு. ராஜன் ஆசீர்வாதத்தினை தலைவராக நியமித்தார். 1995இல் தனியார் மயமாக்கல்மூலம் 1300 கோடி ரூபா பணம் திரட்டுவதென இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

எனினும், 1995 ஏப்ரில் 19 இல் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து போர் தீவிரமடைந்தமை, தொழிற்சங்கங்களிடமிருந்து எழுந்த எதிர்ப்புகள் போன்றவற்றினால், 1995 இல் தனியார்மயமாக்கலினால், பெறத்திட்டமிட்ட இலக்கு, 1300 கோடி ரூபாவில் இருந்து 500 கோடி ரூபாவாகக் குறைக்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டு, அதாவது இந்த ஆண்டு, தனியார்மயமாக்கலின் மூலம் 2100 கோடி ரூபா திரட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவும் சாத்தியமற்றதாக இருக்கும் என்பதனையே அண்மைக்கால நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. போர் கொழும்புக்கு எடுத்துசெல்லப்பட்டுள்ளமை, அரசின் தனியார்மயமாக்கல் முயற்சிகளைப் பெரிதும் பாதித்துள்ளது. அரசு விற்க முயற்சித்த பல நிறுவனங்களுக்கு குறைந்த விலையே கேட்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட மூலதன அபிவிருத்தி முதலீட்டு நிறுவனத்தில் தான் வைத்திருந்த 40.8 வீதமான பங்குகளை 40 வீதப்படி அரசு விற்க முற்பட்டபோது, 2.8 வீதமான பங்குகள் மட்டுமே வாங்கப்பட்டன. அதுவும் 5 மாதங்களின் பின்னரே வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஓரியண்ட் லங்கா லிமிட்டெட் நிறுவனத்தின் 60 வீதமான பங்குகளை ஒரு பங்கு 1000 ரூபாப்படி அரசு விற்க முற்பட்டது. ஆனால், இதற்குக் கேட்கப்பட்ட ஆகக்கூடுதலான விலை 410ரூபா மட்டுமே. இதன்படி, இந்த நிறுவனத்தின் சொத்தின் மொத்தப் பெறுமதி ஆயிரம் மில்லியன் ரூபா ஆனால் கேட்கப்பட்ட தொகை 738 மில்லியன் ரூபா மட்டுமே. இதேபோன்று லங்கா மின்சாரக் கம்பனியின் (எல்.ஈ.சி.ஓ.) 2040 மில்லியன் ரூபா பங்குகளை அரசாங்கம் விற்க முற்பட்டபோது, 1500 மில்லியன் ரூபா மட்டுமே கேட்கப்பட்டது. லங்கா மின்சாரக் கம்பனியை (எல்.ஈ.சி.ஓ.) மின்சக்தி அமைச்சர் என்ற வகையில் விற்று, பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் முயற்சியில் ரத்வத்த ஈடுபட்டு வருகின்றார். இந்நிலையில் இவற்றின் விற்பனைகளை அரசு பிற்போட்டுள்ளது. இது ஒருபுறமிருக்க, தனியார் மயமாக்கலுக்கு எதிர்ப்பலைகள் சிறீலங்காவில் உருவாகிவருகின்றன. அரசில் அங்கம் வகிக்கும் கூட்டுக் கட்சிகள் – குறிப்பாக லங்கா சமசமாஜக் கட்சி – தனியார்மயமாக்கலைப் பகிரங்கமாக எதிர்த்து வருகின்றது. இக் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவாரன திரு.வாசுதேவ நாணயக்கார, கட்சியின் சார்பில் அமைச்சராக இருக்கும் திரு. பேனாட் சொய்சாவை பதவி விலகும்படி பகிங்கரமாக வேண்டுகோள் விடுத்தமை குறிப்பிட த்தக்கது.

மறுபக்கம், தொழிற்சங்கங்களிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் எதிர்ப்புகள் கிளம்பத் தொடங்கிவிட்டன. தனியார்மயப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் சமூகநலனைப் புறக்கணித்து, முற்று முழுதாக இலாபநோக்கத்தின் அடிப்படையில் இயங்கத் தொடங்கவே, மக்களின் எதிர்ப்பலைகள் உருவாகிவிட்டன. தனியார்மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சேவை நிறுவனங்கள், பயணக் கட்டணங்களை உயர்த்த ஆரம்பித்துவிட்டன. தனியார் மயப்படுத்தப்பட்ட 'கொழும்பு வாயு, நீர் நிறுவனம்' அண்மையில் தனது கட்டணத்தை 10 வீதத்தினால் உயர்த்தி உள்ளது. உயர்ந்தளவிலான பணவீக்கம், அதிகரித்து வரும் வேலையின்மை என்பவற்றின் விளைவாக குறைந்த வாழ்க்கைத்தரத்தினை அனுபவிக்கும் மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுவதாக, இக்கட்டண உயர்வுகள் அமைந்துள்ளன.



அரசின் தனியார்மயமாக்கலை தொழிற்சங்கங்கள் மூர்க்கத்தனமாக எதிர்க்கின்றன. அண்மையில், இலங்கை மின்சார சபையின் உடைமையாக உள்ள லங்கா மின்சாரக் நிறுவனத்தை (எல்.ஈ.சி.ஓ) தனியார்மயமாக்குவதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சியை எதிர்த்து, இலங்கை மின்சாரசபை ஊழியர்கள், சிறிலங்காவை நான்கு நாட்கள் இருளில் மூழ்கவைத்தமை குறிப்பிடத்தக்கது. சிறீலங்காப் பொருளாதாரத்தின் எதிர்காலம் இருள் மயமானது என்பதற்கான அறிகுறியே இது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் இயந்திர சாதனங்களைச் சேதமாக்கியமை, இலங்கைத்தொழிலாளர்களின் தொழில் ஒழுக்கம் தொடர்பான ஒரு அச்ச உணர்வினை, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே போர்ப் பீதியினால் மிரண்டுபோயிருக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை, கட்டுப்பாடற்ற இலங்கைத் தொழிலாளர்படை பயமுறுத்தி வெளியேற்றிவிடப்போகின்றது.

தனியார்மயமாக்கலுக்கு எதிராக அரசிற்கு உள்ளேயும் வெளியேயும் எழுகின்ற பலத்த எதிர்ப்புக்களும், போர் நெருக்கடிகளினால் கொழும்பில் முதலீட்டுச் சூழல் பாதிக்கப்பட்டுள்ளமையும், அரசின் தனியார் மயமாக்கல் முயற்சிக்குப் பெரும் பின்னடைவினை ஏற்படுத்தியுள்ளன. எனவே, தனியார்மயமாக்கல் மூலம் இவ்வாண்டு கிடைக்கும் எனத் திட்டமிடப்பட்ட 2100 கோடி ரூபாவினைப் பெறமுடியாமற் போகலாம். இவ்வாண்டுக்கான பாதுகாப்புச் செலவு, திட்டமிட்ட 3800 கோடி ரூபாவிற்குப் பதிலாக 4600 கோடி ரூபாவாக இருக்கும் என, பிரதி நிதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அண்மையில் கூறியுள்ளார். இந்நிலையில் தனியார் மயமாக்கலும் பாதிக்கப்பட்டால், வரவு–செலவுத் திட்டப் பற்றாக்குறை 11000 கோடி ரூபா என்ற உயர்ந்த மட்டத்திற்கு அதிகரிக்கும். இந்நிலையில் அரசிற்கு இருக்கின்ற ஒரே வழி, தனது மூலதனச் செலவுகளைக் குறைப்பதே ஆகும். அதாவது, எதிர்காலப் பொருளாதார வளர்ச்சியைத் தியாகம் செய்வதே, அரசிற்கு இருக்கும் ஒரே வழியாகும்.

தனியார்மயமாக்கலை எதிர்த்து இடதுசாரியினரும் தொழிற்சங்கத்தினரும் தேசியப் பொருளாதாரத்திற்கு அழைப்பு விடுக்கின்றனர். மறுபுறம் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவை தனியார்மயமாக்கலை ஆதரித்து, பூகோளப் பொருளாதாரத்திற்கு அழைப்பு விடுக்கின்றன. அரசு எதனை ஏற்கப் போகின்றது? தனியார்மயமாக்கலிலிருந்து அரசு பின்வாங்குமேயானால், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையில் எதிர் விளைவுகளை ஏற்படுத்தும். அது மட்டுமன்றி, அரசுத்துறை ஊழியர்களைக் கட்டுப்படுத்துவதில் அரசின் இயலாமையை இது வெளிப்படுத்தும். அதேநேரத்தில், உலகவங்கி தனது உதவிகளை நிறுத்துவதாகப் பயமுறுத்தி, கடுமையான நிபந்தனைகளை இலங்கை மீது விதிக்கும். வெளிநாட்டு உதவிகளில் பெருமளவு தங்கியிருக்கும் இலங்கையினால் இதனைத் தாங்கிக்கொள்ள முடியுமா? பொருளாதாரம் ஒருபெரும் அழிவுக் காலத்தினை நோக்கி நகர்கின்ற அறிகுறி தென்படுகின்ற இக்கட்டத்தில், அபிவிருத்திக் கொள்கையை பின்பற்றவேண்டிய பெரும்தேவை இன்று உள்ளது. வானளாவ உயர்ந்துவரும் பாதுகாப்புச் செலவின் மத்தியில், அபிவிருத்தி என்பது பகற்கனவாகவே அமையும்! ✷

## தனியார்மயமாக்கலின் தீமைகள்

(1) அரசாங்கத் தொழில் முயற்சிகள் சமூகநலன், சமத்துவம், வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு இயங்கும் ஆனால், தனியார்மயப்பட்ட நிறுவனங்கள் இலாப நோக்கத்தை முதன்மைப்படுத்துவதனால், சமூகநல நோக்கங்கள் புறக்கணிக்கப்பட்டுவிடும்.

(2) தனியார் மயப்படுத்தலினால் வேலை வாய்ப்புக்கள் குறைவடையும்.

(3) போக்குவரத்து, மின்சாரம், தொலைத்தொடர்பு போன்ற சேவைத்துறை நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தப்படும்போது, இவை மக்களிடம் இருந்து அறவீடும் கட்டணங்களை உயர்த்தும்.

## தனியார் மயமாக்கல், மக்கள் மயமாக்கல் என்றால் என்ன?

அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை தனியாருக்கு விற்றல் என்பதனை தனியார் மயமாக்கல் குறிக்கின்றது. இத் தனியார் மயப்படுத்தலில் மக்களையும் ஊழியர்களையும் பங்குகொள்ள வைக்கும் செயற்பாடே மக்கள் மயப்படுத்தலாகும். அரச நிறுவனங்களின் சொத்தில் 60 வீதமான பங்குகளை தனியார் முதலீட்டாளர்களுக்கும் 30 வீதமான பங்குகளை பொதுமக்களுக்கும் 10 வீதமான பங்குகளை ஊழியர்களுக்கும் வழங்கும் நடவடிக்கையே மக்கள் மயப்படுத்தலாகும். தனியார் மயப்படுத்தலின்போது எழுகின்ற எதிர்ப்புக்களைச் சமாளிப்பதற்கான ஒரு தந்திரமான சொற்பதமே மக்கள் மயப்படுத்தலாகும். குரைக்கின்ற நாய்களுக்கு வீசி எறியப்படும் ரொட்டித் துண்டுகள் போன்றதே, தனியார் மயமாக்கலின்போது மக்களுக்கும், ஊழியர்களுக்கும் விற்பனை செய்யப்படும் பங்குகளாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறிலங்கா அரசைக் கண்டித்து நோர்வேயின் ஒன்பது நகரங்களில் போராட்டம்




சிறிலங்கா அரசு உணவு, மருந்து வகைகளை போர் ஆயுதமாகப் பயன்படுத்துவதனைக் கண்டித்தும் மக்களுக்கான உணவு, மருந்து விநியோகத்திற்கான தடையினை உடன் நீக்குவதற்கும், பொதுமக்கள் மீதான



எறிகணை, குண்டுவீச்சுத் தாக்குதல்களை உடன் நிறுத்துவதற்கும் தேவையான அழுத்தங்களை சிறிலங்கா அரசுக்கு, நோர்வே அரசு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில், 9-8-1996 அன்று, நோர்வேயின் 9 முக்கிய நகரங்களில் அடையாள ஒன்றுகூடல்களும் எதிர்ப்புப் பிரச்சாரங்களும் நடாத்தப்பட்டுள்ளன.

நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் நோர்வே வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அலுவலகத்தில் முன்பாக நடைபெற்ற எதிர்ப்புப் போராட்ட முடிவில் நோர்வே வெளிநாட்டமைச்சருக்கான மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது. இம் மகஜரை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஆசியப் பகுதிப் பொறுப்பதிகாரி ஜேன் ரொறோ கொல்விக் நேரில் வந்து பெற்றுச் சென்றார்.

இதனைத் தொடர்ந்து ஆசியப் பகுதிப் பொறுப்பாளர் மற்றும் வெளிநாட்டு அமைச்சு அதிகாரி மரீனா கெவினுக்கும், தமிழர் ஒருங்கிணைப்புப் பிரிவின் உறுப்பினர்களுக்கும் இடையே அரைமணி நேரச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இச்சந்திப்பில் சிறிலங்கா அரசு எவ்வாறு திட்டமிட்ட வகையில் உணவு, மருந்து வகைகளைப் போர் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றது என்பது தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரின் பிரதிநிதிகளால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இவற்றினைக் குறித்துக்கொண்ட அதிகாரி, இவ்விடயம் தொடர்பாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சருடன் உடனடியாகக் கலந்தாலோசித்து நோர்வே அரசினால் மேற்கொள்ளக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க, தமிழ்ப் பகுதிகளில் பணி புரியும் நோர்வேயிய உதவி நிறுவனம் ஒன்று, இவ்விடயம் சம்பந்தமாக நோர்வேயிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் சிறிலங்காவில் உள்ள இலங்கைக்கான நோர்வேயியத் தூதரகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டதாக அறியப்படுகின்றது. ✷

# இத்தாலியில் மாவீரர் தின உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

இத்தாலியில், றெஜியோ எமிலியா எனும் இடத்தில், 'எமிலியா றொமானியா' தமிழ்ச் சங்கத்தினரால் மாவீரர் தின உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்றது. 28-7-96 அன்று நடைபெற்ற இப்போட்டியில் இத்தாலியின் பல பிரதேசங்களில் இருந்தும் - பறக்கும் புறா, புனித சூசையப்பர், அந்தோனியார், ஈழத்தமிழர், பதினொரு நட்சத்திரம், தமிழர், மாந்தோவா, மறவர் - ஆகிய விளையாட்டுக் கழகங்கள் பங்குகொண்டன. இப்போட்டிக்கு நடுவர்களாக இத்தாலி நாட்டவர் ஒருவரும், தமிழீழத்தில் நடுவராகக் கடமையாற்றிய திரு. கமலநாதன் மற்றும் பாரிஸ் விளையாட்டு சம்மேளன ஆலோசகரும் நடுவருமான திரு. மணியம் அவர்களும் கடமையாற்றினர்.

இப்போட்டியில் முதலாம் இடத்தை ஈழத்தமிழர் விளையாட்டுச் சம்மேளன ஏ பிரிவும், 2ஆம் இடத்தை பறக்கும் புறா விளையாட்டுக் கழகமும், 3ஆம் இடத்தை அந்தோனியார் விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன. சிறந்த பந்துக் காப்பாளராக புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக வீரர் அன்ரன் சிவாவும், சிறந்த உதைபந்தாட்ட வீரராக பறக்கும் புறா விளையாட்டுக் கழக வீரர் முரளியும் தெரிவு செய்யப்பட்டனர். போட்டியின் நடத்துனராகவும் நடுவராகவும் ஈழத்தமிழர் விளையாட்டு சம்மேளனத் தலைவர் திரு. கணேசகுமார் அவர்கள் செயலாற்றினார். இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிக் கிளைப் பிரதிநிதி திரு. து. மேதா அவர்கள் வழங்கினார்கள். ✷

# நெதர்லாந்தில் மாவீரர் வெற்றிக்கிண்ண துடுப்பெடுத்தாட்டப் போட்டி 1996

தமிழீழ விடுதலைப் புலிகளின் நெதர்லாந்துக் கிளையினரால் முதன்முதலாக மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்கான மென்பந்து துடுப்பெடுத்தாட்டப் போட்டி இவ்வாண்டில் நடாத்தப்பட்டது. 17-08-96 அன்று zeist என்னும் இடத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு நெதர்லாந்தின் பல பிரதேசங்களிலிருந்து 8 விளையாட்டுக் கழகங்கள் இதில் பங்குபற்றின. மாவீரர்களுக்கும் மறைந்த பொதுமக்களுக்குமான அமைதி வணக்கத்துடன், மங்கள விளக்கினை விடுதலைப் புலிகளின் நெதர்லாந்துக் கிளைப் பிரதிநிதி திரு. அருமைநாயகம் அவர்கள் ஏற்றி வைத்து போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

மாவீரர் வெற்றிக் கிண்ணத்தை Kempan Jet Liners விளையாட்டுக் கழகம், Zeist விளையாட்டுக் கழகத்துடன் மோதிப் பெற்றுக்கொண்டது. 3ஆம் இடத்தை Den bosch திலீபன் விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது.

வெற்றிபெற்ற கழக வீரர்களுக்கு, சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில் எதிரியுடன் களமாடி வீரச்சாவெய்திய மாவீரர் லெப்டினன்ட் சேதுவின் சகோதரர் பிரபாகரன் அவர்கள் வெற்றிப்பதக்கங்களை அணிவித்தார்.

நடுவர்களாகக் கடமையாற்றிய நியூசிலாந்து, நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட பதக்கங்கள் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

இப்போட்டியில் சிறந்த பந்து வீச்சாளராக Zeist கழக வீரர் திரு. மோகன் என்பவரும், அதிகபட்ச ஓட்டங்களை எடுத்தவராக Kempan Jet Liners கழக வீரர் திரு. அசோக் என்பவரும் தெரிவுசெய்யப்பட்டனர்.



பரிசளிப்பு நிகழ்வில் சிறப்புரையை விடுதலைப் புலிகளின் நெதர்லாந்துக் கிளை நிதிப் பொறுப்பாளர் வழங்க, இறுதியாகத் தமிழர் விளையாட்டு ஒன்றியத்தைச் சேர்ந்த திரு. மனோ அவர்களின் நன்றி உரையுடன் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன. ✷

# சுவிசில் யூலை 83 படுகொலை நினைவு




சிங்கள இனவாத அரசால் 83 யூலையில் படுகொலை செய்யப்பட்ட போராளிகளுக்கும் பொதுமக்களுக்கும் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முல்லைச்சமரில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட போராளிகளுக்குமான நினைவு நாள் நிகழ்ச்சி 27-7-1996 அன்று சுவிஸ் நாட்டின் சூரிச் மாநகரில் நடைபெற்றது. தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளை ஒருங்கிணைப்பாளர் திரு. மகேந்திரராசா அவர்கள் ஏற்றிவைத்தார். சுவிஸ் கிளை மகளீர் அணியினரால் நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சிக்கு, பாரிஸ் விடுதலைப் புலிகள் மகளிர் அணியினைச் சேர்ந்த திருமதி. புஸ்பலதா மதனலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஈகைச் சுடரினை ஏற்றி வைத்தார். தொடர்ந்து மக்கள் மெழுகுவர்த்தி ஏற்றி தம் அஞ்சலியைச் செலுத்தினர். அஞ்சலிக் கவிதையினை திருமதி விஜிதா கணேசதாஸ் வழங்கினார். திருமதி. நளினா ஜோன்ராஜ் வரவேற்புரை வழங்கினார். அங்கு உரையாற்றிய பிரதம விருந்தினர், சுவிஸ் கிளைப் பிரதிநிதி நடராஜா முரளிதரனின் ஆளுமை பற்றியும் செயற்பாடுகள் பற்றியும் வியந்து பேசியதுடன், அவருடனான சந்திப்பின் பின் தாம் பாரிஸ் மகளிர் அணியில் சில மாற்றங்கள்-விரிவாக்கங்கள் போன்ற வற்றை மேற்கொண்டதாகவும் - அதற்கு அவருக்கு நன்றி தெரிவிப்பதோடு, அவர் உங்களுக்கு மட்டும் பொறுப்பாளர் அல்ல - அவருடைய ஆளுமை தமிழீழ மக்கள் அனைவருக்கும் அவசியமெனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து செல்வி சிவாஜினி, 'கறுப்பு யூலை' என்ற பேச்சினையும், செல்வன் லக்ஷன் 'முரளி அண்ணனுக்கு ஒரு கவிதை' என்ற தலைப்பிலான கவிதையையும், செல்வி சுஜித்தா முகமட் "எமது போராட்டம்" என்ற தலைப்பில் பேச்சினையும் வழங்கி சபையோரின் பாராட்டுதலைப் பெற்றனர். நிகழ்ச்சிக்கு நடுவே திரு. நடராஜா முரளிதரன் அவர்களால் சிறையில் இருந்து எழுதப்பட்ட கவிதை ஒன்று வாசிக்கப்பட்டபோது சோகம் கலந்த அமைதியொன்று மக்களிடையே காணப்பட்டது. சூரிச் - சுக், நாட்டியாலாய மாணவிகள் எழுச்சி நடனங்களை வழங்கினர்.

தொடர்ந்து, கில்மென் அல்பேட் சிறப்புரை வழங்கினார். அவர் தனது உரையில், முரளி அண்ணனின் இன்றைய நிலை குறித்தும், மற்றும் நாம் ஆற்றவேண்டிய சேவைகள், நிதிசேகரிப்பு என்பன பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

இதனை அடுத்து, "ஓயாத அலைகள் ஊக்குவிப்பு நிதி" சேகரிக்கப்பட்டது. மக்கள் முன்வந்து ஒரு இலட்சத்துக்கு அதிகமான சுவிஸ் பிராங்குகளையும், ஏராளமான தங்க நகைகளையும் வழங்கினர். இந்நிகழ்வு, விடுதலைப் புலிகள் பலாத்காரமாக மக்களிடம் இருந்து நிதி பெறுகின்றார்கள் என்ற பிரச்சாரத்தினை முறியடிக்கும் விதத்தில் அமைந்தது. நிகழ்ச்சியில் தொடர்ந்து கலை, பண்பாட்டுக் கழகத்தின் எழுச்சி கானங்கள், சுக் கலைஞர்களின் 'குந்த ஒரு குடிநிலம்' என்ற நாடகமும், பாசல் மாணவர்களின் தாளலயமும், திருமதி நளாயினி தாமரைச்செல்வனின் கவிதையும், அடுத்து மகளிர் அணியினரால் சமகால நிகழ்வுகள் தாங்கிய கவிதா நிகழ்வும் நடாத்தப்பட்டது. இறுதி நிகழ்ச்சியாக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அதிஸ்டலாபச் சீட்டிழுப்பும் நடைபெற்றது. ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆறுநாள் யொம் கிப்பூர் போரில் இஸ்ரேலின் சேமப்படை

1973–ஆம் ஆண்டு வெடித்த **கிப்பூர்** போரின் போதும், 1967–ஆம் ஆண்டு வெடித்த ஆறுநாள் போரின் போதும் இஸ்ரேலின் வெற்றிக்குப் பெரும்பங்களித்தவர்கள் **சேமப்படையினர்** ஆவார். அவர்கள் குறித்தும், இஸ்ரேலிய படை குறித்தும் 1975–ஆம் ஆண்டு 'பிரிட்டிஸ் ஆமி றிவ்யூ'வில் (British Army Review) வெளிவந்த கட்டுரையின் சில பகுதிகளைக் கீழே தருகின்றோம்.

1956–ஆம் ஆண்டு **சினாய்யில்** எகிப்துடன் ஏற்பட்ட சமரின்பின் இஸ்ரேலானது தனது இஸ்ரேலிய பாதுகாப்புப் படையமைப்பைச் சீரமைத்தது. (Israel Defence Forces IDF) எதிரியை எதிரியின் நிலப்பரப்புக்குள்ளேயே எதிர்கொண்டு வெல்லக்கூடிய வகையில் – விரைந்து செயற்படக்கூடிய வகையில் – தனது படைக்கட்டமைப்பை மாற்றி அமைத்தது. தொடர்ந்து வெடித்த இரண்டு போரிலும் இஸ்ரேலின் வெற்றிக்குச் சேமப்படையினர் பெரும் பங்களித்தார்கள். நிரந்தரப் படையினருக்கும் சேமப்படையினருக்கும் இடையே வேறுபாடு காண இயலாத வகையில் சேமப்படையினரும் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர்.

இஸ்ரேலானது நாற்புறமும் பகைநாடுகளாற் சூழப்பட்டிருக்கும் ஒரு நாடாகும். பெரும் மக்கள் தொகை கொண்ட நாடுகளால் சூழப்பட்டு முற்றுகைக்குள்ளாகியிருக்கும் நாடுபோல இருக்கும் தம் சிறிய நாட்டைக் காப்பதற்கு முழு மக்களினதும் பங்களிப்பைப் பெறவேண்டிய தேவை இஸ்ரேலுக்கு உண்டு.

இஸ்ரேலிய மக்களையும் படையையும் பிரித்துப் பார்க்க முடியாது. அவர்களும் பிரித்துப் பார்ப்பதில்லை. இஸ்ரேலின் இருப்பே, அதன் படை பலத்தில் தான் தங்கியுள்ளது. இஸ்ரேல் என்ற நாட்டின் இயக்க அச்சே அந்த நாட்டின் படைதான் என்பதை எல்லோரும் அறிவார்கள். இஸ்ரேலியர் எல்லோரும் பெரும்பாலும் தம் இளவயதில் **கட்னாவில்** (Gadna) அல்லது இளைஞர் போரில் கடமையாற்றியிருப்பார்கள். கட்னாவில் பணியாற்றுவதன் மூலம் தம்நாட்டிற்குத் தேவையான படைச் சேவை குறித்துப் புரிந்து கொள்கின்றார்கள். தம் நாட்டின் இருப்புக்கு அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதன் மூலம் அதில் சேவையாற்றுவதைப் பெருமையாகக் கருதும் பண்பைப் பெறுகின்றார்கள். சேவையாற்றாதோர் இழிவாகப் பார்க்கப்படுவார்கள்.



இஸ்ரேலியச் சேமப்படையினர். இந்தப் படைப் பிரிவானது, தேசிய நிரந்தரப் படைக்குத் துணையாகப், பொதுமக்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட ''துணைப் படை''யாகும்.

"இஸ்ரேல் யொம் கிப்பூர் போருக்குத் தயாரானதைப் பார்க்கும் வாய்ப்பைப் பெற்ற எழுத்தாளர், போர் குறித்துக் கீழ்க்கண்டவாறு எழுதினார்.

பத்திரிகை விற்பனை செய்துகொண்டிருந்த ஒருவர் ஒலிபெருக்கியிற் சொல்வதைக் கேட்டுவிட்டு "ஆ, அவர்கள் என்னையும் அழைக்கின்றார்கள்" எனக் கூறியவண்ணம் தன் கடையை மூடிவிட்டு வெளியேறினார்; எதிர்த்தெருவில் விற்பனை செய்து கொண்டிருந்த பெண் திடீரெனத் தனது கைப்பையைப் பூட்டிய வண்ணம் புறப்பட்டுச் சென்றார் ; பக்கத்தில் இறைச்சி விற்றுக்கொண்டிருந்தவர் தன் மேலங்கியை எடுத்தெறிந்துவிட்டுக் கடையை மூடிவிட்டு வெளியேறினார் ; வானொலி கேட்டுக் கொண்டிருந்த கூட்டத்திலிருந்த ஒருவர் அதில் ஒலிபரப்பப்பட்ட சங்கேத மொழியைக் கேட்டபின் மெதுவாக அங்கிருந்து வெளியேறினார்.

ஒலிபெருக்கிச் சத்தங்களிடையே படையினர் அணிவகுத்துச் செல்வதைப் பார்த்திருக்கின்றேன். புகையிரத நிலையத்திற் கூட்டம் கூட்டமாகப் படையினர் நிற்பதைப் பார்த்திருக்கிறேன். மிகுந்த ஆரவாரத்துடன் அணிநடைப் பாடல்களுக்குச் சப்பாத்துக்கள் ஒலி எழுப்ப அணிவகுத்துச் செல்லும் படையினரைப் பார்த்திருக்கிறேன். ஆனால் ஒருபோதும்; ஒரு நாடானது அமைதியாக உறுதியுடன் தன் நாட்டைக் காக்க இங்குபோல் அணிதிரண்டு எழுந்ததை நான் கண்டதில்லை.

யொம் கிப்பூர் போருக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டு நாற்பத்தெட்டு மணி நேரத்துள்ளும், சினாய், கோலான் குன்றுப் பகுதிகளில் இருபத்தி நான்கு மணி நேரத்துள்ளும் சேமப் படையினர் போர்முனையில் சண்டையிலீடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

சேமப்படையினரைத் திரட்டும் பொறுப்பைப் படை மனித வலுப் பிரிவே வகிக்கின்றது. வானொலியில் சங்கேத மொழிகளை ஒலிபரப்புவதன் மூலமும், சினிமாத் திரையிற் காட்டுவதன் மூலமும், தனிப்பட்ட முகவர்கள் மூலமும் அழைப்பு விடுக்கப்பட்டுச் சேமப்படையினர் திரட்டப்படுகின்றனர்.

இஸ்ரேலின் காப்புப் படையில் இரு பெரும் பிரிவுகளுண்டு. ஒன்று நிரந்தரப் படைப்பிரிவு (Sherut Quevah in Hebrew) மற்றையது சேமப்படைப்பிரிவு (Miluim).

நிரந்தரப் படையினர் இஸ்ரேலின் முதுகெலும்பு போன்றவர்கள். இவர்கள் இஸ்ரேலிய மக்கள் தொகையின் ஏழில் ஒரு பங்கினர். இப்படையணியில் 75–ஆம் ஆண்டு எண்பதினாயிரம் படையினர் இருந்தனர். இப்படையணியிற் தொழில்சார் மேலாளர் கோர்ப் (Professional - Officer Corps) அரச ஆணைபெறாத மேலாளர்கள், (Non Commissioned Officers) தொண்டர்கள், கட்டாயப் படைச் சேவையினர் என்போர் அடங்குவர்.

> இஸ்ரேலிய மக்களையும் படையையும் பிரித்துப் பார்க்க முடியாது. அவர்களும் பிரித்துப் பார்ப்பதில்லை. இஸ்ரேலின் இருப்பே, அதன் படை பலத்தில் தான் தங்கியுள்ளது. இஸ்ரேல் என்ற நாட்டின் இயக்க அச்சே அந்த நாட்டின் படைதான்

அகவை பதினெட்டிலிருந்து இருபத்தொன்பது வரையும் உள்ள எல்லா ஆண்களும் மூன்று ஆண்டுகள் கட்டாயமாகப் படையில் சேவை ஆற்றவேண்டும். பெண்களுக்கு இந்த அகவை எல்லை, பதினெட்டிலிருந்து இருபத்தாறு வரையாகும். அவர்கள் இரண்டு ஆண்டுகள் கட்டாயச் சேவை புரியவேண்டும். மற்றைய நாடுகளைப் போலல்லாமல் படை மேலாளர்களும் போர் வீரர்களைப் போலவே எல்லா வகையான வாழ்க்கைத் தொழில்களிலுமிருந்தும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மூன்று ஆண்டுகள் பணிபுரிய வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். இவ்வொப்பந்தத்தை இரு தரப்பில் எவரும் புதுப்பிக்கலாம்.

உயர் பதவி வகிப்போர் அகவை ஐம்பதில் ஓய்வு பெறுகின்றனர். ஆற்றலுள்ளவர்கள் மிகவும் இளவயதில் உயர்பதவிக்கு வரும் வாய்ப்புண்டு. ஆறு நாள் போரின்போது முதன்மைத் தளபதியாக இருந்த **இராபீனுக்கு** அப்போது அகவை நாற்பத்தொன்றாகும். (அண்மையில் இஸ்ரேலின் பிரதமராக இருக்கும்போது சுட்டுக் கொல்லப்பட்டார்) வான்படைத் தளபதி **மொடேக்கேய் கொட்டின்** அகவை நாற்பதாகும்.

## சேமப்படை

இப்படையணியே மிகவும் பெரியதாகும். இப்படையணியில் 75–ஆம் ஆண்டு இருநூற்றம்பதினாயிரம் (250,000) படையினர் இருந்தனர். இப்படையணி இரண்டு அகவைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற் பிரிவில் அகவை இருபத்தொன்றிலிருந்து அகவை முப்பத்தொன்பது வரை அடங்கும். இரண்டாம் பிரிவில் அகவை முப்பத்தொன்பதிலிருந்து நாற்பத்தினான்கு வரை அடங்கும். ஆறுநாள் போரின்போது போதிய மனிதவலு இல்லாத காரணத்தால் ஆண்களுக்கு அகவை ஐம்பத்தைந்து வரை கூட்டப்பட்டது. பெண்களுக்கு அகவை இருபத்தாறு வரை கூட்டப்பட்டது.

ஒழுங்கமைப்புப் பயிற்சித் திறன் காரணமாக சேமப்படையானது அணிதிரட்டப்பட்டதும் செயற்படக்கூடிய நிலையிலிருக்கும். சேமப்படையணியின் ஒவ்வொரு பிரிவும் சிறு எண்ணிக்கையில் தொழில்சார் வீரர்கள், கட்டளை மேலாளர்கள், எழுதுவினைஞர்கள், பராமரிப்புப் பணியாளர் என்பவர்களைக் கொண்டிருக்கும். எப்போதும் போருக்குத் தயாரான நிலையிலேயே பிரிவுகள் இருக்கும்.

இப்பிரிவைச் சேர்ந்தோர் ஒவ்வொரு ஆண்டும் மூன்று கிழமைகள் தொடர் பயிற்சியைப் பெறுவார்கள். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு திங்களும் இரண்டு நாள் பயிற்சி பெறுவார்கள். முதுநிலை அரச ஆணை பெறாத மேலாளர்களும், மேலதிகமாகக் குழுநிலைப் பயிற்சிகளையும் முழுமையான அறிவையும் செயற்பாட்டையும் பெற்றிருப்பர். எடுத்துக்காட்டாக 'டாங்கிக் குழுவில் உள்ளோர் அவற்றை இயக்கவும், பேணவும், திருத்தவும் ஆற்றல் பெற்றவர்களாக இருப்பார்கள்.

குறைந்த செலவில் பெரிய படையணியைப் பேணுவதற்கும் இம்முறை உதவுகின்றது.

ஆறுநாள் போரில் சினாய் முனையில் ஒரு பிரிவுத் தளபதியாகப் பணிபுரிந்த **ஏரிக் சரோன்** (Arik Sharon) தம் படைவீரர்கள் குறித்துக் கீழ்க்கண்டவாறு கூறினார். அவரின் கூற்றினூடாகச் சேமப்படையினரின் ஆற்றலை உணர்ந்து கொள்ள முடியும்.

"எங்கள் வீரர்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவர்கள் பொதுமக்கள் பயன்படுத்தும் வாகனங்களில், ஒழுங்கற்ற முறையில் ஆடையணிந்த நிலையில், பார்க்கும் போது ஒரு கும்பலைப் பார்ப்பது போல இருக்கும். ஆனால் அவர்கள் சிறந்த வீரர்கள், சிறந்த மேலாளர்கள்...... சிறைப்பிடிக்கப்பட்ட போர்க்கைதிகள் எம் வீரர்களைப் பார்த்து என்ன எண்ணியிருப்பார்கள் என எண்ணிப் பார்க்கிறேன். எம்படையினர் வீர உணர்வு மிக்கவர்கள். எம்படையில் நாம் "முன்செல்லுங்கள்" எனக் கூறுவதில்லை "பின்தொடருங்கள்" எனவே கூறுவோம். உயர்மட்டக் 'கொமாண்ட'ரில் இருந்து 'டிவிசன் கொமாண்டர்', 'பிரிகேட்', 'கொம்பனி கொமாண்டர்' வரை காட்டும் முன்னுதாரணம் தான் எம் வெற்றிக்கு முக்கிய காரணமாகும். 'டாங்கி'களும் 'ஆட்டிலறி'களும் நல்ல பயன்பாடுடையவை என்ற போதிலும், அவை வெற்றிக்குரிய காரணங்களாகா. எம்மிலும் பார்க்க எதிரிமிடம் சிறந்த 'டாங்கி'கள் உண்டு...... உண்மையில் அவர்களிடம் எம்மிடம் இருப்பதிலும் அதிக அளவிற் படைக் கலன்கள் இருந்தன. எப்படி இருந்தபோதும் எமது தளபதிகள் மிகச் சிறந்தவர்கள். இந்த வீரர்கள் சாதாரண வேளையில் ஒரு கடைச்சிப்பந்தியாக அல்லது ஆசிரியராகப் பணிபுரிபவர்களாக இருப்பார்கள். முதல்நாள் அப்படி இருப்பவர்கள் மறுநாட் சண்டையில் எதிரிகளைப் புயல்போலத் தாக்குவதை எப்படி விபரிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. இதற்குரிய காரணத்தை நான் படையிற் சேர்ந்த காலத்திலிருந்து புரிந்துகொள்ள முடிந்ததில்லை........ இந்த நாட்டின் உயிர்ப்பில் இருக்கும் பிடிப்பின் ஒரு தன்மையே அவர்களை இப்படிச் செயற்பட வைக்கின்றது போலும்." ✷

www.tamilarangam.net




### இலண்டன் ஊர்வலத்தில்......

# "சிறிலங்காப் படைகளே! தமிழீழத்திலிருந்து வெளியேறு! தமிழரைக் கோல்வதை நிறுத்து!"



தமிழீழ விடுதலைப் புலிகளிடம் முல்லைத்தீவில் அடைந்த வரலாறு காணாத இராணுவத் தோல்வியை மூடி மறைப்பதற்காக் கிளிநொச்சி குடிமக்கள் மீது சிறிலங்காப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான எறிகணை, விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களையும், உணவு–மருத்துவ தடைகளையும் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக, 17–08–96 சனிக்கிழமையன்று ஐக்கிய தமிழர் அமைப்பினால் (U.T.O) ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலத்தில் அணிவகுத்துச் சென்ற மக்களே, இக்கோசங்களை எழுப்பி சிறிலங்கா அரசின் தமிழினப் படுகொலைகளைக் கண்டித்தனர். மத்திய இலண்டன் Temple Place இலிருந்து தொடங்கிய இவ் ஊர்வலமானது, உல்லாசப் பயணிகள் அதிகளவில் கூடும் வீதிகளுக்கூடாகச் சென்று Hyde Park இல் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்துடன் நிறைவு பெற்றது. சுமார் 2000 தமிழ் மக்கள் வரையில் பங்கேற்ற இவ் ஊர்வலத்தில், கடும் வெயிலையும் பொருட்படுத்தாது சிறுவர்கள், வயோதிபர்கள், இளைஞர், யுவதிகள், குடும்பப் பெண்கள் எனப் பலதரப்பட்டவர்களும், பிரித்தானியாவிலுள்ள பல தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.



ஊர்வலத்தில் சென்றவர்கள் சிறிலங்கா அரசின் தமிழினப்படுகொலையைக் கண்டித்து நூற்றுக்கணக்கான பதாதைகளைத் தாங்கிச் சென்றதுடன், "விடுதலைப் புலிகள் எமது சுதந்திரப் போராளிகள்" "தமிழர்களின் தலைவர் பிரபாகரன்" போன்ற கோசங்களை மிக உணர்ச்சியுடன் எழுப்பிச் சென்றனர்.

ஊர்வலத்தின் முடிவில் ஏழு கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள், பிரித்தானியப் பிரதமருக்கும், இலண்டனிலுள்ள இந்தியத் தூதரகத்தின் ஊடாக இந்தியப் பிரதமருக்கும் சமர்ப்பிக்கப்பட்டது. "ஈழத் தமிழர்கள் ஒரு தேசிய இனம்; அவர்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள்" என்ற விடயங்கள் அம்மகஜரில் சிறப்பாக வலியுறுத்தப்பட்டன. Hyde Park இன் மத்தியில் நடைபெற்ற கூட்டத்தில், ஊர்வலத்திற்கான முக்கியத்துவம் மற்றும் தற்போதைய சூழ்நிலைகளைப் பற்றிய அறிக்கையொன்று விடுதலைப் புலிகளின் பிரித்தானியக் கிளை பிரதிநிதி திரு. சாந்தன் அவர்களால் வாசிக்கப்பட்டது. கூட்டத்தில் உரையாற்றிய குர்திஸ் விடுதலை இயக்கப் பிரதிநிதி, 'விடுதலை' என்ற அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதி, 'தமிழர் மனித உரிமைக் குழு' அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதி ஆகியோர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மைகளை எடுத்துக் கூறியதுடன் தமது ஆதரவி னையும் தெரிவித்து க்கொண்டனர். ✷

# திரு. முரளிதரனின் தடுப்புக்காவல் ஓர் அரசியல் சதி

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பிரதிநிதி திரு. நடராசா முரளிதரனை உடன் விடுதலை செய்யக் கோரி சுவிஸ் தமிழ் அமைப்புக்களின் சம்மேளனத்தினால் 16 .8 .1996 வெள்ளிக் கிழமை காலை 10. 30 மணிக்கு பத்திரிகையாளர் மாநாடு ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டது. இதில் திரு. முரளிதரனின் சட்டத்தரணி திரு. மார்சல் பொசனே, திருமதி. றஞ்சி முரளிதரன், திருமதி. பிறிகிற் மோர்கன்தாவர் சுப்பிரமணியம், திரு. கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இம் மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய திரு. அன்ரன் பொன்ராசா அவர்கள் தனது ஆரம்ப உரையில், "திரு. முரளிதரன் அவர்கள் நான்கு மாதங்களுக்கு மேலாகத் தடுப்புக் காவலில் உள்ளார். அவரது குற்ற விசாரணைகள் முடிவுற்ற போதிலும் தடுப்புக் காவல் நீண்டுகொண்டே போகிறது. இது ஒரு அரசியல் பின்னணியைக் கொண்டது" என்று சம்பந்தப்பட்டவர்களை குற்றம் சுமத்தினார். சுவிஸ் தமிழ் அமைப்புக்களின் சம்மேளன அறிக்கையை திரு. சிவசுப்பிரமணியம் சிவாஜி அவர்கள் வாசித்தார். இதில், "திரு. முரளிதரனை உடனடியாக விடுதலை செய்யவேண்டும். இவர்மேல் சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் பற்றிய விசாரணைகள் முடிவடைந்ததும் இவர் மேல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாது காலம் கடத்துவது ஏன்? இவர்மேல் குற்றம் ஒன்றும் கண்டுபிடிக்க முடியாமல் தடுப்புக் காவலில் இருக்கும் காலத்தை நீட்டுவது நீதிக்கு முரண்பாடான விடயம் என்பதுடன், இது சிறிலங்கா அரசின் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைக்குத் துணைபோகும் விடயமாகும். அரசியல் தஞ்சம் கோரி வந்தவர்களை நெருக்கடிக்குள்ளாக்குவது மனிதாபிமானமற்ற செயல். தாயகத்தில் சிறிலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான இராணுவ நடவடிக்கைகள் பல இலட்சம் மக்களை நிர்க்கதியாக்கியுள்ளது. இம் மக்களுக்கு உதவுவதைக்கூட தடுக்கும் சிறிலங்கா அரசைக் கண்டிப்பதை விடுத்து, சுவிஸ் நாட்டில் வாழும் தமிழருக்கு எதிரான அரசியல் நடவடிக்கை, நீதிக்கும் மனித நேயத்திற்கும் முரண்பட்டதாகும். சுவிஸ் ஒரு நடுநிலையான நாடு. போராடிச் சுதந்திரம் பெற்ற நாடு. தன் நடுநிலையையும் விடுதலையையும் மதித்து மக்கள் பிரதிநிதியாகிய திரு. முரளிதரன் அவர்களை உடன் விடுதலை செய்யவேண்டும். அவரது உதவிகள் தமிழ் சமூகத்திற்கு இன்றியமையாதது. அதனால் உடனே அவரை உடனே விடுதலை செய்யவேண்டும்" கேட்டுக்கொள்ளப்பட்டது.

திருமதி. முரளிதரன் அவர்கள் பேசுகையில், "எனது கணவர் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி அதிகாலை 1 மணிக்கு கைது செய்யப்பட்டார். பின் காலை 6 மணிக்கு, நானும் பிள்ளைகளும் உறங்கிக்கொண்டிருந்த வேளையில், கோடரியால் கதவுகளை உடைத்து, முகமூடி அணிந்து துப்பாக்கிகள் சகிதம் உள்நுழைந்த குழு ஒன்று எம்மைத் துப்பாக்கி முனையில் இருத்திவிட்டு, வீடு முழுவதையும் சல்லடை போட்டுத் தேடியது. 2 மணிநேரத்தின் பின்னரே இக்குழு தம்மைப் பொலிஸ் என்று அறிமுகப்படுத்தியது. இது நடந்த போது நான் 9 மாதக் கர்ப்பிணி. எனது கணவர் கைது செய்யப்பட்டு 5 மணித்தியாலங்களின் பின் ஏன் இந்தக் 'கொமாண்டோப் பாணியிலான தேடுதல்? எனது கணவர் தேச விடுதலைக்காய் முழுமையான பணியை ஆற்றுகிறார். அவர் எந்தவித சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதில்லை. அவர் குற்றமற்றவர். அவரை உடன் விடுதலை செய்யக்கோருகிறேன்" எனக் கோரினார்.

தொடர்ந்து, தேவாலய அமைப்பில் வெளிநாட்டவர்க்காகப் பணிபுரியும் திருமதி. பிறிகிற் மோர்கன்தாலர் சுப்பிரமணியம் பேசுகையில், "நான் பீல் என்ற நகரில் பல ஆண்டுகளாக வசித்து வருகிறேன். எனக்கு அங்கேயுள்ள பல தமிழரைத் தெரியும். எனக்குத் தெரிந்தவரை தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளை யாரிடமும் வற்புறுத்தியோ வன்முறையிலோ பணம் சேகரிப்பதில்லை. அத்துடன் திரு. முரளிதரன் அவர்களையும் அவர் தமிழ் மக்களுக்கு ஆற்றும் பணிகளையும் நான் நன்கு அறிவேன்" எனவும் குறிப்பிட்டார்.

திரு. முரளிதரன் அவர்களின் சட்டத்தரணி திரு. மார்சல் பொசனே கருத்துக் தெரிவிக்கையில் "திரு. முரளிதரன் மேல் குற்றம் சுமத்திய 'பானொங் கால்' என்ற கூட்டத்திலுள்ளோரின் சாட்சியங்கள் சரியானவை அல்ல. அவர்களின் மீதே பல குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. அவை இன்னும் விசாரிக்கப்படவில்லை. ஆகவே, அவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பது அரசியல் பின்னணியைக் கொண்டிருக்கலாம். அத்துடன், நான் அடுத்த கட்ட நடவடிக்கையில் இறங்கப்போகிறேன்" எனத் தெரிவித்தார். பின்னர் பத்திரிகையாளரின் கேள்விகளுக்கு திரு. பொசனே பதிலளித்தார். ✷

## தியாகதீபம் திலீபனின் நினைவுடன் தொப்புள் கொடி உறவுக்காக 15 நாட்கள்

பிரித்தானியா வாழ் தமிழீழ மக்களே!

உங்களுடன் ஒரு நிமிடம்!

*இரண்டு வார மக்கள் தொடர்புத் திட்டம்:*

நாம் அனைவரும் போராட்ட ஆதரவுச் செயற்பாட்டுடன் எம்மை இணைத்துக் கொள்ளும் நடைமுறையினை விரிவுபடுத்தும் நோக்குடன் லண்டன் வாழ் மக்கள் அனைவரையும் இருவாரங்களிற்குள் வீடு வீடாகச் சென்று சந்திப்பதென நாம் முடிவு செய்துள்ளோம். இச்சந்திப்பு 15–09–96 முதல் 29–09–96 வரை இடம்பெறும். போராட்டத்துடன் மக்கள் அனைவரும் இணைக்கப்பட வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாகச் செயற்பட்ட லெப். கேணல் திலீபனின் நினைவுடன் இத்திட்டத்தினை நாம் செயற்படுத்துகிறோம். இதனால் திலீபன் தனது நீர்கூட அருந்தாத, சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்த தினத்தின் (15–09–87) 9வது வருட நினைவு நாளில் இத்திட்டத்தினை ஆரம்பிக்கிறோம்.

✷ 15 – 09 – 96 காலை 10 மணி முதல் எமது தொண்டர்கள் வீடு வீடாக வந்து உங்களைச் சந்திப்பார்கள்.

✷ தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சர்வதேசச் செயற்பாடுகளை விரிவுபடுத்துவது தொடர்பாகவும், விடுதலைப் புலிகளின் பிரித்தானியக் கிளையின் செயற்பாடுகளை விஸ்தரிப்பது தொடர்பாகவும் உங்கள் கருத்துக்களை–ஆலோசனைகளை எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ – வருகைதரும் தொண்டர்களிடம் தெரிவியுங்கள்.

✷ போராட்ட ஆதரவுச் செயற்பாடுகளுடன் இணைந்து செயற்பட விரும்புவர்கள் எத்துறையில் இணைந்து செயற்பட விரும்புகிறீர்கள் என்பதனையும், ஒருவாரத்தில் எவ்வளவு நேரத்தினை ஒதுக்க முடியும் என்பதனையும் தெரிவியுங்கள்.

✷ எமது மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் துன்பங்களைப் போக்கவும், உங்கள் வீடுகளுக்கு வருகைதரும் தொண்டர்களால் விற்பனை செய்யப்படும் பங்களிப்புச் சீட்டுக்களை 100 பவுணுக்கு குறையாத தொகைக்குப் பெற்று எமது மக்களின் எதிர்கால வாழ்வுக்கு பங்களியுங்கள்.

தொடர்புகட்கு: UTO, 211 Katherine Road, London E6 1BU. ☎ 0181-503 4294

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குண்டெறிந்து கொன்றவனுக்கு தண்டனை இது

ஊரிருந்த புலிவிரட்டிக் காட்டுப் பக்கம்
ஓடவைத்தோம்; யாழ்ப்பாண மண்ணில் மீண்டும்
வேர்பிடித்தோம்; வீசுகின்ற காற்றில் சிங்கம்
விளங்குகின்ற கொடி பறக்கச் செய்தோம்; அங்கு
தேரிழுத்தோம் என்றவனே! வேங்கை வீரம்
செயலிழந்து போகாதென் றெங்கள் வீரர்
பார் உனக்கும், உலகுக்கும் காட்டி உந்தன்
பாசறைமேற் பாய்ந்தார்கள் இனியென் செய்வாய்?

“பொங்கு அலை”, “நெருப்பு மழை” என்றீர்; எம்மைப்
பொசுக்கிடுவோம் என்றும் நீர் புலம்பிக் கொண்டீர்.
எங்கே போய் இருந்திடுவீர்? வன்னிக் காட்டின்
இடைபுகுந்தும் புலியடிப்போம் என்றீர்; இன்று
சிங்களமே! நீயிருந்த குகையின் மேலே.......
தீயெழுந்து கொண்டது பார்; தமிழன் வீரம்
சங்கையுடன் நிமிர்ந்ததுபார்; தடைகள் யாவும்
சரிந்ததுபார்; சொல்பகையே இனியென் செய்வாய்?

கூடிருந்து குஞ்சுடனே வாழ்ந்த கொம்பைக்
கொத்தியவா! தலைமுறையாய் இருந்த எங்கள்
வீடிருந்து விரட்டியவா; உறவை யெல்லாம்
விழிகலங்க வைத்தவனே! உனது வீடே
ஆடியது; புலிமறவர் புகுந்த போதில்
அலறியது; அடபகைவா! தமிழர் வீரம்
ஈடிணைக எற்றதென அறிந்தாய்; இன்னும்
இருக்குதடா விளையாட்டு இனியென் செய்வாய்?

குண்டெறிந்து கொன்றவனே! வெட்டிப் பச்சைக்
குருதியிலே...... குளித்தவனே! உனக்கு நேற்று
தண்டனையைத் தந்தாரெம் புலிகள்; போதும்.
“தமிழர்களைத் தொடுமெவனும் செத்தான்” என்ற
பொன்மொழியை எம் தலைவன் சொன்னான்; சொன்ன
புதுமொழியை உண்மையென உணரச் செய்தான்.
இன்னுமிங்கே இருப்பாயா? இருந்து பாரேன்
இடியுனது தலைமீது விழுமென் செய்வாய்?


**– புதுவை இரத்தினதுரை**



முல்லை இராணுவமுகாம் தாக்குதலை வழி நடாத்திய தளபதி பால்ராஜ் அவர்கள், பெண் போராளிகளுக்குத் தாக்குதல் திட்டத்தை விளக்குகின்றார்.



முல்லை இராணுவமுகாமில் கைப்பற்றிய ஆயுதங்களில் ஒரு பகுதியைப் புலிவீரர்களும் பொதுமக்களும் கடல் வழியாகக் கரை சேர்க்கின்றனர்.





முல்லை இராணுவமுகாமில் கைப்பற்றிய ஆட்டிலறிகளுடன் புலிவீரர்கள்.


T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-9463
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 580 8224


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்